கம்பனின் அரசியல் கோட்பாடு

டாக்டர். எஸ். அப்துல் ரகுமான்

கம்பன் கழகம் சென்னை

கம்பனின் அரசியல் கோட்பாடு

[அமரர் ஏவி. எம். அறக்கட்டளை
நினைவுச் சொற்பொழிவு-1990]

டாக்டர் எஸ். அப்துல் ரகுமான்

வெளியீடு :
கம்பன் கழகம்
சென்னை-85

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1990

முதற்பதிப்பின் விற்பனை உரிமை :

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை-600 017

விலை : ரூ. 15-00

(இந்நூலின் முதற்பதிப்பு மட்டும்
ஏவி. எம் அறக்கட்டளை
நிறுவனத்தாரால் வெளியிடப்படுகிறது.)

மேலட்டை ஓவியம் : உகி

அச்சிட்டோர் :

ஸ்ரீ கோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

பதிப்புரை

சென்னைக் கம்பன் கழகம் 1975 இல் நிறுவப் பெற்றது. திரு ஏவி. மெய்யப்பன் அவர்கள் 12-8-1979 அன்று இயற்கை அடைந்தமை வரையில், கழகத்தின் துணைத் தலைவர்களுள் ஒருவராக இருந்து வந்தார்கள்.

சினிமாத் துறையில் பெரும் பெயர் பெற்றிருந்த அவர்கள், கம்பன் கழகத்தோடு தொடர்பு கொண்டதி லிருந்து கழகத்தின் வளர்ச்சியிலும், கம்பனுடைய கவி நயத்தைப் பருகுவதிலும், முழுமையான ஈடுபாடு கொண் டிருந்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் தாம் தலைவராக இருந்த ஏவி. எம். அறக்கட்டளையினுடைய ஏவி.எம் இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் கம்பன் விழா நிரந்தரமாக நடைபெறுவதற்கு வழி வகுத்ததோடு, கழகத்திற்கு அவ்வப்போது தேவையான உதவிகள் அனைத்தையும் நிறைந்த உள்ளத்துடனும், மட்டற்ற மகிழ்ச்சியுடனும் செய்து வந்தார்கள்.

அன்னாருடைய மறைவுக்குப்பின், அமரர் ஏவி. எம். அவர்களின் குடும்பத்தினர், அதே ஈடுபாட்டையும் அக்கறையையும் காட்டி வருகிறார்கள். அமரர் ஏவி. எம். அவர்களுடைய நினைவில் ஆண்டுதோறும் கம்பனைப் பற்றிச் சென்னைக் கம்பன் கழகத்தின் ஆதரவில், ஒரு நினைவுச் சொற்பொழிவு நடக்கவேண்டுமென்று விரும்பி, அதற்காக ஆவன செய்வதற்கு முன் வந்தார்கள்.

அந்தத் திட்டத்தின்படி அமரர் ஏவி. எம். அவர்களின் இவ்வாண்டின் (ஏழாம் ஆண்டைய) நினைவுச் சொற் பொழிவு 1990ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 28, 29

தேதிகளில் ஏவி. எம். இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

சொற்பொழிவை டாக்டர் எஸ். அப்துல்ரகுமான் அவர்கள், ''கம்பனின் அரசியல் கோட்பாடு'' என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள்.

முதல் நாளான 28-7-90 சனிக்கிழமை அன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நிருவாக இயக்குநர் திரு ஏ. நமசிவாயம் அவர்கள் தலைமை ஏற்றுத் தொடங்கி வைத்தார்கள்.

இரண்டாம் நாளான 29-7-90 ஞாயிற்றுக்கிழமை அன்று, திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

இந்த நினைவுச் சொற்பொழிவின் நூல் வடிவமே இது. இதனை நூல் வடிவாக்கி, அச்சிடும் பொறுப்பையும் அமரர் ஏவி. எம். குடும்பத்தினரே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சொற்பொழிவினை ஏற்பாடு செய்து, அதனைக் கம்பன் கழகத்தின் மூலம் நிறைவேற்றிய, ஏவி. எம். குடும்பத்தார்க்கு எங்கள் மனம் கனிந்த நன்றி.

கம்பன் கழகத்தார்
சென்னை

10-8-1990

முன்னுரை

கம்பனைப் பயிலும் போதெல்லாம் அவன் கவிதைத் திறன் மட்டுமன்றி அவனுடைய அரசியல், சமூகக் கருத்துக்கள் என்னை வியப்பில் ஆழ்த்துவதுண்டு. அந்தக் கருத்துக்கள் அவன் காலவுணர்வுக்குள் கட்டுப்பட்டுக் கிடக்காமல், அவனுக்குப் பின்னால் எத்தனையோ நூற்றாண்டுக் காலம் கடந்து, தோன்றிய புதிய முற்போக்குக் கருத்துக்களோடு ஒத்திருந்ததே என் வியப்புக்குக்காரணம். அவனுடையஅரசியல்கருத்துக்களை யெல்லாம் தொகுத்து ஆராய வேண்டும் என்ற ஆசை எனக்கு அடிக்கடி எழுவதுண்டு. எப்போதும் பல்வேறு பணிகளின் நெருக்கடியில் சிக்கிக் கொள்ளும் என்னால் இந்த ஆசையை நிறைவேற்ற முடிந்ததில்லை. இந்நிலையில் 1990 ஆம் ஆண்டுக்கான அமரர் ஏவி. எம். அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவு ஆற்றும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததும் இந்த ஆசையை நிறைவேற்றத் துணிந்தேன். அதன் விளைவே இந்நூல்.

கம்பன் தன் பாடுபொருளாகத் தேர்ந்த இராமாயணக் கதை அரசியல் நிகழ்ச்சிகளையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. அவன் இந்நிகழ்ச்சிகளைக் கையாளும் முறையிலிருந்து அவன் இவற்றைத் திறனாய்வுப் பார்வையில் அணுகியிருக்கிறான் என்று தெரிகிறது. கதையில் வரும் கோசலம், கிட்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று முடியாட்சிகளிலும் அவன் குறைகளைக் காண்கிறான். இவ்வகையில்

ஓர் அரசியல் கோட்பாட்டாளனாகச் செயல்படுகிறான். அதே நேரத்தில் ஓர் அரசியல் தத்துவஞானியாகவும் நின்று ஓர் இலட்சிய அரசு எப்படி இருக்க வேண்டும் என்றும் அவன் விளக்குகிறான். இக்கருத்துக்கள் எல்லாம் கம்ப னுக்கு என்று தனித்ததோர் அரசியல் கோட்பாடு இருப்பதை உணர்த்துகின்றன. அக்கோட்பாட்டை இனம் காண்பதே இந்நூலின் நோக்கமாகும்.

கம்பன் மூலக் கதையில் பல மாற்றங்களைச் செய்தி ருப்பது நாம் அறிந்ததே. அந்த மாற்றங்களுக்கு வான் மீகியோடு முரண்பட்ட அவனுடைய அரசியல் கோட்பாடும் ஒரு காரணம் என்பதை இந்த ஆய்வினால் அறிய முடிந்தது.

கம்பன் அரசியல் பற்றிய அவன் காலத்துக் கருத்துக்க ளோடு பலவகையில் மாறுபடுகிறான். அவன் கொண்டி ருக்கும் கோட்பாடு அவனை ஒரு புரட்சியாளனாகவும், எதிர்காலத்தின் முற்போக்குக் கொள்கைகளை முன்னுணர்ந்த தொலைக் காட்சியனாகவும் காட்டுகிறது. இந்நூலில் இதை விளக்க முயன்றிருக்கிறேன். மிகக் குறுகிய காலத்தில் செய்ய நேர்ந்ததால் இதை முழுமை யான முயற்சியாக நான் கருதவில்லை.

இந்நூல் 'புல்லரசு', 'நல்லரசு' என்ற இரு பகுதிகளாக அமைந்திருக்கிறது. முதற் பகுதி கோசலம், கிட்கிந்தை, இலங்கை என்ற மூன்று அரசுகளிலும் கம்பன் கண்ட குறைகளை உணர்த்துகிறது. இரண்டாம் பகுதி அவனுடைய இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களை ஆராய்கிறது.

அமரர் ஏவி.எம் அறக்கட்டளையினர் இந்த வாய்ப்பை எனக்குஅளித்திராவிட்டால் இந்நூல் உருவாகி யிருக்குமா என்பது ஐயமே. எனவே அறக்கட்டளையைச் சார்ந்த ஆன்றோர்களுக்கு என் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்துல் ரகுமான்

புல்லரசு

அரசியலின் இன்றியமையாமை

மனிதன் இயல்பாகவே கூடி வாழும் குணம் உடைய வன். பொதுவாகத் தனித்து வாழ்வதை அவன் விரும்புவ தில்லை. இதனால் அவன் சமூக உயிரி (social animal) எனப்பட்டான். இந்த இயல்பு மட்டும் அல்லாமல் அவனுடைய வாழ்க்கைத் தேவைகளும் பிறரோடு கூடி வாழ அவனைக் கட்டாயப்படுத்துகின்றன. ஏனெனில் மனிதன் தன் வாழ்க்கைத்தேவைகளைத் தனியொருவனாக நிறைவேற்றிக் கொள்ள முடிவதில்லை. இந்த இரண்டு காரணங்களால் மனிதன் பிறரோடு கூடி வாழும் சமூக வாழ்வை ஏற்படுத்திக்கொண்டான்.

சமூகமாகப் பலர் கூடி வாழும்போது சிக்கல்கள் தோன்றுவது இயல்பே. இச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளவும், ஒருவரோடு 'ஒருவர் கொள்ளும் பல்வேறு வகையான தொடர்புகளை ஒழுங்குபடுத்தவும் சட்ட திட்டங்கள் தேவைப்பட்டன. இச்சட்ட திட்டங்களை உருவாக்கவும் அவற்றைச் செயல்படுத்தவும் ஓர் அமைப்பு வேண்டியதாயிற்று. இவ்வமைப்பே அரசாங்கம் (Government) எனப்பட்டது. அரசாங்கத்தைப் பெற்ற ஒரு சமூகம் அரசு (State) என அழைக்கப்பட்டது.

சமூகமும் அரசும் இன்றி ஒரு மனிதனால் அமைதி யாகவும், பாதுகாப்பாகவும் வாழ முடியாது; வளர்ச்சி அடையவும் முடியாது. இந்த உண்மையை உணர்த்தும் வகையில், மனிதன் இயல்பாகவே ஓர் அரசியல் உயிரி என்றும் அவன் அரசு இல்லாமல் இருப்பானாயின் ஒன்று

மனிதத் தன்மைக்கு மேலானவனாக இருக்க வேண்டும் அல்லது கீழானவனாக இருக்க வேண்டும் என்றும் கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் கூறியிருக்கிறார். அரசைப் பெறாத சமூகம் அகப் புறப் பரிணாம வளர்ச்சியை அடைய முடிவதில்லை.

அரசியல்: பெயரும் வரைவிலக்கணமும்

தமிழில் 'அரசியல்' எனப்படுவதை வடநூலார் 'ராஜதர்ம' என அழைத்தனர். தொன்மையான ஸ்மிருதிகள் காலத்திலேயே இச்சொல் வழக்கிற்கு வந்துவிட்டது. அரசனின் அனைத்துக் கடமைகளையும் இச்சொல் குறித்தது. 'ராஜா' என்பதற்குத் தன் குடிமக்களுக்கு மன நிறைவைத் தருபவன் என்று மகாபாரதம் பொருள் கூறுகிறது (XII 59). 'க்ஷத்ரியதர்ம' என்றும் மகாபாரதம் இதனைக்குறிக்கிறது. 'க்ஷத்ரிய' என்பதற்குப் 'பிராமணர்களைக் காப்பவன்' என்று அது பொருள் கூறுகிறது (மே. கு.). பௌத்த நூல்கள் இதை 'கத்தவிஜ்ஜா' (அரச வித்தை) என்றும், 'கத்ததம்ம' (அரசதருமம்) என்றும் வழங்கின. வான்மீகி இதை 'க்ஷத்ரவித்யா' என்றும், 'க்ஷத்ரதர்ம' என்றும் அழைக்கிறார். கம்பன் 'அரசியல்', 'கோவியல்' என்ற சொற்களைக் கையாளுகிறான்.

வடநூலார் கொள்கைப்படி அரச தருமம் என்பது அனைத்துலகப் பாதுகாப்பையும், மனித நோக்கங்களின் முழு நிறைவையும் உறுதி செய்யும் அடிப்படையான சமூக, அரசியல் கொள்கை என்றும் ஒழுக்கப் பார்வையில் மனிதச் செயற்பாடுகளிலேயே முழு நிறைவானது என்றும் கருதப் பட்டது.

அரச தருமம் அனைத்து உயிர்களின் அடைக்கலமாக விளங்குவது என்றும், அறம், பொருள், இன்பம் என்ற மூன்று உறுதிப் பொருள்களையே அன்றி வீட்டையும் தருவது என்றும் மகாபாரதம் (XII 63. 24) கூறுகிறது. மற்ற வருண தருமங்கள் சிறிது பயனையே தர, அரச

தருமம் பெரும் பயன் தருவது என்றும், மற்ற தருமங்கள் அரசதருமத்திற்குள் அடங்கிவிடும் என்றும், அதனால் அரச தருமமே தலைமையானது என்றும் அது அரசியலை உயர்த்திப் பேசுகிறது (மே. கு.).

அரசியலை 'அர்த்தசாஸ்த்ரம்' என்று வடநூலார் பின்னால் அழைக்கலாயினர். 'அர்த்த' என்பது மனித வாழ்க்கைக்கான வழிவகை (வ்ருத்தி) என்று பொருள்படும் எனக் கௌடில்யர் (XVI) கூறுகிறார். மற்றொரு வகையில் 'அர்த்த' என்பது மனிதர்கள் நிறைந்த பூமியைக் குறிக்கும் என்றும், 'அர்த்தசாஸ்த்சம்' என்பது நிலத்தை அடைவதற்கும், காப்பதற்கும் உரிய முறைகளைக் கூறுவது என்றும் அவர் விளக்குகிறார் (மே. கு).

ஆங்கிலத்தில் 'அரசியல்' 'பாலிடிக்ஸ்' (Politics) என்று அழைக்கப்படுகிறது. இச்சொல் 'போலிஸ்' (Polis) என்ற கிரேக்கமூலச்சொல்லிலிருந்துதோன்றியதாகும். 'போலிஸ்' என்ற கிரேக்கச் சொல் தொடக்கத்தில் கிரேக்க நாட்டிலிருந்த 'நகர அரசை'க் (City-state) குறித்தது. பிற்காலத்தில் அரசு, அரசாங்கம் பற்றிய அனைத்துப் பொருள்களைப் பற்றியும் குறிக்கும் வகையில் ஒரு பரந்த பொருளுடைய சொல்லாகிவிட்டது. இக்கால நடைமுறைக்கேற்ப, பாலிடிக்ஸ் என்ற சொல்லுக்குப் பொருள் விளக்க வந்த கில்கிறைஸ்ட் என்ற அரசியல் அறிஞர், அரசியல் என்பது இக்காலத்தில் பண்பில் மிகுதியும் பொருளியல் தன்மையும், அறிவியல் பொருளில் அரசியல் தன்மையும் கொண்ட அரசாங்கத்தின் நடப்புப் பிரச்சினைகளைக் குறிக்கும் என்று கூறுகிறார். இச்சொல் பொதுவாக ஊர், நகர், மாநிலம், நாடு, உலகம் ஆகியவற்றின் அரசியல் பிரச்சினை பற்றிய அறிவியலாகப் பொருள் கொள்ளப் படுகிறது.

தமிழில் அரசியல் என்பது அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருள்கள் மூன்றனுள் பொருளின் பகுதி

யாகக் கூறப்படுகிறது. திருக்குறள் பொருட்பாலுக்கு எழுதிய முன்னுரையில் அரசியலை அரசனீதி என்று பரிமேலழகர் குறிக்கிறார். அதற்குக் 'காவலை நடாத்தும் முறைமை' என்று அவர் விளக்கம் தருகிறார்.

அரசியல் கோட்பாடு

அரசியல் பாட விளக்கம் பொதுவாக, 'அரசியல் கோட்பாடு' (Political theory), 'அரசியல் நிறுவனங்கள்' (Political institutions) என்ற இரு பகுதிகளைக் கொண்டது. 'அரசியல் கோட்பாடு' என்பது அரசின் தன்மை, பரிணாமம், இறுதிப் பயன் ஆகியவை தொடர்பான எல்லா வகைக் கோட்பாடுகளையும் ஆராய்கிறது. 'அரசியல் கோட்பாடும்' 'அரசியல் தத்துவமும்' (Political philosophy) சிலரால் ஒன்றாகக் கருதப் படினும் இவை இரண்டிற்கும் இடையே வேறுபாடு உண்டு. 'அரசியல் கோட்பாட்டியல்' என்பது அரசியல் அறிவியலாரின் (Political scientist) கோட்பாட்டியல் செயலைக் (theoretical work) குறிக்கும். 'அரசியல் தத்துவம்' என்பது அரசியல் தத்துவஞானிகளின் கோட்பாட்டியல் செயலைக் குறிக்கும். அரசியல் கோட்பாட்டியல் தெளிவான உண்மைகளுடன் தொடர்பு கொண்டு அறிவியல் தன்மை பெற்று விளங்கும். இதனுடைய நோக்கம் பொதுவான விளக்கக் கோட்பாடுகளையோ அல்லது தற்கோள்களையோ ஏற்படுத்துவதாகும். அரசியல் தத்துவம் என்பது ஒரு சித்தாந்தமாகக் காட்சி அளிக்கிறது. அரசியல் கோட்பாட்டியல் அரசையும் அரசாங்கத்தையும் பற்றிய உண்மையான நிலையை ஆராய்கிறது. அரசியல் தத்துவமோ இவை இரண்டும் என்ன என்ன செயல்களைச் செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கோள் நிலையில் கற்பனையாக விளக்க முயல்கிறது. அரசியல் கோட்பாடு அரசியல் வரலாற்று முறையினையும், அரசு எவ்வாறு நெறியுடன் செயல்பட வேண்டும் என்பதைப் பற்றியும்

கூறுகிறது என்று அரசியல் அறிஞர் கெட்டல் (Gettell) கூறுகிறார்.

கம்பனின் குறியிலக்கு எல்லை

அரசறிவியலின் குறியிலக்கு எல்லை (Scope) பற்றி விளக்க வந்த அறிஞர் கெட்டல் அரசறிவியல் (Political science) அதன் வரலாற்றுத் தன்மையில் அரசின் தோற்றம் பற்றியும் இறந்த காலத்தில் அரசியல் கோட்பாடுகளின் வளர்ச்சி பற்றியும் ஆராய்கிறது என்றும் நிகழ்காலம் பற்றி ஆராயும் போது வாழ்ந்துவரும் அரசியல் நிறுவனங் களையும், கருத்துக்களையும் வகைப்படுத்தி விளக்க முயல் கிறது என்றும், அரசறிவியல் எதிர்காலத்தையும் நோக்கி மாறிவரும் நிலைமைகளுக்கும், அறிவியல் தரங்களுக்கும் ஏற்ப வளர்ச்சி அடையும் அரசியல் அமைப்புக்களையும் செயற்பாடுகளையும் ஆராய்கிறது என்றும் கூறுகிறார். கம்பன் இந்த மூன்று நிலைகளிலும் தன் கருத்துக்களைத் தெரிவிக்கிறான்.

கம்பன் இராமாயணக் கதையைத் தன் காப்பியத்தின் பாடுபொருளாகத் தேர்ந்தெடுத்ததற்கு வேறு சில காரணங்கள் உண்டெனினும் தன் அரசியல் கோட்பாடு களை வெளிப்படுத்துவதற்கும் அக்கதை வாய்ப்பளிக்கிறது என்பதும் ஒரு காரணம் ஆகும். வான்மீகி இராமாயணத் தைக் கற்போர் உண்மையாகவே அரசமைப்பியலை அறிகின்றனர் என வட பாடாந்தரங்களில் காணப்படும் செய்யுள் ஒன்று தெரிவிப்பதிலிருந்து வான்மீகி தன் காப்பியத்தில் அரசியலுக்கு அளித்துள்ள முக்கியத் துவத்தை அறிந்து கொள்ளலாம். கம்பனும் அதே முக்கியத்துவத்தை அரசியலுக்கு அளித்திருக்கிறான். ‘இலங்கை மூதூர் செற்றவன் விசயப் பாடல் தெளிந்து, அதில் ஒன்று தன்னைக் கற்றவர்...பார் மேல் உற்று அரசு ஆள்வர்’ என்றும், ‘நற்காதை முற்றும்... கற்றோர் ...கனைகடல் புடவி மீது காவலர்க்கு அரசாய்

வாழ்வர்' என்றும் கூறும் கம்பன் நூற்பயன் சொல்லும் பாடல்களிலிருந்து இதனை அறியலாம்.

இராமாயணக் கதை பெரிதும் அரசியல் நிகழ்ச்சிகளையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. அரசியல் தொடர்பு உடையவர்களே கதையின் தலைமை மாந்தர்களாக அமைந்துள்ளனர். காப்பியக் கதை கோசலம், கிட்கிந்தை, இலங்கை என்னும் மூன்று அரசுகளோடு தொடர்பு கொண்டிருக்கிறது. முறைப்படி அரசுரிமை பெற வேண்டிய தயரதனின் மூத்த மகனாகிய இராமன் அவனுடைய மாற்றாந்தாயான கைகேயியின் சூழ்ச்சியால் அரசுரிமை இழந்து காடு செல்ல நேர்கிறது. கோசலத்தில் உருவான இந்த அரசியல் சிக்கல் கதையின் நிகழ்ச்சிப் போக்கால் கிட்கிந்தையிலும் இலங்கையிலும் அரசியல் விளைவுகளை உண்டாக்குகிறது.

மூலக்கதை மூன்று அரசுகளைப் பற்றி விரிவாகப் பேசும் வாய்ப்பைக் கம்பனுக்கு அளிக்கிறது. கம்பன் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மூன்று அரசுகளைப் பற்றியும் திறனாய்வு செய்கிறான். படைப்பாற்றலும், தனித்துவமும், தனக்கெனத் தனித்ததோர் சமூகவியல் பார்வையும்உடைய கவிஞன் தான் கையாளும் கதையில் தன் கருத்துக்களைக் கலவாமல் இருக்க முடியாது. கம்பனும் மூலக்கதை தரும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தன் அரசியல் கோட்பாடுகளைப் புலப்படுத்துகிறான். தன் கோட்பாடுகளுக்கேற்ப மூலக் கதையில் சில மாற்றங்களைச் செய்யவும், வேண்டாததை நீக்கவும், வேண்டியதைச் சேர்க்கவும் அவன் தயங்கவில்லை. கவிக் கூற்றாகவும், கதை மாந்தர் கூற்றாகவும் கம்பன் தன் கருத்துக்களைக் கூறுவதோடு நிகழ்ச்சிகளின் வாயிலாகவும் உய்த்துணரும் வகையில் சில கருத்துக்களை அமைத்திருக்கிறான்.

மூலக் கதையின் மூன்று அரசுகளும் முடியாட்சியைக் கொண்டவை. இந்த மூன்று முடியாட்சிகளையும் கம்பன்

திறனாய்வுப் பார்வையில் அணுகி அவற்றின் குறைகளை யும் சுட்டிக் காட்டுகிறான். இடையிடையே ஒரு நல்லரசின் பண்புகளையும் விளக்குகிறான். அவன் கனவு கண்ட எதிர்கால இலட்சிய அரசு பற்றியும் அவன் குறிப் பிடுகிறான். இந்த வகையில் அரசியல் கோட்பாட்டைக் கூறும் அரசியல் அறிஞனாகவும், அரசியல் தத்துவத்தைக் கூறும் தத்துவ ஞானியாகவும் கம்பன் காணப்படுகிறான்.

கோசலம், கிட்கிந்தை, இலங்கை என்னும் மூன்று அரசுகளிலும் ஏற்பட்ட குழப்பங்களுக்கும் சிக்கல்களுக்கும் அரசியல் நெறிகளின் சீரழிவு மட்டுமின்றித் தனிமனித பலவீனங்களும் காரணம் என்பதைக் கம்பன் புலப்படுத்து கிறான். முடியாட்சி வரம்பிலா அதிகாரங்களைத் தனி மனிதனின் கையில் குவிப்பதால் தோன்றக்கூடிய தீமை களையும் அவன் சுட்டிக் காட்டுகிறான். அரசு பற்றி உன்ன தமான கருத்துக்களைக் கொண்டிருக்கும் கம்பனுக்கு இந்த மூன்று அரசுகளுமே வெவ்வேறு வகையில் புல்லரசுகளா கவே தோன்றுகின்றன.

கோசலப் பேரரசு

வான்மீகியின் வருணனைப்படி சரயு நதி தீரத்தில் அமைந்திருந்த கோசலம் ஒரு பேரரசாகத் திகழ்ந்தது. அதனை ஆண்ட தயரதன் அரசர்க்கு அரசன் எனப்பட்டான். அவனுடைய அரசு கோசல நாட்டுக்கு அப்பாலும் பரந்து விரிந்திருந்தது. அவன் ஆட்சியின் கீழ்க் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்த பல சிறிய நாடுகளும் இருந்தன. அவன் அசுவமேத யாகம் செய்த பொழுது மிதிலை, காசி, கேகயம், அங்கம் ஆகிய நாட்டு மன்னர்களுக்கு அழைப்பு விடுத்ததையும், இராமனது முடிசூட்டு விழாவுக்குப் பல குறுநில மன்னர்கள் அழைக்கப்பட்டதையும் தயரதன் கேகயன் மகளையும் இராமன் சனகன் மகளையும் மணந்து கொண்டதையும், தயரதன் அங்க தேசத்து அரசனுக்குத் தனது மகள் சாந்தா என்பவளைத் தத்து புத்திரியாகத்

தந்தையும் நோக்கும்போது இந் நாடுகளுக்கிடையே நிலவிய நட்புறவு புலப்படுகிறது. கம்பனும், தயரதனை, 'அரசர்க்கு அரசன்' (168) என்றே கூறுகிறான். அவன் 'செம் மாண் தனிக் கோல் உலகு ஏழினும் செல்ல நின்றான்' (168) என்பது கவிமிகையே எனினும் அவன் அரசு ஒரு பேரரசு என்பதை உணர்த்துகிறது.

கோசலத்தின் குறைகள்

நாட்டு, நகரப் படலங்களில் கம்பன் வருணிப்பது கோசலத்தையோ, அயோத்தியையோ அல்ல. காப்பியத் தலைவன் பிறந்த இடத்தைப் புகழ்ந்துரைக்கும் காவிய மரபுப் படியே அவ்வருணனைகள் அமைந்துள்ளன. மேலும் அவ்வருணனைகளில் தன் உன்னதக் கற்பனையில் உதித்த இலட்சிய நாட்டையே கம்பன் காட்டுகிறான். கோசலம் உண்மையில் அத்தகைய இலட்சிய நாடாக இல்லை. அங்கே பல குறைகள் இருந்தன. கம்பனே அதை வெளிப்படுத்துகிறான்.

தயரதன் கொடுங்கோல் செலுத்தியவன் அல்லன். இருப்பினும் வரம்பிலா முடியாட்சியின் (Absolute Monarchy) தலைவனாக அவன் இருந்ததால் அதன் விளைவாகத் தோன்றக் கூடிய குறைகளும் அவன் நாட்டில் இருந்தன.

இராமன் முடி சூடப் போகிறான் என்பதை அறிந்ததும் அயோத்தி மக்கள் அளவில்லாத மகிழ்ச்சி அடைகின்றனர். அப்போது, 'பாவமும் அருந் துயரும் வேர்பறியும்' (1592) என அவர்கள் கூறி மகிழ்ந்ததாகக் கம்பன் பாடுகிறான். இதிலிருந்து கோசலத்தில் பாவமும் அதனால் விளைந்த அருந்துயரும் இருந்தன என்பதையும் இராமன் அரசன் ஆனால் இவை அழிந்துவிடும் என மக்கள் நம்பினர் என்பதையும் அறியலாம். இந்தப் பாவங்களும் துயரங்களும் யாவை என்பதையும் கம்பன் சுட்டிக் காட்டுகிறான்.

தனியுடைமையின் பாதுகாவலனாக அமைந்த முடியாட்சியில் வறுமை தவிர்க்க முடியாதது. கோசலத்தில் வறியவரும் இருந்தனர் என்பதைக் கம்பன் பல இடங்களில்காட்டுகிறான். கோசலத்து உழவர்கள் 'வறியவர்க்கு உதவினர்' (51). பெருந் தடங்கண் பிறை நுதலார், 'வருந்தி வந்தவர்க்கு ஈந்தனர்' (68). நகர மாந்தர், 'பழங்கணோடு இரந்தவர் பரிவு தீர்தர வழங்கினர்' (159). தயரதன், 'இரப்போர் கடலை ஈந்தே கடக்கிறான்' (172). மக்கள் பிறந்த மகிழ்ச்சியால், 'நிதி நிறை தரு சாலை தாள் நீக்கி, யாவையும் முறை கெட வறியவர் முகந்து கொள்க' (289)என ஆணையிடுகிறான். இராமன் மன்னனாகப் போகும் மகிழ்ச்சியில் மக்கள், 'பசும் பொனின் வெறுக்கை, மைந்த! வறியோர் கொள வழங்கு' (1587) எனக் கூறுகின்றனர். இவையெல்லாம் கோசலத்தில் வறியவரும் இருந்தனர் என்பதை மட்டுமன்றி, 'வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்' (84) என்றும் 'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே, இல்லாரும் இல்லை; உடையார்களும். இல்லை மாதோ' (166) என்றும் கம்பன் பாடுவது கோசலத்தை அல்ல என்பதையும் காட்டுகின்றன.

மனித நலத்திற்குக் கேடு பயக்கும் எனச் சான்றோர் கடிந்த கள்ளும் கவறும் காமமும் கோசலத்தில் இருக்கவே செய்தன. ''தேறல் மாந்தி சூது உந்தி'ப் (161) பொழுது போக்கும் மாந்தர் அங்கே இருந்தனர். ஆடவர் மட்டுமல்லாது மகளிரும் மதுவுண்டு மயங்கினர் (966—985). பரத்தையரும் அயோத்தியில் இருந்தனர்.

> வெள்ளமும், பறவையும், விலங்கும், வேசையர்
> உள்ளமும் ஒரு வழி ஓட நின்றவன் (173)

என்று தயரதனின் செங்கோல் சிறப்பைக் கம்பன் புகழுகிறான் எனினும் அவன் ஆட்சியில் பரத்தையர் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விடவில்லை என்பதையும் காட்டுகிறான். வேசையர் உள்ளம் ஒரு வழி ஓட நின்றது என்றால்

அவர்கள் ஒருவனோடு வாழ்ந்தனர் என்றாகிறது. அது வேசையர் ஒழுக்கத்தைக் காட்டுவதாயினும் அவர்களோடு வாழும் ஒருவனின் பரத்தமை ஒழுக்கத்தையும் காட்டு கிறது. வேசையர் மணம் புரிந்து கொண்டனர் எனக் கூற இடமில்லை. பழங் காலத்தில் அதற்கு வாய்ப்பில்லை. அவ்வாறு மணந்து கொண்டிருந்தால் ‘வேசையர்’ என அவரை அழைப்பது பொருத்தமற்றது. வேறிடங்களிலும் வேசையர் பற்றிக் கம்பன் குறிப்பிடுகிறான். இராமன் காடு செல்லப் போகிறான் என்பதை அறிந்து வருந்திய மக்களில், ‘கள்ளூறு செவ்வாய்க் கணிகையரும்’ (1710) இருந்தனர் என்றும், வனவாசம் முடித்து அயோத்தி திரும்பிய இராமனைக் கண்டு நகர மாந்தர் மகிழ்ச்சி அடைந்த போது, ‘வேசியர் உடுத்த கூறை வேதியர் சுற்றி’ (10302) ஆடினர் என்றும் அவன் கூறுவதிலிருந்து அயோத்தியில் வேசையர் இருந்தனர் என்பதை அறியலாம்.

இக்குறைகள் தயரதன் ஆட்சியில் புதியனவாகத் தோன்றியவை அல்ல. விதி நம்பிக்கை, சமூகப் பழக்கங் கள், மனிதனின் தன்னலம் போன்ற காரணங்களால் இந் நாட்டில் நெடுங்காலமாகவே இருந்து வருபவை. தயரதன் ஆட்சி இவற்றை முற்றிலும் ஒழித்து விட வில்லை என்பதையே கம்பன் சுட்டிக் காட்டுகிறான்.

சாபங்களாகிய வரங்கள்

முடியாட்சியின் குறைகளைச் சுட்டிக் காட்டும் அரசியல் நூலார், சிக்கல்களை ஆராய்ந்து முடிவெடுக்கும் அவையை விடத் தனி மனிதன் தவறிழைப்பதற்கு வாய்ப்பு அதிகம் என்பர். மேலும் அதிகாரம் எல்லாம் தனி மனிதன் ஒருவன் கையில் குவிந்து விடும் முடியாட்சியில் மக்கள் தம் கருத்துச் சுதந்திரத்தை இழந்து விடுவதால் அவர் மனமறியாமல் மன்னன் தன்விச்சையாக முடிவெடுக்க முனைந்து நாட்டுக்குத் தீங்கு விளைவித்து விடுவான்

என்றும் சுட்டிக் காட்டுவர். தயரதனின் செயல்கள் இக்கருத்துக்களை மெய்ப்பிப்பனவாகவே அமைகின்றன.

மூத்தவனுக்கு அரசுரிமை என்பது தொன்றுதொட்டு வரும் முடியாட்சி மரபு. இது 'மயில்முறைக் குலத்து உரிமை'யாகவும் 'மனு முதல் மர'பாகவும் (1470) கருதப்பட்டுப் பேணப்பட்டது. தயரதன் இந்த மரபுக்கு மாறான வரத்திற்கு இசைகிறான். தயரதன் தன் முதுமையை உணர்ந்து தன் மூத்த மகன் இராமனுக்கு முடி சூட்ட விரும்பி, அமைச்சரவை கூட்டி அவர்களுடைய கருத்தைக் கேட்கிறான். அவர்களும் இசைகின்றனர். இராமனுக்கு முடி சூட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டு நாளும் குறிக்கப்படுகிறது.

இந்நிலையில் தயரதன் பட்டத்தரசிகள் மூவருள் இளையவளாகிய கைகேயி அவளுடைய பணிப்பெண் கூனியின் தூண்டுதலால், தயரதன் முன்னர் அவளுக்கு வாக்களித்திருந்த இரண்டு வரங்களை இப்போது தர வேண்டும் என்று கேட்டு, ஒரு வரத்தால் அவள் மகன் பரதன் அரசாள வேண்டும் என்றும், மற்றொரு வரத்தால் இராமன் நாடு துறந்து காடு செல்ல வேண்டும் என்றும் வற்புறுத்துகிறாள். முதலில் இவ்வரங்களைத் தர மறுக்கும் தயரதன், இவற்றைத் தராவிட்டால் வாய்மை தவறியவன் என்ற வசை அவனுக்கு வரும் என்று கூறித் தானும் உயிர் துறக்கப் போவதாக அவள் மிரட்டவே அதற்குப் பணிந்து வரங்களைத் தந்து விடுகிறான். இதனால் பல சிக்கல்கள் உருவாகின்றன.

இந்தச் சிக்கல்களைப் புரிந்து கொள்ள வரங்கள் பிறந்த வரலாற்றை அறிவது அவசியமாகிறது. முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் தோல்வியுற்ற தேவர்கள் தயரதன் உதவியை நாடினார்கள். அவர்கள் வேண்டுகோளை ஏற்றுத் தயரதன் சம்பரன் என்ற அசுரனுடன் போரிட்டான். அப்போரில் தயரதனுக்குத் தேரோட்டி

உதவிய கைகேயி அவனுக்கு நேர்ந்த ஆபத்திலிருந்து இரு முறை அவனைக் காப்பாற்றினாள். அதற்கு மகிழ்ந்த மன்னன் இரு வரங்களை அவளுக்கு வழங்கினான். வரங் களைப் பெற்றுக்கொண்ட அவள் சமயம் வரும்போது வரங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்கிறேன் என்கிறாள். தயரதனும் அதற்கு உடன்படுகிறான். வான்மீகி (2.9, 24—45) இந்த வரலாற்றை விவரித்துள்ளார். கம்பன் இந்த விவரங்களைக் கூறாமல், 'சம்பரன் தொலை வுற்ற வேலை, ஆடல் வென்றியான் அருளிய வரம் அவை இரண்டும்' (1487) எனக் கூனி வாயிலாகவும், 'மன்ன! நீ அன்று ஏன்ற வரங்கள் இரண்டும்' (1502) எனக் கைகேயி வாயிலாகவும் வர வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிவிக் கிறான். தயரதன் மன்னனாக இருந்தே இந்த வரங்களை வழங்கினான் என்பதைச் சுட்டிக் காட்டுவது போல் கைகேயி, 'மன்ன! நீ அன்று ஏன்ற வரங்கள்' என்கிறாள்.

தான் கேட்ட வரங்களைத் தர மறுத்த தயரதனிடம்,

முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய் முனிவாயேல்
என்னே? மன்னா யார் உளர் வாய்மைக்கு இனி? (1524)

எனக் கைகேயி அதை வாய்மைப் பிரச்சினை ஆக்குகிறாள். தயரதனும் அவ்வாறே கருதுகிறான் என்பது, 'வாய் தந்தேன் என்றேன்; இனி யானோ அது மாற்றேன்' (1523) என அவன் பேசுவதிலிருந்து தெரிகிறது. தயரதன் முன்பு வரங்களை வழங்கிய போது கைகேயி அவை இன்ன வரங்கள் என்று கேட்டுப் பெறவில்லை. அப்போதே தன் மகன் பரதன் அரசாள வேண்டும்; இராமன் காடு செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டுக் கைகேயி வரங்களைப் பெற்றிருந்தால் இப்போது தயரதன் தர மறுக்கும்போது அவன் வாய்மை தவறியவன் ஆவான். ஆனால் அவ்வாறு நிகழவில்லை. கைகேயி இப்போதுதான் வரங்களைக் குறிப்பிட்டுக் கேட்கிறாள். தயரதன் இதை எடுத்துக் காட்டி, இந்தக் குறிப்பிட்ட வரங்களை நான் முன்பு தர

வில்லை; எனவே இது வாய்மைப் பிரச்சினை அல்ல எனக் கைகேயிடம் வாதம் செய்திருக்கலாம். ஆனால் அவனோ,

> **தந்த வரத்தைத் 'தவிர்க' என்றல்**
> **உரம்தான் அல்லால் நல்லறம் ஆமோ? (1528)**

என்று கைகேயி ஓர் இராச தந்திரிக்குரிய சாமர்த்தியத் தோடு மடக்கும் போது இந்த வார்த்தை வலைக்குள் சிக்கிக் கொள்கிறான்.

வாய்மை பற்றிப் பெரிதும் கவலைப்படுகிற தயரதனுக்கு, இராமனுக்கு முடி சூட்டுவதாக அமைச்சரவையின் இசைவோடு முடிவெடுத்தாகிவிட்டது; எனவே இப்போது அதற்கு முரணாக வரம் தருவதுதான் வாய்மை தவறுவதாகும் என்றும் கைகேயியிடம் கூறத் தோன்றவில்லை. கைகேயி பெற்ற வரத்தால் இராமன் அரசுரிமை இழந்து காடு செல்லப் போகிறான் என்பதை அறிந்த மக்கள்,

> **என்னே, நிருபன் இயற்கை இருந்தவா!**
> **தன்னேர் இலாத தலைமகற்குத் தாரணியை**
> **முன்னே கொடுத்து, முறை திறம்பத் தம்பிக்குப்**
> **பின்னே கொடுத்தால் பிழையாதோ மெய்? (1713)**

என்று கேட்கின்றனர். மக்களுக்குப் புரிந்த இந்தச் சிக்கல் மன்னனுக்குப் புரியாதது வியப்பை அளிக்கிறது.

மேலும், மூத்தவனுக்கே முடி சூடும் உரிமை என்பது முடியாட்சியின் மரபு. மன்னன் இந்த மரபைக் காக்கும் கடமை உடையவன். இந்த மரபை மாற்ற அவனுக்கு உரிமை இல்லை. ஆனால் இதைப் பற்றிய எண்ணமே தயரதனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

> **யானே சொல்லக் கொள்ள**
> **இசைந்தான்; முறையாலே**
> **தானே நல்கும் உன் மகனுக்கும்**
> **தரை (1521)**

என்று கைகேயியிடம் தயரதன் கூறுவதிலிருந்து அவன் மரபு கருதி இராமனுக்கு அரசுரிமை தரவில்லை என்றும் அவன் விரும்பியதால்தான் தந்திருக்கிறான் என்றும் தெரிகிறது. இராமன் தானே பரதனுக்கும் நாட்டை அளித்துவிடுவான் என்றும் அவன் கூறுகிறான். இதிலிருந்து மக்கள் விருப்பத்தைப் பற்றியே கவலைப்படாமல், ஒரு மன்னன் தன் விருப்பப்படி நாட்டை யாருக்கு வேண்டுமென்றாலும் தூக்கிக் கொடுத்துவிடலாம் என்பது அவன் கருத்து என்பது புலப்படுகிறது. 'மயில் முறைக் குலத்து உரிமையை, மனுமுதல் மரபை' அவன் எவ்வளவு துச்சமாக மதிக்கிறான் என்பதையே அவன் சொற்கள் காட்டுகின்றன.

மாற்றுக் கருத்துக்கு இடமில்லாத, இராமனுக்குப் பட்டம் கட்டும் விஷயம் பற்றி அமைச்சரவை கூட்டி ஆலோசனை கேட்ட தயரதனுக்கு, மரபுக்கே மாறான வரம் பற்றி அமைச்சரவையின் கருத்தை அறியத் தோன்றவில்லை. 'நள்ளாது இந்த நானிலம்' (1520) என்று நாட்டு மக்கள் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதைக் கைகேயியிடம் கூறத் தெரிந்தவனுக்கு வரம் தருமுன் அவர்கள் இசைவைப் பெறுவது இன்றியமையாதது என்று தோன்றவில்லை. இவற்றைக் காரணங்களாகக் காட்டி இவ் வரங்களைத் தரும் உரிமை எனக்கில்லை எனக் கைகேயியிடம் மறுக்கத் தோன்ற வில்லை.

மரபா? வாய்மையா? என்ற சிக்கலான வினா எழுந்த போது வாய்மை என்று தான் தவறாகக் கருதியதைக் காப்பதாக நினைத்துக் கொண்டு மரபைப் பலிகொடுத்து விடுகிறான் தயரதன். இதனால் அவன் இரண்டையும் காப்பாற்றாதவனாகிறான்.

இராமன் காடு செல்ல வேண்டும் என்ற கைகேயியின் இரண்டாவது வரத்திற்கு இணங்கியதன் மூலம்

அரசருக்குக் கடமையாகிய தண்ட நீதியிலிருந்தும் தயரதன் வழுவுகிறான். காட்டுக்கு அனுப்புவது என்பது ஒருவனை நாடு கடத்துவதாகும். இராசத்துரோகம் போன்ற பெருங் குற்றங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனை இது. இராமன் எந்தக் குற்றமும் இழைக்காத நிலையில் அவன் காட்டுக்கு அனுப்பப்படவேண்டும் என்று கைகேயி கேட்பதும் அதற்குத் தயரதன் இணங்குவதும் தண்ட நீதிக்குச் சற்றும் ஒவ்வாத செயல்கள். இராமனைக் காட்டுக்கு அனுப்பும் வரத்தைத் தவிர்க்குமாறு தயரதன் கைகேயியிடம் கெஞ்சுவது உண்மையே. எனினும் ஓர் அரசன் என்ற நிலையில் இருந்து இது தண்ட நீதிக்கு ஒவ்வாதது என்று அவன் சொல்லவில்லை. பிரியத்திற்குரிய மகன் பிரிந்தால் வருந்த நேருமே என்ற புத்திர சோகத்தாலேயே அவ் வரத்தைத் தவிர்க்குமாறு வேண்டுகிறான்.

குற்றம் இழைத்தவனுக்குத்தானே இத்தகைய தண்டனை விதிக்க முடியும் என்ற வினா அயோத்தியில் கோசலை ஒருத்தியிடம் மட்டுமே எழுகிறது. மன்னன் ஆணைப்படி தான் காடு செல்ல இருப்பதாக இராமன் தெரிவித்த போது,

> **அன்பு இழைத்த மனத்து அரசற்கு, நீ**
> **என் பிழைத்தனை? (1617)**

என்று அவள் மட்டுமே கேட்கிறாள். இந்தக் கேள்வியும் இராமனை ஐயுறுவதாக அமைந்து மன்னன் முன்னால் எழாமல் அடங்கிவிடுகிறது. வசிட்டன் போன்ற அமைச்சர்களும் இக் கேள்வியை எழுப்பவில்லை.

வாய்மொழி ஆணையின் வழு

வரம்பிலா முடியாட்சியின் நடைமுறைகளுள் ஒன்றாக வாய்மொழி ஆணை அமைந்திருந்தது. விரைந்து செயல்பட இந்நடைமுறை உதவுமெனினும் பல நேரங்களில் இது தீய விளைவுகளையே உண்டாக்கும் என்பதையும் கம்பன் காட்டுகிறான்.

தயாரதனிடம் இரண்டு வரங்களை எப்படிக் கேட்க வேண்டும் என்று கூனி கைகேயியிக்குக் கற்பிக்கும் போது,

இரு வரத்தினில், ஒன்றினால்
  அரசு கொண்டு, இராமன்
பெரு வனத்திடை ஏழ்இரு
  பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி, ஒன்றினால் (1488)

என்று கூறுகிறாள். ஆனால் கைகேயியோ தயரதனிடம்,

ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால், என்
சேய் அரசாள்வது; சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது (1504)

என்றே கேட்கிறாள். இங்கே இராமன் காட்டில் இருக்க வேண்டிய காலம் பதினான்கு ஆண்டுகள் என்பதைக் குறிப்பிடாமல் தவிர்க்கிறாள். அவ்வாறு குறிப்பிட்டால் தயரதன் அதிர்ச்சி அடைந்து வரங்களை முற்றிலும் மறுத்து விடக்கூடும் என்று அஞ்சி, அவ்வரத்தின் கடுமையைத் தணிப்பதற்காகவே அவள் அதைத் தவிர்ப்பது தெரிகிறது. ஆனால் இவ்வரத்தைப் பெற்ற பிறகு இராமனிடம் அதைத் தெரிவிக்கும்போது,

ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீ போய்
தாழ்இருஞ் சடைகள் தாங்கி,
தாங்க அருந் தவம் மேற்கொண்டு
பூழி வெங் கானம் நண்ணி
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழ் இரண்டு ஆண்டின் வா (1601)

என்கிறாள். இதில் பதினான்கு ஆண்டுகள் என்பது மட்டும் அல்லாமல் தான் விரும்பியதை எல்லாம் தயங்காமல் சேர்த்துக் கொள்கிறாள். இதைப் பற்றித் தெரிய வந்த போதும், வரத்தில் இல்லாதவற்றை அதிகமாகச்

சேர்த்துக் கொண்ட அடாத செயல் பற்றி தயரதனே கைகேயியைக் கண்டிக்கவில்லை.

இங்கு மற்றுமொரு அரசாங்கச் செயல்படுமுறைத் தவறும் நிகழ்கிறது. தயரதன் கைகேயியின் வரங்களுக்கு இணங்கினானே அன்றி, அவ்வரங்கள் அரசாணையாக வடிவம் பெறவில்லை. ஆனால் கைகேயி 'என்று இயம்பினன் அரசன்' என்று தானே அதை அரசாணையாக மாற்றி இராமனிடம் கூறுகிறாள். அது மட்டும் அல்லாமல், 'நாயகன் உரையான் வாயால்; நான் இது பகர்வென்' (1597) என்று அரசன் தானே இட வேண்டிய ஆணையை அவளே இடுகிறாள். இந்தச் செயல்படுமுறைத் தவற்றை வசிட்டன்.

> வாயால் மன்னன், மகனை,
> 'வனம் ஏகு' என்னா முன்னம்
> நீயோ சொன்னாய்? (1650)

என்று கைகேயியைக் கேட்பதன் மூலம் சுட்டிக் காட்டுகிறான். தயரதனும்,

> பாவி! நீயே, 'வெங்கான்
> படர்வாய்' என்று, என் உயிரை
> ஏவினாயோ? (1651)

என்று கண்டிக்கிறான்.

வாய்மொழி ஆணை என்ற ஆபத்தான நடைமுறையைத்தன்னல நோக்கம் கொண்ட அதிகார வர்க்கம் எப்படித் தனக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதையும் அதனால் எந்த அளவுக்குத் தீங்கு விளைவிக்க முடியும் என்பதையும் கைகேயியின் செயல் புலப் படுத்துகிறது.

தயரதனின் பலவீனங்கள்

நாடாளும் மன்னனுக்கு மனத் திட்பமும் உறுதியும் இன்றியமையாத குணங்களாகும். பலவீனங்கள்

உடையவன் மன்னனாக இருந்தால் தன் மனம் போன போக்கின்படி நடந்து நாட்டிற்குப் பெருந்தீங்கு விளைவித்து விடுவான். முடியாட்சியின் குறைகளுள் ஒன்றாக அரசியல் நூலார் இதனைக் குறிப்பிடுகின்றனர்.

அயோத்தியின் அரசியற் குழப்பங்களுக்குத் தயரதனின் பலவீனங்களும் காரணமாகின்றன. தயரதனின் முதல் பலவீனம் அவனுக்கு நான்கு புதல்வர்கள் இருந்தும் இராமன்மீது மட்டும் அவன் காட்டும் மிகுதியான பாசம். இராமனுக்கு முடிசூட்ட விரும்பியதற்குக் காரணம் அவன் மீது தான் கொண்ட அன்பே என்பதை,

> மகன்வயின் அன்பினால் மயங்கி, யான் இது
> புகல (1391)

என்று தயரதனே வேத்தவையோரிடம் கூறுவதிலிருந்தும், இராமனை, 'என் மகன், என் கண், என் உயிர்' என்று கைகேயியிடம் கூறுவதிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். கைகேயியிடம், 'பெறுவாயேல், மண்ணே கொள் நீ; மற்றையதொன்றும் மற' (1522) என்று கூறுவதிலிருந்து நாட்டைவிட இராமனையே அவன் மிகுதியாக நேசிக்கிறான் என்பதும் அந்தக் கண் மூடிய பாசத்தில் மகனுக்காக நாட்டையே கைகேயிக்குத் தாரை வார்க்கத் தயாராக இருக்கிறான் என்பதும்புலப்படுகிறது. இவை எல்லாவற்றையும் விட ஒரு படி மேலே சென்று,

> இனி, யான்
> பொன்றும் அளவில் அவனைப்
> புனை, மா மகுடம் புனைவித்து,
> ஒன்றும் வனம் என்று உன்னா
> வண்ணம் செய்து, என் உரையும்
> குன்றும் பழி பூணாமல்
> காவாய் (1645)

என்று வசிட்டனிடம் வேண்டுகிறான். வரங்களையும் தந்து விட்டு அதற்கு முற்றிலும் மாறாக நடக்குமாறு

வசிட்டனை ஏவுகிறான். இராமனைக் காடு செல்லாமல் தடுத்து அவனுக்கு முடி சூட்ட வேண்டுமாம். அதே நேரத்தில் கைகேயியிக்குத் தந்த வாக்கையும் காப்பாற்ற வேண்டுமாம். ஒன்றற்கு ஒன்று முரணான இரண்டையும் ஒரே நேரத்தில் எப்படிச் செய்ய முடியும் என்று அவனுக்குத் தோன்றாதது வியப்பை அளிக்கிறது. புத்திர சோகத்தால் புத்தி தடுமாறித் தயரதன் ஒரு தந்தையாகவே நடந்து கொள்கிறான். தான் ஒரு மன்னன் என்பதையே அவன் மறந்து விடுகிறான். அதனாலேயே மரபுக்கும், தண்ட நீதிக்கும் மாறான வரங்களைத் தர முடியாது என மறுக்க அவனுக்குத் தோன்றவில்லை.

தயரதனின் அடுத்த பலவீனம் மூன்று பட்டத்து அரசிகளுள் ஒருத்தியாகிய கைகேயியிடம் அவன் கொண்ட மோகம். இராமனின் முடிசூட்டு விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு ஆணையிட்ட தயரதன் நள்ளிரவில் நேரே கைகேயியின் மாளிகைக்கே செல்கிறான். இராமன் மன்னனாகப் போகும் மகிழ்ச்சி யான செய்தியைப் பட்டத்தரசிகளுள் மூத்தவள், இராமனைப் பெற்றவளாகிய கோசலையிடம்தான் அவன் முதலில் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அவன் மோகம் கைகேயியிடம் அவனை அழைத்துச் செல்கிறது.

மாளிகையில் தரையில் அலங்கோலமாகக் கிடக்கும் கைகேயியைக் கண்டு திடுக்கிட்ட தயரதன்,

> என்னை நிகழ்ந்தது? இவ் ஏழு
> ஞாலம் வாழ்வார்
> உன்னை இகழ்ந்தவர் மாள்வர்;
> உற்றது எல்லாம்
> சொன்னபின் என் செயல் தாண்டி (1499)

என்று அவளிடம் கூறுவதிலிருந்து அவள் மீது அவன் கொண்ட ஈடுபாடு புலப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில்,

> அரசனுக்குப் பால்யம் திரும்பியிருக்கிறது;
> காமத்திற்கு வசப்பட்டிருக்கிறார். அப்படிப்
> பட்டவருடைய வார்த்தையை ராஜ நீதி
> யறிந்த எந்தப் புத்திரனாவது கவனிப்பானா?
> (II 21. 37-39)

என்று இலக்குவன் பேசுவதாக வான்மீகி காட்டுவார்.

> புத்திமான்கள், வயதில் மூத்தவர்கள்,
> நண்பர்கள், மந்திரிகள், நகரத்து
> ஜனங்கள் யாருடனும் கலந்து
> ஆலோசிக்காமல், திடீரென்று கேவலம்
> ஒரு பெண்ணின் தூண்டுதலால்
> அவளுடைய இஷ்டத்தைப் பூர்த்தி
> செய்ய இந்த அக்கிரமத்தைச்
> செய்தேன். (II 59. 61-65)

என்று தயரதன் வாயாலேயே அவன் பலவீனத்தையும் அதனால் அவன் தவறிழைக்க நேர்ந்ததையும் வான்மீகி தெளிவாகப் புலப்படுத்துகிறார். கம்பனோ,

> ஆதி அரசன் அருங் கேகயன் மகள்மேல்
> காதல் முதிரக் கருத்தழிந்தான் ஆம் (1708)

என்று மக்கள் பேசுவதாகக் காட்டுகிறான். இதன் மூலம் மக்கள் அளவுக்கு மன்னனின் இந்தப் பலவீனம் தெரிந்திருந்தது என்பது புலப்படுகிறது.

ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட பெண்ணின் மீதோ, குழந்தையின் மீதோ அன்பு பாராட்டுவது சார்புணர்வை உண்டாக்கி நல்லாட்சிக்கு இடையூறு விளைவிக்கும் என்று கிரேக்க அறிஞர் பிளேட்டோ கூறுவதை இங்கே நினைவில் கொள்ளலாம். இந்தச் சார்புணர்வு தோன்றாமலிருக்க அவர் பரிந்துரைக்கும் குடும்பப் பொதுவுடைமை என்ற கருத்து அருவருக்கத் தக்கது எனினும் சார்புணர்வினால்

ஆட்சியாளர்கள் நடுநிலைமை தவற நேரும் என்ற அவர் கருத்திலிருக்கும் உண்மையை மறுக்க முடியாது.

தயரதன் இராமன் மீது காட்டும் அளவு கடந்த அன்பும், கைகேயி மீது கொண்ட மோகமும் அவனை அரசன் என்ற நிலையில் செயல்பட விடாமல் தடுப்பதோடு முறை தவறவும் செய்கின்றன. அரசனின் பலவீனங்கள் அரசியலில் விரும்பத் தகாத தீமைகளை விளைவிக்கும் என்பதையே கம்பன் இங்கு தயரதன் மூலம் சுட்டிக் காட்டுகிறான்.

ஆற்றலற்ற அமைச்சரவை

தயரதனுடைய அமைச்சரவையில் திருட்டி, சயந்தன், விசயன், சித்தார்த்தன், அர்த்தசாதகன், அசோகன், மந்திரபாலன், சுமந்திரன் என்ற எண்மர் இருந்ததாகவும் வசிட்டன் அவர்களுக்குத் தலைவனாக இருந்தான் என்றும் வான்மீகி (I 7. 1-7) கூறுகிறார். இவர்களுள் வசிட்டன், சுமந்திரன் என்ற இரண்டு பெயர்களையே கம்பன் குறிப்பிடுகிறான். இவர்களுள்ளும் வசிட்டன் ஒருவனே இயங்குகிறவனாகக் காணப்படுகிறான். சுமந்திரனோ அமைச்சனாகச் செயல்படுவதைவிட ஏவியதைச் செய்யும் பணியாளனாகவே காணப்படு கிறான்.

இந்த அமைச்சரவையோடு வேத்தவை ஒன்றும் இருந்தது. அந்த அவையில் தயரதனின் ஆட்சியின் கீழ் உள்ள குறுநில மன்னர்கள் இருந்தனர். இந்த வேத்தவையும் மன்னன் விருப்பப்படி நடக்கும் அவையாகவே இயங்கியது.

'தலைமகன் வெகுண்ட போதும்...நீதி விடாது நின்று உரைக்கும் வீரர்' (1321) என்றும், 'உற்றது கொண்டு மேல் வந்து உறு பொருள் உணரும் கோளார்; மற்றது வினையின் வந்தது ஆயினும், மாற்றல் ஆற்றும் பெற்றியர்'

(1319) என்றும் அமைச்சர்களை அறிமுகம் செய்து வைக்கிறான் கம்பன். ஆனால் அயோத்தி அரசியலின் நெருக்கடியான நேரத்தில் இந்த அமைச்சர்கள் இந்த இலக்கணங்களுக்கேற்பக் தங்கள் கடமையைச் செய்யாதவ ராக, அல்லது செய்யும் ஆற்றல் அற்றவராகவே காணப் படுகின்றனர்.

இராமனுக்கு முடி சூட்ட விரும்புகிறேன்: 'யாது நும் கருத்து' என அமைச்சரவையிடம் தயரதன் கேட்டபோது அமைச்சர் அவை இசைவைத் தெரிவிக்கிறது. இந்த முடிவை வேத்தவையில் ஓர் அறிவிப்பாகவே தயரதன் கூறுகிறான். அந்த அவையும் மகிழ்ச்சியோடு இசைகிறது. ஆனாலும் தயரதனுக்கு ஓர் ஐயம் எழுகிறது. அவன் மன்னர்களை நோக்கி.

> **மகன் வயின் அன்பினால் மயங்கி, யான் இது**
> **புகல, நீர் புகன்ற இப் பொம்மல் வாசகம்,**
> **உகவையின் மொழிந்ததோ? உள்ளம் நோக்கியோ?**
> **தகவு என நினைந்தது எத் தன்மையால்? (1391)**

என்று கேட்கிறான். வேத்தவையினர் தன் விருப்பத்தை அறிந்து அதற்கு இசைவாகச் சொல்லியிருக்கலாம் என்ற ஐயம் தயரதனுக்கு ஏன் எழுந்தது? அவர்கள் முன்னர் இது போல் நடந்திருக்க வேண்டும் என்பதைத்தானே இந்த ஐயம் உணர்த்துகிறது? தயரதன் ஆட்சியில் வேத்தவை எந்த நிலையில் இருந்தது என்பதையே கம்பன் இங்கே குறிப்பாகக் காட்டுகிறான்.

கைகேயியின் மாளிகையிலிருந்து எழுந்த கோசலையின் கூக்குரலைக் கேட்டு அங்கே சென்ற வசிட்டனுக்கு நிகழ்ந்ததெல்லாம் கைகேயியே எடுத்துரைக் கிறாள். அதைக் கேட்ட வசிட்டன், 'கொள்ளாது உலகம்' என்றும், 'முறை அன்று' (1648) என்றும் கைகேயியிடம் கூறுகின்றானே அன்றி உலகம் ஏற்றுக்கொள்ளாத, முறைமை அற்ற ஒன்றை வரமாகத் தர ஏன் இசைந்தான் என்று தயரதனைக் கேட்கவில்லை. அதை விட்டு விட்டு,

ஆண் நாயகனே இனி நாடு
　　ஆள்வான்; இடையூறு உளதோ?
மாணா உரையாள் தானே தரும்;
　　மா மழையே அனையான்
பூணாது ஒழிவான் எனின்,
　　யாம் உளமோ? (1644)

என்று வெற்றுரைகளால் தயரதனுக்கு ஆறுதல் சொல்லுகிறான்.

'இராமனைக் காடு செல்லாமல் தடுத்து அவனுக்கே மகுடம் சூட்டு; கைகேயிக்கு நான் தந்த வாக்கையும் காப்பாற்று' என்று தயரதன் வேண்ட இதிலுள்ள முரண்பாட்டை உணராமல், 'வேந்தே! அயரேல்; அவனை இன்று ஏகாத வண்ணம் தகைவென் உலகோடு' (1671) என்று வீரவுரை பேசுகிறான். ஆனால் நடந்ததை வேத்தவையில் கூறும்போதோ, கைகேயி வரத்தால் நாட்டைப் பெற்று இராமனைக் காடேகச் செய்தாள்; 'இனி எண்ணுவதற்கு வேறொன்றும் இல்லை' என்று தன் வீரவுரையை மறந்துவிட்டுப் பேசுகிறான்.

கொண்டாள் வரம் இரண்டு,
　　கேகயர் கோன் கொம்பு; அவட்கு
தண்டாத செங்கோல்
　　தயரதனும் தான் அளித்தான்;
'ஒண்தார் முகிலை
　　வனம் போகு' என்று, ஒருப்படுத்தாள்
எண்தானும் வேறு இல்லை (1695)

இதைக் கேட்ட மன்னர்கள் 'இது தகாது' என்று கூறுவதை விட்டு விட்டு மக்களோடு சேர்ந்து பெட்டைப் புலம்பல் புலம்புகின்றனர்.

வசிட்டன் அடுத்து முகம் காட்டுவது, இராமனும் இலக்குவனும் மரவுரி தரித்து வனம் போக முற்படும் போது. 'வினையின் வந்தது ஆயினும், மாற்றல் ஆற்றும்

பெற்றியர்' (1319) என்று அறிமுகம் செய்து வைக்கப் பட்ட அமைச்சர்களின் தலைவன் இராமனின் மரவுரிக் கோலம் கண்டு,

வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்,
தாழ்வினை அதுவர, சீரை சாத்தினான்;
சூழ்வினை நான்முகத்து ஒருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ! (1764)

என வெற்று வேதாந்தம் பேசுகிறான்.

'காடு செல்க' என்பது காவலன் கட்டளையன்று; அவன் ஆராயாமல் கைகேயியின் வரத்திற்கு இணங்கினான் (1768). எனவே நீ காடு செல்ல வேண்டாம்-என்று இராமனை வசிட்டன் தடுக்க முயல்கிறான். அதைக் கேட்ட இராமன்.

என்றனன் எந்தை இவ் வரங்கள்; ஏவினாள்
ஈன்றவள்; யான் அது சென்னி ஏந்தினேன்;
சான்று என நின்ற நீ தடுத்தியோ? (1769)

எனச் சொற்களால் சாட, 'ஏகாத வண்ணம் தகைவென் உலகோடு' என்றவன் வாய்மூடி நிற்கிறான்.

பரதன் அயோத்தி வந்ததும் அவனிடம்

வந்ததும் அன்னைதன் வரத்தில்; மைந்த! நீ
அந்தம்இல் பேர்அரசு அளித்தி; அன்னது
சிந்தனை எமக்கு (2254)

என, எதைத் 'கொள்ளாது உலகம்', 'முறைமை அன்று' எனச் சொன்னானோ அதைச் செய்யச் சொல்கிறான். பின்னர் சித்திர கூடத்தில்,பரதனிடம் கூறியதற்கு மாறாக இராமனிடம்,

'அன்று' எனாது, இன்று எனது ஆணை; ஐய! நீ
நன்று போந்து அளி, உனக்கு உரிய நாடு' (2498)

என்கிறான். இராமன் அதை மறுக்கவே, 'உரைப்பது ஓர் முறைமை கண்டிலெம் இனி' (2503) எனப் பேசாமல் இருந்துவிடுகிறான்.

வசிட்டன் அமைச்சனாகச் செயல்படுவதைவிடக் குடும்ப நண்பனாகவே செயல்படுகிறான். அரசியல் நெறி பற்றி அறிவுரை கூறுகிற அவன், ஒரு கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பவனாகக் காணப்படவில்லை. பதவிக் காற்று வீசுகிற பக்கம் சாய்கிறவனாகவே நடந்து கொள்கிறான். இதனால் பரதனும் இராமனும் அவன் உரையை மறுத்துப் பேசும் நிலைக்கு ஆளாகிறான். அமைச்சர் அவையும் வேத்தவையும் தயரதன் ஆட்சியில் வெறும் சம்பிரதாய அமைப்புகளாக மாறியிருந்தன. தயரதனுடைய தவறுகளை அவை சுட்டிக்காட்டத் தவறிவிடுகின்றன. கைகேயியின் முறையற்ற செயல்களையும் அவை தடுக்கவில்லை. நெருக்கடியான நேரத்தில் தம் கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றாத, நிறைவேற்றுதற்கு ஆற்றலற்ற அமைப்புகளாகவே இந்த இரண்டும் சீரழிந்து நிற்கின்றன. மன்னன் விருப்பத்திற்கேற்ப நடந்து நடந்து தம் தகுதியையும் ஆற்றலையும் அவை இழந்துவிட்டன.

உரிமையற்ற மக்கள்

மக்களுக்காக ஏற்பட்ட அரசு காலப் போக்கில் மக்கள் குரல் எட்டாத உயரத்தில் போய் அமர்ந்து கொண்டது. மக்கள் விருப்பத்தை அறியாமல் — அறிந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் — மன்னன் விருப்பப்படி இயங்கத் தொடங்கிவிட்டது. கோசலத்தின் முடியாட்சியும் இந்த நிலையை அடைந்திருந்தது.

கைகேயியின் வரங்களால் இராமன் முடியிழந்து வனம் போகிறான் என்பதை அறிந்த அயோத்தி மக்கள் வருந்துவதோடு அமையாமல் அமைச்சரவையும் பேசத் துணியாதவற்றைப் பேசுகின்றனர்.

ஆதி அரசன் அருங் கேகயன் மகள்மேல்
காதல் முதிர கருத்து அழிந்தான் ஆம் (1708)

எனத் தயரதனை ஏசுகின்றனர்.

என்னே, நிருபன் இயற்கை இருந்தவா!
தன்தேர் இலாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து, முறை திறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால் பிழையாதோ மெய்? (1713)

என்று மன்னனுக்கும் அமைச்சர்களுக்கும்கூடத் தோன்றாத தயரதனின் முரண்பாட்டை அறிந்து எடுத்துக் காட்டுகின்றனர்.

முறை மகன் வனம் புக, மொழியைக் காக்கின்ற
இறைமகன் திருமனம் இரும்பு (1796)

என அரசியல் மரபைக் காப்பதைவிடத் தன் தனிப்பட்ட வாக்கைக் காப்பாற்றுவதையே பெரிதாக நினைத்த தயரதனின் குற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் வீதியில் எழுந்த இந்த நீதிக் குரல்கள் அரண்மனையை எட்ட முடியவில்லை. அவர்களை ஆளப்போகும் மன்னன் அவர்கள் விருப்பம் அறியாமலேயே அவர்கள்மீது திணிக்கப் படுகிறான்.

முழுவதே பிறந்து உலகு உடைய மொய்ம்பினோன்,
'உழுவை சேர் கானகத்து உறைவென் யான்' என,
எழுவதே? எழுதல் கண்டு இருப்பதே? இருந்து
அழுவதே? அழகிது இவ் அன்பு (17-1)

என, இக்கொடுமையைத் தடுத்து நிறுத்த முடியாத மக்கள் தங்கள் இயலாமையை நொந்து கொள்கின்றனர். ஆனால் அவர்கள் செயலற்றுப் போகவில்லை.

பெற்றுடைய மண் அவனுக்கு
ஈந்து, பிறந்து உலகம்
முற்று உடைய கோவைப்
பிரியாது மொய்த்து ஈண்டி
உற்று உறைதும் (1712)

என்று முடிவு செய்கின்றனர். இராமன் காடு புறப் பட்டபோது உடன் செல்கின்றனர். இதன் மூலம் மன்னனின் முடிவுக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டு கின்றனர். மன்னன் முடிவு மக்கள்கருத்தறியாத—அவர்கள் கருத்துக்கு எதிரான முடிவு. வரம்பிலா முடியாட்சியில் மன்னன் முடிவை மக்கள் கருத்து மாற்ற முடியாத நிலை யில் அவர்களுக்கு இருந்த ஒரே வழி அந்த மன்னனின் நாட்டையே புறக்கணிப்பதுதான். அதைத்தான் அயோத்தி மக்கள் செய்தனர். மக்களின் இந்தச் செயலின் மூலம் தயரதனின் ஆட்சியில் மக்கள் தம் கருத்துரிமையை இழந்திருந்தனர் என்பதையே கம்பன் உணர்த்துகிறான்.

தொகுப்புரை

முடியாட்சியின் அக்காலத்து வரையறைக்குள் தயரதன் ஒரு நல்ல மன்னனாகவே இருந்தான் என்பதில் ஐயமில்லை. அயோத்தியின் அரசியற் குழப்பங்களுக்கு அவன் மட்டுமே காரணம் இல்லை என்பதும் உண்மையே. தயரதன் ஆட்சியில் இருந்த குறைகள் அவனால் ஏற்பட்டவை அல்ல. வரம்பிலா முடியாட்சியில் இந்தக் குறைகள் தோன்றாமல் இரா. முடியாட்சியில் இவற்றுள் சில குறைகளாகவும் கருதப்படுவதில்லை. தயரதன் இக் குறைகளைக் களைய முற்படாதது மட்டுமல்லாமல் நெருக்கடியான நேரத்தில் உறுதியான மன்னனாக நடந்து கொள்ளாமல் சொந்த பலவீனங்களுக்குப் பலியாகிக் குழப்பங்களுக்குக் காரணமாகிவிடுகிறான். கடும் பற்றுள்ளத்தால் நாட்டு மக்களைவிடத் தன் மகனுடைய நலனையே அவன் மேலாகக் கருதுகிறான். அரசியல் மரபைவிடத் தன் சொந்த வாய்மையை உயர்வாகக் கருதுகிறான். இங்கும் எது வாய்மை என்பதை உணரும் அறிவற்றவனாகவே நடந்து கொள்கிறான். கைகேயியின் வரங்கள் தொடர்பாக அமைச்சர் அவையின் கருத்தையோ, மக்களின் கருத்தையோ அறிவதில் அவன் அக்கறை காட்டவில்லை. அவனுடைய அமைச்சரவையும்

நெருக்கடியான நேரத்தில் அவனுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டி அறிவுரைகூறும் பொறுப்பையும் கடமை யையும் செய்யாது செயலற்றுப் போகிறது, மக்களோ மன்னன் முடிவை மாற்றும் உரிமை அற்றிருக்கின்றனர். இவை எல்லாம் சேர்ந்து கைகேயியின் சூழ்ச்சி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்குகின்றன.

*மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்
(சிலம்பு. 3.2.103-104)

என்ற கடமை உணர்வு மறைந்து போய், அது அதிகாரத்தையும் ஆனந்தத்தையும் அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கிறது என்ற எண்ணம் முதிர்ந்துவிட்ட நிலை யில் அதிகார வேட்டையும், சூழ்ச்சியும் இயல்பாகவே தோன்றத்தான் செய்யும். இவை முடியாட்சியோடு சேர்ந்து வளர்ந்த தீமைகள். அயோத்தியின் அரசியற் குழப்பங்களை விவரிக்கும் போக்கில் கம்பன் தயரதனுடைய ஆட்சியின் குறைகளை மட்டுமல்ல, வரம்பிலா முடியாட்சியின் குறை களையும் சுட்டிக் காட்டுகிறான்.

வானர சமுதாயம்

கம்பன் காப்பியத்தில் அடுத்து இடம் பெறுவது கிட்கிந்தை அரசாகும், இது ஒரு சமுதாய அரசு; வானரர்க்கு மட்டுமே உரியது. கிட்கிந்தை அரசைப் பற்றிய கம்பனின் கருத்துக்களைக் காண்பதன்முன் வானரர் பற்றி அறிவது அவசியமாகிறது.

வானரர்களை, நரதேவர்கள், அலங்காரத்திற்காக வாலை அணிந்திருந்த நாகரைப் போன்ற சாதியார், ஆரியர்களோடு பன்னெடுங் காலமாகத் தொடர்பின்றி தென்னிந்தியாவில் குடியேறி வசித்த ஆரியர், ஆரிய நாகரிகத்தின் செல்வாக்குக்கு உட்பட்ட தக்கணத்து ஆதிவாசிகள், கவிஞனால் வானரர் எனக் கற்பனை செய்யப்பட்ட விந்திய மலைப் புறத்து ஆதிவாசிகள்,

திராவிட இனத்தவர், நீகுரோ இனத்தவர் என அறிஞர்கள் பலவாறு கூறுகின்றனர். வான்மீகி, கம்பன் இருவரின் வருணனையிலும் வானரர்கள் தோற்றத்தில் குரங்குகளாகவும் செயலில் மனிதர்களாகவும் காணப்படுகின்றனர்.* வான்மீகி அவர்களை 'அனாரியர்' என்கிறார்.

வானரர்கள் பேசுபவர்களாக இருந்தனர். அதுவும், 'யார் கொல் இச் சொல்லின் செல்வன்?' (3768) என்று இராமனே வியக்கும் அளவுக்கு நாநலம் மிக்கவனாக அனுமன் காட்டப்படுகிறான். இது ஒன்றே அவர்கள் குரங்குகள் அல்லர்; மனிதர்களே எனக் காட்டப் போதுமானது. மேலும் அவர்கள் ஆடை அணிந்திருந்தனர். தாரை கைம்மைக் கோலம் பூண்டு, 'பொங்கு, வெம் முலைகள் பூதக் கழுத்தொடு மறையப் போர்த்தி'க் கொண்டிருந்ததாகக் கம்பன் (4320) கூறுகிறான். அவர்கள் அரசு அமைத்திருந்தனர். அறிவிற் சிறந்த அனுமன் போன்ற அமைச்சர்களும், அரச தூதர்களும், பொறியியல், கட்டிடக் கலை வல்லுநர்களும், மருத்துவர்களும் அவர்களிடம் இருந்தனர். இவையெல்லாம் அவர்கள் மனிதர்களே என்பதைக் காட்டுகின்றன. கம்பனே ஓரிடத்தில் அவர்கள் மனிதர்களே என்பதைப் புலப்படுத்துகிறான். அனுமன் இராமனிடம், 'நாம் ஊனுடை மானிடம் ஆனது உண்மையால்' (3930) எனக் கூறுவதாகக் கம்பன் காட்டுகிறான். இதிலிருந்து அவர்கள் மனிதர்களே எனத் துணியலாம்.

பிறகு ஏன் அவர்கள் வானரர்களாக அழைக்கப்பட்டனர்? தொடக்க காலத்து மனிதர்களின் முகமும் உடல் அமைப்பும் மனிதக் குரங்கை ஒத்திருந்தன என மனிதயின நூலார் கூறுகின்றனர். இராமாயண காலத்தில் இவ்விதத் தோற்றம் கொண்ட பழங் குடியினர் இருந்

---

* ஆனந்த குருகே, இராமாயண சமூகம் (கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம், 1966), பக். 119-120.

திருக்கலாம். அவர்களே தோற்றம் கருதி வானரர்களாக அழைக்கப்பட்டிருக்கலாம். வேறொரு வகையாகவும் கருத இடமுண்டு. 'குரங்கு' என்பது கிட்கிந்தைச் சமுதாயத்தின் குலமரபுச் சின்னமாக (totem) இருந்திருக் லாம். குலமரபுச் சின்னங்களை அணிகலனாக அணி கின்ற வழக்கமும் பழங்குடியினரிடம் உண்டு. இவர்களும் அவ்வழக்கப்படி வாலை அலங்காரமாக அணிந்திருக்க லாம். பாண்டியர் குலமரபுச் சின்னம் காரணமாக 'மீனவர்' என்று அழைக்கப்பட்டதுபோல் இவர்களும் 'வானரர்' என அழைக்கப்பட்டிருக்கலாம். இவர்களை நேரே கண்டறியாதவரும், பிற்காலத்தவரும் இவர்களைக் குரங்குகள் என்றே கருதி விட்டனர். வான்மீகியும் கம்ப னும் காப்பியத்தின் வியப்புச் சுவை கருதி இவர்களைக் குரங்குகளாகவே காட்டினர் என்றே கொள்ள வேண்டும்.

வானரர்களை விலங்கு ஒழுக்கத்திலிருந்து முற்றிலும் விடுதலை அடையாத நாகரிக முதிர்ச்சியற்ற ஒரு சமுதாய மாகவே கம்பன் காட்டுகிறான். இராமன் சுக்கிரீவனைப் பற்றி, 'இப்பித்தாய விலங்கின் ஒழுக்கினைப்பேசலாமோ?' 3977) என்று கூறுவதிலிருந்தும், 'மத இயல் குரக்குச் செய்கை' (4077) என்றும்,

ஐய, நுங்கள் அருங்குலக் கற்பின், அப்
பொய்யில் மங்கையர்க்கு எய்ந்த புணர்ச்சிபோல்
செய்திலன், எமைத் தேமலர் மேலவன்;
எய்தின் எய்தியதாக, இயற்றினான் (4046)

மணமும் இல்லை மறைநெறி வந்தன;
குணமும் இல்லை குலமுதற்கு ஒத்தன;
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கு அலால் (4047)

என்றும் வாலி கூறுவதிலிருந்தும் இதனை அறியலாம். ஆனால் இச்சமுதாயத்தில் அனுமன் தாரை போன்ற விதி விலக்குகளும் இருந்தன. இந்தப் பின்னணியில்தான் கிட்கிந்தை அரசை நாம் காண வேண்டும்.

கிட்கிந்தை அரசு

பாரதத்தில் கிட்கிந்தை அமைந்திருந்த இடத்தைக் கண்டு பிடிப்பதில் அறிஞர்கள் சிரமப்படுகின்றனர். இருப்பினும் துங்கபத்திரையின் இடது தீரத்திலுள்ள கிட்கிந்தையே இராமாயணத்தில் கூறப்படும் கிட்கிந்தை எனக் கருதலாம்.

மேவுகுன்றின்மேல்' *(3843)*, 'மரங்கிளர் அருவிக் குன்றம்' *(4132)*, 'அகல் மலை' *(4146)*, 'சேணுயர் கிட்கிந்தை' *(4283)* என்ற கம்பனின் குறிப்புகளிலிருந்து கிட்கிந்தை ஓர் உயர்ந்த, அகன்ற. இயற்கை வளம் நிறைந்த மலையின் மேல் அமைந்திருந்தது எனத் தெரிகிறது,

கிட்கிந்தையில் வானரர் தவிர வேறு இனங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே அது ஒரு சமுதாய அரசாக இருந்தது என அறியலாம். பொதுவான சமயம், இனம், மொழி, மரபு ஆகியவற்றின் அடிப்படையில் இணைந்து வாழும் மனிதக் கூட்டம் சமுதாயம் எனப்படும் என்று அரசியல் நூலார் கூறுகின்றனர்.

கிட்கிந்தையில் வாலி, சுக்கிரீவன் ஆகியோரது ஆட்சி மாறி மாறி நிகழ்கிறது. எனவே இவ்விருவரது ஆட்சி பற்றியும் தனித் தனியே காண்பது நலம்.

வாலியின் அரசு

இராமன் வாலியின் அரசை 'நிரம்பினான் ஒருவன் காத்த நிறையரசு' *(4143)* என்று பாராட்டுகிறான். இதனால் வாலி அறிவு, ஆண்மை, பெருமை என்னும் குணங்களால் நிரம்பியவன் என்றும் அரசுக்கு வேண்டிய அங்கங்களெல்லாம் நிறைவாகப் பெற்றது அவன் அரசு என்றும் அறியலாம். அவன் சிவ பக்தன் *(3822)*; பாற்கடலைத் தனியொருவனாகக் கடைந்தவன் *(3823)*;

நிலம், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களின் ஆற்றலை உடையவன் (3824); தன்னோடு போர் தொடுக்க வருவோரின் வலிமையில் பாதியைத் தான் அடைகிறவன் (3825); இராவணனையும் வென்று அடக்கியவன் (3826); எழுபது வெள்ளம் சேனைகளை உடையவன் (3831); எமனும் கடப்பதற்கு அரிய ஆணையை உடையவன் (3834). இத்தகையவன் அறத்தைக் காக்கும் இராமனின் வில்லுக்கு இரையாகிறான். அதற்கான காரணத்தைக் கம்பன் விவரிக்கிறான்.

ஒருமுறை வானர இனத்தின் பகைவனாகிய மாயாவி என்ற அசுரன் வாலியைப் போருக்கு அறைகூவி அழைத்தான். வாலியும் அந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டு அவனோடு போரிடச் சென்றான். மாயாவி வாலியின் வலிமைக்கு முன் நிற்க முடியாமல் தோற்றோடி ஒரு பிலத்திற்குள் புகுந்துகொண்டான். அதைக் கண்ட வாலி தன் தம்பியாகிய சுக்கிரீவனிடம், 'அப்பிலனுள். எய்தி, யான் நொய்தின் அங்கவற் கொணர்வென்; நோன்மையாய்! செய்தி, காவல்நீ சிறிது போழ்து''(3837) என்று கூறிவிட்டு அப் பிலத்தினுட் புகுந்தான். உள்ளே சென்ற வாலி இருபத்தெட்டு மாதமாகியும் வெளியில் வராததைக் கண்டு சுக்கிரீவன் துன்பமடைந்து கலங்கினான். வாலி இறந்திருக்க வேண்டும் என்று கருதிய அமைச்சர்கள் சுக்கிரீவனைத் தேற்றி, நீ இளவரசு ஆகையால், இனி நீயே அரசாட்சியை ஏற்றுக் கிட்கிந்தையைக் காக்க வேண்டும்' என்று வேண்டினர். சுக்கிரீவனோ 'இது குற்றமாகும்' என்று அவர்கள் வேண்டுகோளை மறுத்தான். 'நானும் இப்பிலத்துட் புகுந்து என் தமையனைத் தேடுவேன்; மாயாவி அவனைக் கொன்றிருந்தால் அவனை நான் கொல்வேன்; அவ்வாறு அவனைக் கொல்ல முடியாவிட்டால் அப்போரில் என் உயிர் துறப்பேன்' என்று கூறி அப் பிலத்தின் உள்ளே புக முற்பட்டான். அமைச்சர்களும் படைத் தலைவர்களும்

பெரியோர்களும் அவனைத் தடுத்து, அவன் கடமையை உணர்த்தி அரசாட்சியை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தினர். சுக்கிரீவனும் அவர்கள் வற்புறுத்தலுக்கு இணங்கி அரசாட்சியை ஏற்றுக் கொண்டான்.

வாலியை மாயாவி கொன்றிருப்பான் என்று எண்ணிய வானரர்கள் அவன் வெளியே வந்தால் தமக்கு ஆபத்து என்று உணர்ந்து, அவன் வெளியே வராமல் தடுக்கப் பாறைகளை அடுக்கிப் பிலத்தின் வாயை மூடினர். ஆனால் உண்மையில் வாலி சாகவில்லை. அவன் மாயாவியைக் கொன்றுவிட்டு வெளியே வர முயன்ற போது பிலத்தின் வாய் அடைக்கப்பட்டிருப்பது கண்டு, 'தம்பி காவல் காத்த முறை நன்றாக இருக்கிறது' என்று சினம் கொண்டு பாறைகளை உதைத்துத் தள்ளி வெளியே வந்தான். கிட்கிந்தையை அடைந்த வாலியைக் கண்டதும் சுக்கிரீவன் அவன் அடியில் விழுந்து வணங்கி, தனக்கு விருப்பமில்லாமல் இருந்தும் அரசாட்சியைத் தான் ஏற்றுக் கொள்ள நேர்ந்த நிலையை விளக்கினான். இருப்பினும், அரசாட்சியை ஏற்றது தவறுதான் என்று கூறிப் பொறுத் தருள வேண்டினான்.

சுக்கிரீவன் கூறியதை நம்பாத வாலி அவனை ஏசிய தோடன்றி அவனைக் குத்திக் குமைக்கத் தொடங்கினான். சுக்கிரீவன் அதைத் தாங்க முடியாமல் தப்பி ஓடியும் வாலி அவனை விடாது பின் தொடர்ந்து பற்றிப் பிடித்துக் கொல்ல முயன்றபோது சுக்கிரீவன் அவனிடத்திலிருந்து தப்பி, மதங்க முனிவனின் சாபத்தால் வாலி வர முடியாத ருசியமூக பருவதத்தில் வந்து ஒளிந்து கொண்டான். திரும்பிச் சென்ற வாலி சுக்கிரீவனுடைய மனைவியான உருமையை விரும்பிக் கவர்ந்தெடுத்துக் கொண்டான்.

சீதையை மீட்பதற்குச் சுக்கிரீவனின் துணை நாடி வந்த இராமனோடு சுக்கிரீவன் நட்புக் கொண்டு, வாலி யின் கொடுமையிலிருந்து தன்னைக் காக்கவேண்டும்

என்று அவனிடம் அடைக்கலம் வேண்டுகிறான். இராமனும் அவனுக்கு அடைக்கலம் தருகிறான். வாலி சுக்கிரீவனுக்கு இழைத்த கொடுமைகளை அனுமன் வாயிலாக, விவரமாக அறிந்த இராமன் சினம் கொண்டு, 'வாலியைக் கொன்று அரசும் உன் தாரமும் மீட்டுத் தருவேன்' என்று சுக்கிரீவனிடம் சூளுரைக்கிறான். அவ்வாறே வாலியைக் கொன்று அரசையும் அவன் தாரத்தையும் மீட்டுத் தருகிறான்.

இராமன் வாலியைக்கொன்றதற்கு இரண்டு காரணங்களைக் கூறுகிறான். ஒன்று, சுக்கிரீவன் அரசாட்சியை ஏற்றுக்கொள்ள நேர்ந்த சூழ்நிலையை எடுத்துரைத்தும் அதனை நம்பாமல், தம்பி என்றும் இரக்கம் காட்டாமல் அவனைத் துன்புறுத்தியது; மற்றொன்று, தம்பியின் தாரம் என்றும் பாராது சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்தது.

இராமனின் குற்றச்சாட்டுக்கு எதிர்மொழி கூற முனைந்த வாலி முதல் குற்றத்திற்கு மறுமொழி கூற இயலாமல் இரண்டாவது குற்றத்திற்கு மட்டும் மறுமொழி கூறுகிறான். இராமனைப் போன்ற உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கு விதித்ததைப்போல் ஒருவனை மணந்து அந்த ஒருவனையே புணரும் கற்புநெறியைப் பிரமன் தங்களுக்கு விதிக்கவில்லை என்றும், நேர்ந்தால் நேர்ந்தபடி துய்ப்பவர்களாகவே தங்களைப் படைத்திருக்கிறான் என்றும் கூறுகிறான்.

> **ஐய! நுங்கள் அருங்குலக் கற்பின், அப்**
> **பொய்யில் மங்கையர்க்கு எய்ந்த புணர்ச்சிபோல்**
> **செய்திலன்: எமைத் தேமலர் மேலவன்;**
> **எய்தின் எய்தியதாக, இயற்றினான் (4046)**

மேலும், மனம் போன வழியே செல்வதுதான் தங்கள் ஒழுக்கம் என்றும் வேதநெறிப்படி செய்யும் மணமோ

உயர் குலத்தவர்க்குரிய குணமோ தங்கட்கு இல்லை என்றும் கூறுகிறான்.

> மணமும் இல்லை மறைநெறி வந்தன;
> குணமும் இல்லை குல முதற்கு ஒத்தன;
> உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கு அலால்
> (4047)

முதல் குற்றச்சாட்டிற்கு மறுமொழி கூறாமல் நழுவுவதிலிருந்து வாலி அந்தக் குற்றத்திற்குரியவன் என்பதை அறியலாம். சுக்கிரீவன் தான் அரசாட்சியை ஏற்கநேர்ந்த சூழ்நிலையை உண்மையாகவே எடுத்துரைத்தும் வாலி அவனை நம்பவில்லை. சுக்கிரீவனை நம்பாதவன் அமைச்சர்களை விசாரித்து உண்மையைத் தெரிந்து கொண்டிருக்கலாம். அதையும் அவன் செய்யவில்லை. சினமும் ஐயமும் அவன் அறிவை அழித்து விட்டன.

இரண்டாவது குற்றச்சாட்டிற்கு வாலி சமாதானம் கூற முற்படுகிறான். வானரர்களுக்குக் கற்புப் போன்ற ஒழுக்கங்களைப் பிரமன் விதிக்கவில்லையாம். மனம் விரும்பியபடி இன்பம் நுகர்வது அவர்கள் வழக்கமாம். இந்தச் சமாதானத்தின் போலித்தன்மையை இராமன் தோலுரித்துக் காட்டுகிறான்.

வாலி இராமனை ஏசும் போது, 'கோவியல் தருமம்' (4020) பற்றியும், 'மனுநெறி' (4021) பற்றியும், 'ஒழுக்கம்' (4022) பற்றியும், 'ஆண்மைத் துறை' பற்றியும்' 'தொன்மையின் நன்னூல்' பற்றியும், 'அறம்' (4027) பற்றியும் 'நூல் இயற்கை' (4031) பற்றியும், 'சீலம்' (4031) பற்றியும் குறிப்பிடுகிறான். இதிலிருந்து வாலி இவற்றை எல்லாம் அறிந்திருக்கிறான் என்பது தெரிகிறது. இவற்றை எல்லாம் கற்றிருந்தும் அதற்குத் தக நில்லாதது மட்டுமன்றி, இவற்றையெல்லாம் பிரமன் தங்கள் குலத்திற்கு விதிக்கவில்லை என்று கூறித் தன் இழிந்த ஒழுக்கத்

துக்குக் குலத்தைக் காரணம் காட்டித் தப்பிக்க முயல்கிறான்.

அறநெறி பிறப்பால் வருவதல்ல; அறிவால் அறிவது. அறநெறியெல்லாம் அறிந்த வாலி அவற்றுக்கு மாறான தவறுகளையும் செய்துவிட்டுத் தான் செய்வது சரியே என்று சாதிப்பது முறையோ என இராமன் வாலியைக் கேட்கிறான்.

பொறியின் யாக்கையதோ? புலன் நோக்கிய
அறிவின் மேலது அன்றோ, அறத்தாறுதான்?
நெறியும் நீர்மையும் நேரிது உணர்ந்த நீ
பெறுதியோ, பிழை உற்றுறு பெற்றிதான்? (4050)

இராமனின் இந்த வினாவில் உள்ள நியாயத்தை உணர்ந்த வாலி இதற்கு மறுமொழி தர இயலாமல் 'அணையது ஆக' (4058) எனத் தன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறான். 'தீயன பொறுத்தி' (4061) என மன்னிக்கவும் வேண்டுகிறான்.

வாலி வரம்பிலாப் பேராற்றல் பெற்றவன்தான். இருப்பினும் இந்த ஆற்றலினால் விளைந்த செருக்கு அவன் அறிவை மறைக்கிறது. சுக்கிரீவன் இராமனின் துணை பெற்றபின் வாலியைப் போருக்கு அழைத்த போது அதனை அறிந்த அவன் மனைவி தாரை,

கொற்றவ! நின் பெருங்
குவவுத் தோள் வலிக்கு
இற்றனன், முன்னை நாள்,
ஈடு உண்டு ஏகினான்;
பெற்றிலன் பெருந்திறல்;
பெயர்த்தும் போர் செயற்கு
உற்றது, நெடுந்துணை
உடைமையால் (3958)

என்று கூறி வாலியைத் தடுத்தும் அவன் அவளுடைய உரையை மதிக்காமல்,

> **ஆற்றலில் அமரரும் அவுணர் யாவரும்**
> **தோற்றனர்; எனையவர் சொலற் பாலரோ?**
> **கூற்றும் என் பெயர்சொலக் குலையும்; ஆர், இனி**
> **மாற்றவர்க்கு ஆகி வந்து எதிரும் மாண்பினார்?**

எனத் தற்பெருமை பேசுகிறான். அவன் செருக்கு மாற்றான் வலிமையை அறிய விடாமல் தடுக்கிறது.

சுக்கிரீவனுக்குத் துணையாக வந்திருப்பவன் இராமன் என்ற செய்தியை 'துன்னிய அன்பினர்' (3964) தாரையிடம் வந்து சொல்ல அவள் அதை அறிந்திருக்கிறாள். அரசன் என்ற முறையில் அந்தச் செய்தியை வாலிதான் முதலில் அறிந்திருக்க வேண்டும். அவன் அதை அறியாதது மட்டுமல்ல அதை மறுக்கவும் செய்கிறான். இந்தத் 'துன்னிய அன்பினர்' ஒற்றர்களாகவோ, அமைச்சர்களாகவோ இருக்கலாம். தாரையிடம் செய்தியை உரைத்தவர்கள், இது யாருக்குத் தெரிந்திருக்க வேண்டுமோ அவனுக்கு—அரசனாகிய வாலிக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. 'துன்னிய அன்பினரை' அவன் இழந்துவிட்டான் என்பதையே இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது. அவன் வலிமையும் சினமும் அமைச்சர்களுக்கும் குடிகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்திவிட்டன. அவனை நெருங்க எல்லோரும் அஞ்சினர். அனுமனே இந்த நிலைமையை உணர்த்துகிறான். உண்மையை விளக்கியும் அதனை ஏற்காது, புரியாத குற்றத்திற்காகச் சுக்கிரீவனை வாலி கொடுமையாக அடித்துத் துன்புறுத்தியபோது குரங்குக் குலமே அவனை அஞ்சிக் குடல் கலங்கி ஒடுங்கியதாக இராமனிடம் அனுமன் கூறுகிறான்.

> **அடல் கடந்த தோள் அவனை அஞ்சி, வெங்**
> **குடல் கலங்கி, எம் குலம் ஒடுங்க, முன்**
> **கடல் கடைந்த அக் கரதலங்களால்,**
> **உடல் கடைந்தனன்; இவன் உலைந்தனன். (3849)**

இந்த அச்சமே உண்மையை வாலியிடம் உரைக்கவிடாமல் அவர்களைத் தடுத்திருக்கிறது; இந்த அச்சமே வாலியைக்கைவிட்டு விட்டுச்சுக்கிரீவனோடு சேர்ந்துவெளியேற அனுமன் போன்ற அமைச்சர்களையும் பிறரையும் தூண்டியிருக்கிறது. வாலி இனி அரசனாக இருக்கத் தகுதி அற்றவன் என அவர்கள் முடிவு செய்துவிட்டனர்.

நாகரிக முதிர்ச்சி அடையாமல், விலங்குக்கும் மனிதனுக்கும் இடையில் ஊசலாடும் ஒரு சமுதாயத்தின் தலைவன் வாலி. அவன் விலங்கியல்பிலிருந்து வேறுபட்டு 'நலம்கொள் தேவரின் தோன்றி, நவைஅறக் கலங்கலா அறநன்னெறி' (4049) கண்டவன். அந்த அறிவைக் கொண்டு அவனுடைய சமுதாயத்தின் விலங்கு ஒழுக்கத்தைத் திருத்தி உயர்த்தும் வாய்ப்பு அவனுக்கு இருந்தது. ஆனால் அவன் இந்த வாய்ப்பைத் தவற விட்டது மட்டுமன்றித் தானே பிறர் தாரம் கவர்ந்து நுகரும் இழிந்த ஒழுக்கத்தில் ஈடுபட்டு அதை நியாயப் படுத்திப் பேசவும் செய்கிறான். இதனால் அவன் தனக்கு மட்டுமல்ல தன் சமுதாயத்துக்கும் தீங்கிழைத்தவனாகிறான். அவன் தவறுகள் எல்லாம் சேர்ந்து அவன் அழிவுக்குக் காரணமாகின்றன.

சுக்கிரீவனின் குறைகள்

வாலியை நோக்கச் சுக்கிரீவன் நல்லவனே. அதனால் தான் அவனுடைய நட்பைப் பெறுமாறு கவந்தனும் சவரியும் இராமனுக்கு வழிகாட்டுகின்றனர். மாயாவியைப் பின் தொடர்ந்து சென்ற தன் தமையன் நெடு நாளாகியும் மீளாதது கண்டு அவன் வருந்துகிறான். வாலி இறந்திருப்பான் என்று கருதிய அமைச்சரும் பிறரும் அரசாட்சியை ஏற்றுக்கொள் என்று வேண்டியபோது,

வானம் ஆள என் தம்முனை வைத்தவன்
தானும் மாள, கிளையும் இறத் தடிந்து,
யானும் மாள்வென்; இருந்து அரசு ஆள்கிலென்;
ஊனம் ஆன உரை பகர்ந்தீர் (4035)

என்று அவர்களுடைய வேண்டுகோளை மறுக்கிறான். இது அவனுடைய சகோதர பாசத்தைக் காட்டுவதோடு, அரச பதவி மீது அவனுக்கு ஆசை இல்லை என்பதையும் காடடுகிறது. எல்லோரும் வற்புறுத்தவே அரசாட்சியை மனமின்றி ஏற்கிறான்.

வாலி மீண்டு வந்ததும் அவன் கால் பணிந்து, தான் அரசாட்சி ஏற்ற சூழ்நிலையை விளக்குகிறான். அவன் மீது குற்றம் இல்லை எனினும்,

> ஆணை அஞ்சி, இவ் அரசை எய்தி வாழ்
> நாண் இலாதஎன் நவையை, நல்குவாய் (3848)

என்று தன்னைப் பொறுத்தருளுமாறும் வேண்டுகிறான். இராமன் வாளியால் வாலி வீழ்ந்தபோது தன்னைக் கொடுமை செய்தவன் என்பதையும் மறந்து, 'உடன்பிறப்பு என்னும் பாசத்தால் பிணிப்புண்டு, பசுங்கண் நேசத் தாரைகள் சொரிதர, நெடுநிலம் சேர்கிறான்.' (4011) ஆனால் இத்தகையவனிடமும் குறைகள் இருந்தன.

சுக்கிரீவனை இராமனிடம் அடைக்கலம் கொடுத்த போது,

> அரசியல் பாரம் பூரித்து
> அயர்ந்தனை இகழாது, ஐயன்
> மரைமலர்ப் பாதம் நீங்கா
> வாழுதி (4078)

என்று வாலி சுக்கிரீவனுக்கு அறிவுரை கூறுகிறான். வாலிக்கு எந்த ஐயம் தோன்றியதோ அதை மெய்ப்பிப் பவனாகவே சுக்கிரீவன் நடந்து கொள்கிறான்.

வாலி இறந்த பின் இராமன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டிக் கார்காலம் முடிந்ததும் தனக்கு உதவி செய்யச் சேனையோடு வருமாறு கூறி அனுப்புகிறான், அவ்வாறே வருவதாகக் கூறிச் சென்ற சுக்கிரீவன்

வாக்களித்தபடி கார்காலம் முடிந்தும் வரவில்லை. ஐயம் கொண்டபடியே 'அரசியல் பாரம் பூரித்து அயர்ந்து' போகிறான். சுக்கிரீவன் எந்த நிலையில் இருந்தான் என்பதை,

தெள்ளியோர் உதவ, பெருஞ் செல்வம் ஆம்
கள்ளினால் அதிகம் களித்தான் (4287)

தித்தியா நின்ற செங்கிடை வாய்ச்சியர்
முத்தவாள் நகை முள் எயிற்று ஊறு தேன்,
பித்தும், மாலும், பிறவும் பெருக்கலால்,
மத்த வாரணம் என்ன மயங்கினான் (4289)

என்று கம்பன் காட்டுகிறான்.

வாக்கு மறந்த சுக்கிரீவன்மீது பெருஞ்சினம் கொண்டு இலக்குவன் வருவதை அங்கதன் சுக்கிரீவனுக்குத் தெரிவிக்கச் சென்றபோது,

இனைய மாற்றம் இசைத்தனன் என்பதோர்
நினைவு இலான், நெடுஞ் செல்வம் நெருக்கவும்,
நனைநறுந் துளி நஞ்சு மயக்கவும்,
தனை உணர்ந்திலன் (4293)

ஆகவே மெல்லணையில் கிடக்கிறான்.

சுக்கிரீவன் இவ்வாறு பொறுப்புணர்வற்று மயக்கங்களில் ஆழ்ந்து கிடந்ததை தாரையும்,

தேவி நீங்க, அத் தேவரின் சீரியோன்
ஆவி நீங்கினன்போல் அயர்வான்; அது
பாவியர்து பருகுதிர் போலும், நும்
காவி நான்மலர் கண்ணியர் காதல் நீர் (4299)

என்று கண்டிக்கிறாள்.

இறக்கும் வரை தம்மை யாரும் பதவியிலிருந்து இறக்க முடியாது என்ற எண்ணமே பலரைப் பொறுப்புணர்விலிருந்து வழுவச் செய்கிறது. இது முடியாட்சியின்

குறைகளுள் ஒன்று. மேலும் முடியாட்சியில் மக்களுக்குப் பணி செய்வது என்ற கடமை மறந்துபோய், பதவி தரும் செல்வச் செழிப்பில் களிக்கின்ற நிலையும் ஏற்படுவது இயல்பு. சுக்கிரீவன் போன்ற நல்லவர்களே இத்தகைய பதவிச் சுகத்தில் கடமை மறந்துவிடுவர் என்றால் மற்றவர்களைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. சுக்கிரீவனின் இச்செயல்களை விவரிப்பதன் மூலம் முடியாட்சியில் நேரக் கூடிய இத்தகைய குறைகளைக் கம்பன் புலப்படுத்துகிறான்.

தொகுப்புரை

செருக்கும் சினமும் சிறுமையாகிய காமமும் அரசனாக இருப்போன் கடிய வேண்டிய குற்றங்களாகும் என வள்ளுவர் கூறுவார்.

> **செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்**
> **பெருக்கம் பெருமித நீர்த்து** (431)

வாலியிடம் இம்மூன்று குற்றங்களும் அமைந்திருந்தன. அவன் தன் குற்றம் காணாமல் பிறர் குற்றம் காண்பவனாகவும் (குறள்.436) இருக்கிறான். கல்வி கற்றிருந்தும் அதற்குத் தக அவன் நிற்கவில்லை. தம்பியின் தாரத்தையே கவர்ந்து வலிந்து துய்க்கும் இழிந்த ஒழுக்கத்தில் ஈடுபடுகிறான். யார் பேச்சையும் மதிக்காதவனாகவும், இரக்கமற்றவனாகவும் நடந்துகொள்கிறான். இவையெல்லாம் ஓர் அரசனுக்கு இருக்கக் கூடாத பண்புகள். இந்தக் குற்றங்களே அவன் அழிவுக்குக் காரணமாகின்றன. அரசனின் தீய ஒழுக்கங்கள் அவன் ஆட்சியை எவ்வாறு சீரழிக்கும் என்பதை வாலியின் வாயிலாகக் காட்டும் கம்பன், பக்குவம் பெறாதவன் பதவி பெற்றால் பதவிச் சுகத்தில் மயங்கித் தவறு செய்ய வாய்ப்புண்டு என்பதைச் சுக்கிரீவன் வாயிலாக உணர்த்துகிறான்.

நாகரிக முதிர்ச்சி அடையாத அரசில் இத்தகைய குற்றங்கள் தோன்றுவதில் வியப்பில்லை. அந்த அரசு மாற்ற முடியாத முடியாட்சியாகவும் அமைந்துவிட்டால் அந்தச் சமுதாயம் எத்தகைய துன்பங்களை அனுபவிக்கும் என்பதையும் கிட்கிந்தை அரசின் மூலம் கம்பன் உணர்த்திக் காட்டுகிறான்.

இலங்கை அரசு

இலங்காபுரி திரிகூட மலையின் சிகரத்தில் அமைந்திருந்தது என்றும் அது பார்ப்பதற்கு அமராவதி போல் அழகாக இருந்தது என்றும் வான்மீகி (V.I. 596—601) கூறுகிறார். தெய்வத் தச்சனான விசுவகர்மன் பூர்வத்தில் இந்திரனுக்காக நிருமித்த இலங்காபுரியில் மாலியவான் முதலிய பூர்வீக இராக்கதர்கள் குடியேறி இருந்தனர் என்றும் அவர்களைத் திருமால் வென்று துரத்திய பின்பு அந்நகரத்தில் குபேரன் வசித்தான் என்றும் பிறகு குபேரனை அகற்றிவிட்டு இராவணன் அரக்கர்களுடனே அதில் குடியேறினன் எனவும் அவருடைய குறிப்புக்களிலிருந்து தெரிகிறது.

பிரமன் அருகில் நின்று செய்ய வேண்டியவற்றை முறையே சொல்லிவரத் தேவசிற்பியான விசுவகர்மன் பொன் போன்ற உயர்ந்த மலை மீது, இரத்தினங்களைப் பதித்துப் பலநாள் முயன்று இலங்காபுரியை அருமையாகப் படைத்தான் என்று கம்பன் கூறுகிறான்.

பொன்னின் மால் வரை மேல் மணி
பொழிந்தன பொருவ
உன்னி, நான்முகத்து ஒருவன் நின்று
ஊழ் முறை உரைப்ப,
பன்னி, நாள் பல பணி உழந்து
அரிதினின் படைத்தான்
சொன்ன வானவர் தச்சனாம்,
இந்நகர் துதிப்பான். (4862)

இலங்கையின் குடிகளாகிய இராக்கதர்களைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. இராக்கதர் இலங்கைப் பௌத்தர்கள் என்றும் தெற்கில் குடியேறிய ஆரியர் என்றும் திராவிட இனத்தவர் என்றும் நாகரிகம் கொண்ட பரதவ குலத்தினர் என்றும் நாடு கடத்தப்பட்ட பிராமணர் என்றும் பண்டைய இந்தியாவின் ஆதிவாசிகள் என்றும் அந்தமான் தீவு, ஆஸ்திரேலியா என்ற இடங்களில் வாழும் ஆதிவாசிகளின் மூதாதையர் என்றும் கொண்டர் என்ற வகுப்பினர் என்றும் மத்திய இந்தியாவில் உள்ள ஆதிவாசிகள் என்றும் அறிஞர்கள் பல்வேறு வகையாகக் கூறுகின்றனர்.*

வால்மீகியின்படி இராக்கதர் பிராமண, சத்திரிய குலங்களின் கலப்படச் சாதியாராகக் காணப்படுகின்றனர். அவர்கள் கோரைப் பற்கள் உடையவர் என்றும் நரமாமிச பட்சிணிகள் என்றும் போரில் வல்லவர்கள் என்றும் ஆரியர்க்கும் வானரர்க்கும் பகைவர்கள் என்றும் யாகங்களை அழிப்பவர் என்றும் வான்மீகி கூறுகிறார்.

சூர்ப்பணகை இராமன் அழகில் மயங்கித் தன்னை மணந்து கொள்ளுமாறு இராமனை வேண்டியபோது, 'அந்தணர் பாவை நீ; யான் அரசிரில் வந்தேன்' (2780) என்று இராமன் கூற, தன் தந்தை அந்தணனாயினும் தாய் சால கடங்கர் என்னும் அரக்க அரசர் மரபில் வந்தவள் என்று சூர்ப்பணகை கூறுகிறாள். பிரம புத்திரரான புலத்தியனுக்குத் திருணபிந்து என்னும் அரச முனியின் மகள் வயிற்றில் பிறந்த விச்சிரவசுவின் பிள்ளைகளே இராவணனும் சூர்ப்பணகையும். சால கடங்கர் மரபில் வந்த கேகசியே அவர்களுடைய தாய்.

---

* ஆனந்த குருகே, மே.கு., ப.121

ஆரண மறையோன் எந்தை;
அருந்ததிக் கற்பின் எம்மோய்,
தாரணி புரந்த சால
கடங்கட மன்னன் தையல்; (2781)

என்று சூர்ப்பணகை கூறுவதாகக் கம்பன் குறிப்பிடு கிறான்.

இலங்கையின் அழகையும் செல்வச் செழிப்பையும் அரக்கரின் ஆனந்த வாழ்க்கையையும் கண்ட அனுமன்,

'மாண்டது ஓர் நலத்திற்று ஆம்' என்று
உணர்த்துதல் வாய்மைத்து அன்றால்;
வேண்டிய வேண்டின் எய்தி,
வெறுப்பின்றி விழைந்து துய்க்கும்
ஈண்ட அரும் போக இன்பம்
ஈறு இலது யாண்டுக் கண்டாம்
ஆண்டு அது துறக்கம்; அஃதே
அருமறைத் துணிவும் அம்மா! (4833)

என்று வியக்கிறான். பின்னர், 'நரகம் ஒக்குமால் நல் நெடுந் துறக்கம் இந் நகர்க்கு' என்று முடிவு செய்கிறான்.

இலங்கையின் குடிகளாகிய அரக்கர் இரவும் பகலும் ஆடுவதும் பாடுவதுமாக இன்பம் நுகர்கின்றனர். கவலைப் படுவோர் ஒருவர் கூட இலங்கையில் இல்லாதது கண்டு அனுமன் வியப்படைகிறான்.

பளிக்கு மாளிகைத்
தலந்தொறும், இடந்தொறும், பசுந்தேன்
துளிக்கும் கற்பகத்
தன்நறுஞ் சோலைகள் தோறும்,
அளிக்கும் தேறல் உண்டு,
ஆடுநர் பாடுநர் ஆகி,
களிக்கின்றார் அலால்
கவல்கின்றார் ஒருவரைக் காணேன் (4837)

இந்தச் செல்வச்செழிப்புக்கும் கவலையற்ற வாழ்க்கைக்கும் காரணத்தையும் அனுமனே கூறுகிறான். இந்தச் செல்வமும் வாழ்க்கையும் இராவணன் மெய்ம்மை தவறாமல் ஆற்றிய தவத்திற்கு வரமாகப் பிரமனால் பெற்றது என்பதை,

> தெய்வத் தச்சனைப்
> புகழ்துமோ? செங்கண் வாள் அரக்கன்
> மெய் ஒத்து ஆற்றிய
> தவத்தையே வியத்துமோ? விரிஞ்சன்
> ஐயப் பாடிலா
> வரத்தையே மதித்துமோ? (4852)

என்று அனுமன் வியப்பதிலிருந்து அறிய முடிகிறது.

> திறத் திறனாலே,
> செய்தவம் முற்றித் திருவுற்றாய்,
> மறத் திறனாலோ?....
> அறத்திறனாலே எய்தினை அன்றோ? (3246)

என்ற மாரீசன் உரையாலும் இதனை அறியலாம்.

இராவணன் தான் செய்த தவத்தின் பயனாகப் பிரமனிடமிருந்து மூன்றரைக் கோடி வாழ்நாளும் ('அரை கடை இட்டு அமைவுற்ற முக்கோடி ஆயு,9944)', முப்பத்து முக்கோடித் தேவர்கள் யாராலும் வெல்லப்படாத தன்மையும் (9899), சிவபெருமானிடமிருந்து .சந்திரகாசம் என்ற வாளும் (5188), கவசமும்(7347)வரங்களாகப் பெற்றவன். இந்த வர பலத்தால் மூன்று உலகங்களையும் வென்றவன் (5182). ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன் (6118). அமர் பொருமேல் வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா விறலோன். இத்தகைய பேராற்றலும் பேரறிவும் படைத்த இராவணன் வீழ்ச்சி அடைகிறான். அவன் வீழ்ச்சிக்கு என்ன காரணம்?

இராவணன் குறைகள்

இராவணன் வரங்களினால் பெற்ற வலிமையால் ஆணவம் கொண்டான். வழியலா வழிமேல் செல்லத் தொடங்கினான். அதுவே அவன் அழிவுக்கு வழி வகுத்து விட்டது. வரங்களைப் பெற்றவன் சாபங்களைப் பெறத் தொடங்கினான். ஒரு முறை இராவணன் தன் வழியில் இடையூறாக நின்றதென்று, தான் வணங்கும் சிவபெருமான் வீற்றிருக்கும் மலை என்றும் எண்ணாமல் அதைப் பேர்த்து எறிய முயன்றான். அதனால், 'ஓர் விலங்கிடம் தோற்பாய்' என்று நந்தியால் சபிக்கப் பட்டான். வேதவதி என்ற பெண்ணிடம் தகாத முறையில் நடக்க, 'உன்னை அழிக்கும் நோயாக நான் தோன்றுவேன்' என்று அவளால் சபிக்கப்பட்டான் (6150, 6151). இந்த ஆணவத்தோடு சீதைபால் அவன் கொண்ட தகாத காமமும் அவன் அழிவுக்குக் காரணமாயிற்று. இந்த இரண்டு குற்றங்களும் மேலும் மேலும் பல குற்றங்களைப் புரிய அவனைத் தூண்டின, அவன் வழி அலா வழிமேல் மேலும் மேலும் முன்னேறித் தன் அழிவை நோக்கி விரையலானான். இலக்குவன் அவன் குற்றங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறான்.

> **தேசியைச் சிறையில் வைத்தான்;**
> **தேவரை இடுக்கண் செய்தான்;**
> **பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான்;**
> **மன்னுயிர் புடைத்துத் தின்றான்;**
> **ஆசையின் அளவும், எல்லா**
> **உலகமும் தானே ஆள்வான்,**
> **வாசவன் திருவும் கொண்டான்;**
> **வழி அலா வழிமேல் செல்வான். (6977)**

இனி அவன் இழைத்த குற்றங்களை ஒவ்வொன்றாய்க் காண்போம்,

தேவரை இடுக்கண் செய்தான்

வர பலத்தால் ஆணவம் கொண்ட இராவணன் திக்குவிசயம் செய்தான். தேவரையும் இயக்கர் முதலிய யாவரையும் வென்றான். மும்மூர்த்திகளும் அவன் வலிமைக்கு முன் நிற்க இயலாமல் ஒடுங்கிப் போயினர்.

தேவரும் அடங்கினர் இயக்கர் சிந்தினர்;
தாவரும் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்;
யாவரும் 'இறைவர்'என்று இறைஞ்சும் மேன்மையர்
மூவரும் ஒதுங்கினர் (6093)

இராவணன் இந்திரனுடைய செல்வங்களையும் கவர்ந்து கொண்டான். தேவர் முதலியோரை அடிமை களாக்கிச் சிறையிலிட்டான். அவர்களைக் குற்றேவலராய் நடத்தினான்.

தேவரும், அவுணரும், செங்கண் நாகரும்,
மேவரும் இயக்கரும், விஞ்சை வேந்தரும்,
யாவரும் விசும்பு இருள் இரிய ஈண்டினார்,
தா அரும் பணிமுறை தழுவும் தன்மையார் (4884)

அடிமை கொண்ட தேவர்களை அவன் கொடூரமாக நடத்தினான் என்பதை,

சித்திரப் பத்தியின் தேவர் சென்றனர்,
'இத்துணைத் தாழ்ந்தனம்; முனியும்' என்று, தம்
முத்தின் ஆரங்களும், முடியும், மாலையும்
உத்தரீயங்களும், சரிய ஓடுவார் (4885)

என்று கம்பன் காட்டுகின்றான்.

அடிமை கொண்ட ஆடவர்களை மட்டுமல்ல பெண் களையும் இராவணன் அரக்கர்க்குப் பணி செய்ய வைத்தான்.

பொன்னக மடந்தையர், விஞ்சைப் பூவையர்
பன்னக வனிதையர், இயக்கர் பாவையர்
முன்னின பணிமுறை மாறி முந்துவார்
மின்னினம் மிடைந்தென,விசும்பின் மீச்செல்வார்(4883)

இராவணன் அவையில் தும்புரு துதிபாடுவோனாகி றான்; நாரதன் வீணை இசைக்கிறான். வருணன் நங்கையர் துகில் நனைந்து விடுமோ என்று நடுங்கி, மேகத் துருத்தியால் பயந்து பயந்து நீர் தெளிக்கிறான். வாயுவோ மந்திர மன்றத்தைப் பெருக்கித் தூய்மை செய்கி றான். வியாழனும் வெள்ளியும் மன்னர்க்கு இருக்கை நல்கி அமர வைக்கும் பணி புரிகின்றனர். காலனோ கைகட்டி வாய் புதைத்து நின்று நாழிகை அறிவிக்கும் தொழில் செய்கிறான், அக்கினி தேவன் விளக்கேற்றும் வேலை செய்கிறான். கங்கை முதலிய கடவுட் கன்னியர் செங்கையில் அரிசியும் மலரும் தூவி மன்னனுக்கு மங்கல மொழி கூறுகின்றனர். தோற்றவர்களை இராவணன் நடத்திய முறை இதுதான். வெற்றியின் மமதையில் அரக்கர் தம்மை உயர்ந்த இனத்தவராகக் கருதிப் பிற இனத்தவரை எல்லாம் இழிவாக நடத்தினர்.

வாசவன் திருவும் கொண்டான்

இராவணன் தேவர்களை வென்று அவர்களை அடிமைப்படுத்தியதோடன்றி அவர்களுடைய செல்வங் களையும் கவர்ந்து கொண்டான். கற்பகத் தருவும் சிந்தாமணி முதலிய தேவ மணிகளும், காமதேனுவும், சங்க, பதும நிதிகளுமாகிய வாசவனின் செல்வங்கள் இராவணன் அருகில் இருந்து அவனுக்கு வியப்பை ஊட்டும் வண்ணம் அவன் அருள் அறிந்து வேண்டிய உதவி நின்றன.

அதிசயம் அளிப்பதற்கு அருள் அறிந்து, நல்
புதிது அலர் கற்பகத் தருவும், பொய்யிலாக்
கதிர்நெடு மணிகளும், கறவை ஆன்களும்,
நிதிகளும், முறைமுறை நின்று நீட்டவே (3085

தொடக்கத்தில் இராவணன் பெற்ற செல்வம் அவன் தவத்தால் கிடைத்தது. ஆனால் வலிமையின் செருக்கு மிகுந்தபோது அவன் மறத்தினாலும் பிறர் பொருளைக் கவரத் தொடங்கினான். சுவேல மலையின் மீது நின்று இலங்கையின் ஏற்றத்தைத் தன் இளவலுக்கு அறிவிக்கும் இராமன் அங்குள்ள செய்குன்றுகளைக் காட்டி,

ஈவது தெரியா உள்ளத்து
இராக்கதர் ஈட்டி வைத்த
பாவ பண்டாரம் அன்ன
செய்குன்றம் (6856)

என்று கூறுகிறான். இலங்கையின் செல்வம் அறத்தால் ஈட்டியதுமில்லை. அறவழியில் பயன்படுத்தப்பட்டது மில்லை. அறத்தால் உருவான இலங்கையில் இப்போது அறமே புக முடியவில்லை. அறம் இலங்கையின் பகைவனாகிவிட்டது.

கறங்கு கால்புகா; கதிரவன்
ஒளிபுகா; மறலி
மறம்புகாது; இனி வானவர்
புகார் என்கை வம்பே!
திறம்பு காலத்துள் யாவையும்
சிதையினும் சிதையா
அறம் புகாது, இந்த அணிமதிள்
கிடக்கை நின்று அகத்தின் (4857)

பாவத்தின் வழியே ஈட்டிய பண்டாரம் அரக்கரைப் பாவ வழியிலேயே செலுத்துகிறது. அவர்கள் இரவு பகல் என்ற பேதமின்றி இன்ப வேட்டையில் ஈடுபடுகின்றனர். எந்தக் கவலையும் இன்றி மதுவுண்டு மயங்குகின்றனர். வஞ்சியரும், 'வருத்திய கொழுநர் தம்பால் வரம்பின்றி வளர்ந்த காம அருத்திய பயிர்க்கு நீர்போல் அருநரவு அருந்திக்' (4941) களிக்கின்றனர்.

அளவு கடந்து போக வாழ்வில் ஈடுபடுவோர் வீரமும் மானமும் இழந்து எளியோராவது இயல்பே. அரக்கரும் அந்நிலைக்கு ஆளாயினர். வானரர் என்றும் மானிடர் என்றும் அவர்களால் ஏளனமாகப் பேசப்பட்டவர் களிடமே அவர்கள் தோற்று அவலநிலை அடைகின்றனர். இந்த போக நுகர்ச்சியே இராவணனுக்குச் சீதைபால் எழுந்த காமத்திற்கும் காரணமாகிறது.

பூசுரர்க்கு அலக்கண் செய்தான்

அந்தணர்க்கும் அரக்கர்க்கும் இடையே இருக்கும் பகைமைக்குக் காரணம் அரக்கர்களின் பழைய வரலாறு களிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. அரக்கர்கள் முதலில் அந்தணர்களாக இருந்து பின்னர் சாபங்களால் அரக்கர்கள் ஆயினர் எனத் தெரிகிறது. யாக்ஞவல் கியருடைய குமாரர்களான சந்திரகாந்தன், மகாமேதன், விசயன் என்ற மூன்று பிராமணர்களும் அவர்களுடைய சீடர்கள் பதினாலாயிரவரும் சிவ சாபத்தால் கரன், தூடணன், திரிசிரன் முதலிய அரக்கர்களாகப் பிறந்தனர் என்று வான்மீகம் கூறுகிறது. இராவணன் அந்தண னாகிய புலத்தியனின் பேரன் என்பதையும் கரன் அவனுடைய சிற்றன்னையின் மகன் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

தாடகையின் வரலாறு வேறொரு வகையில் அந்தணர் மீது அரக்கர் கொண்ட பகைக்குக் காரணம் காட்டு கிறது. தாடகை இயக்கர் குலத்தைச் சேர்ந்த சுகேதுவின் மகள்; சுந்தனின் மனைவி. இவ்விருவருக்கும் மாரீசன், சுபாகு என்போர் பிறக்கின்றனர். சுந்தன் ஒருநாள் ஆணவம் மிகுந்து, அகத்தியன் ஆசிரமத்தை அடைந்து அங்கிருந்த மரங்களை எல்லாம் பறித்து வீசி எறிவதோடு, மான்களையும் கொன்று தின்கிறான். அதனால் அகத்தியன் நெருப்பெழச் சினந்து நோக்கச் சுந்தன் சாம்பலாகிறான். தன் கணவனை அழித்த அகத்தியனை

அழிக்கத் தாடகை தன் மக்களோடு வர, அதனை அறிந்த அகத்தியன் அவர்களை, 'அரக்கராகி இழிக' எனச் சபிக்கிறான். அரக்கராகி அழிவுத் தொழில் புரிந்து வந்த மாரீசனும் சுபாகுவும் திருமாலால் வலியடக்கப்பட்டு மாலியவான் முதலியவரோடு பாதாளத்தில் ஒளிந்திருந்த, இராவணனுடைய தாயாகிய கேகசியின் தந்தை சுமாலி என்பவனுடைய அன்பைப் பெற்று அவனுடைய அபிமான புத்திரர் ஆகின்றனர். இராவணன் இலங்கையைக் குபேரனிடமிருந்து மீட்டுச் சுமாலி முதலியோரோடு வசித்த போது மாரீசனையும் சுபாகுவையும் இராவணன் தன் மாமன்மார் என்று உறவு பாராட்டினான். அவன் தூண்டுதலால் அவ்விருவரும் உலகெங்கும் திரிந்து தீமை புரியலாயினர் (பால. காண். மிகைப் பாடல்கள், பக். 214—216).

தாடகையை இராமனுக்கு அறிமுகம் செய்யும்போது,

இலங்கை அரசன் பணி அமைந்து ஒர் இடையூறா,
விலங்கல் வலி கொண்டு, எனது வேள்வி நலிகின்றாள்
அலங்கல் முகிலே! அவள் இவ் அங்கநிலம் எங்கும்
குலங்களொடு அடங்க நனி கொன்று திரிகின்றாள்
(364)

என்று இராவணன் ஆணைப்படியே தாடகை அங்க நிலத்தில் அநியாயம் செய்து திரிகிறாள் என்பதை விசுவாமித்திரன் உணர்த்துகிறான்.

இராமன் தண்டகவனம் அடைந்தபோது அங்கு வசித்துக் கொண்டிருந்த முனிவர்கள் அரக்கர்களால் தம் தவ ஒழுக்கங்களை ஆற்ற முடியாமல் அல்லற்படுவதை எடுத்துரைக்கின்றனர்.

இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினர்
அரக்கர் என்று உளர் சிலர், அறத்தின் நீங்கினார்,
நெருக்கவும், யாம்படர் நெறி அலா நெறி
துரக்கவும், அருந்தவத் துறையுள் நீங்கினேம் (2642)

மாதவத்து ஒழுகலெம்; மறைகள் யாவையும்
ஓதலெம்; ஓதுவார்க்கு உதவல் ஆற்றலெம்;
மூதெரி வளர்க்கிலெம்; முறையின் நீங்கினோம்;
ஆதலின் அந்தணரேயும் ஆகிலேம்! (2644)

என்று இராமனிடம் அவர்கள் முறையிடுகின்றனர்.

அந்தணர்கள் செய்யும் வேள்விகளை அழிப்பதை அரக்கர்கள் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றனர். அதற்குக் காரணம் சமயப் பகையாகத் தெரியவில்லை. அரக்கரும் வேள்விகளைச் செய்கின்றனர். இந்திரசித்தன் இயற்றும் நிகும்பலை வேள்வியை இங்கே சான்றாகக் கருதலாம். இந்திரசித்தன் வேள்வி செய்ய விடாமல் இலக்குவணன் அதைச் சிதைப்பதையும் காணும் போது வேள்வியைச் சிதைப்பதில் அரசியல் காரணம் இருப்பதை அறியலாம்.

வலிமையைப் பெருக்கிக் கொள்வதற்கே வேள்வி இயற்றப்படுகிறது. அதன் மூலம் வரம்பிலா ஆற்றலுடைய தெய்வப் படைக்கலங்களும் கிடைக்கின்றன. இந்தக் காரணத்துக்காகவே இந்திரசித்தன் நிகும்பலை வேள்வி செய்ய முற்படுகிறான். இந்திரசித்தன் ஏவிய பிரமாத்திரத்தால் உணர்வொடுங்கி வீழ்ந்த இலக்குவன் முதலியோர் அனுமன் கொணர்ந்த மருத்து மலையால் உயிர் பெற்றெழுந்தனர் என்பதை அறிந்தபின் பகைவர்களை வெல்ல நிகும்பலையில் வேள்வி செய்வதொன்றே வழி என இந்திரசித்தன் கருத்துரைக்கிறான்.

மூண்டு யான் போய்,
நிகும்பலை விரைவின் எய்தி
துனி அறு வேள்வி வல்லை
இயற்றினால், முடியும் துன்பம் (8852)

என அவன் இராவணனுக்கு ஆலோசனை கூறுகிறான். இந்த வேள்வி பற்றி அறிந்த வீடணன்,

வேள்விக்கு வேண்டற் பால
கலப்பையும் விறகும் நெய்யும்
வாழ்விக்கும் தாழ்வில் (8931)

என்று வானவர் கலங்குவதை இராமனிடம் கூறி, இந்திரசித்தன் நிகும்பலை வேள்வி செய்து தம்மை அடியோடு ஒழிக்க முனைந்துள்ளான் என்பதை உணர்த்து கிறான் (8932). இராமன் ஏவ இலக்குவன் நிகும்பலை சென்று இந்திரசித்தன் வேள்வியைச் சிதைக்கிறான்,

இதே காரணத்துக்காகவே அரக்கரும் அந்தணர் வேள்வியை அழித்து வந்தனர். அந்தணர் வேள்வியினால் பெற்ற தெய்வப் படைக்கலங்களை ஆரிய அரசர்க்கு அளிப்பதை அரக்கர் அறிந்தவர். தாடகை வதைக்குப் பின்னர் விசுவாமித்திரன் தான் வைத்திருந்த தெய்வப் படைக்கலங்களை இராமனுக்கு அளித்ததையும் (394), இராமன். 'செருக்கு அடை அரக்கர் புரிதீமை சிதைவு எய்தித் தருக்கு அழிதரக் கடிது கொல்வது சமைந்தேன்' (2684) என அகத்தியனிடம் கூற. அவன் ஒப்பற்ற வாளை யும், சிவபெருமான், திரிபுரம் எரிப்பதற்குப் பயன் படுத்திய திருமால் கணையையும் இராமனுக்கு வழங்கிய தையும் இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

இந்திரசித்தன் நிகும்பலை வேள்வியைச் செய்து முடித்து விட்டால் அவனை யாரும் வெல்ல முடியாது; அரக்கர்க்கே வெற்றி கிட்டும்; ஆதலால் தானும் இலக்கு வனும் சென்று இந்திரசித்தன் வேள்வியைச் சிதைப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று வீடணன் இராமனிடம் வேண்டுகிறான்.

யாகம் முற்றுமேல், யாரும் வெல்லார்
வென்றியும் அரக்கர் மேற்றே;
விடை அருள்; இளவலோடும்
சென்று: அவன் ஆவி உண்டு,
வேள்வியும் சிதைப்பென் (8935)

அதனை ஏற்றுக்கொண்ட இராமன், இலக்குவனை நிகும்பலைக்கு அனுப்பும் போது,

இச்சிலை இயற்கை மேல்நாள்
தமிழ்முனி இயம்பிற்று எல்லாம்
அச்செனக் கேட்டாய் அன்றே?
ஆயிரம் மௌலி அண்ணல்
மெய்ச்சிலை; விரிஞ்சன் தானே
வேள்வியின் வேட்டுப் பெற்ற
கைச்சிலை கோடி (8942)

என்று கூறித் திருமால் வில்லை அவனிடம் கொடுத்தனுப்பு கிறான். இவையெல்லாம் வேள்வியை அழிப்பது ஓர் அரசியல் நடவடிக்கை என்பதை உணர்த்தும். இது இக்காலத்து அரசுகள் பகைவர் நாட்டில் உள்ள அணுப் படைக்கலங்களைச் செய்யும் ஆய்வு நிலையங்களை அழிப் பதோடு ஒக்கும்.

இரு திறத்தாரும் வேள்வியை அழிப்பதில் ஒப்பர் எனினும் இராவணன் செய்கை மிகையின் பாற்படுகிறது, அந்தணர் படைக்கலங்களைப் பெறுவதொன்றே நோக்க மாகக் கொண்டு வேள்வி செய்வதில்லை; தம் ஆன்மபலம் பெருக்குவதற்கும் செய்வர். இராவணனோ அவர் எதற்காக வேள்வியைச் செய்தாலும் அழிப்பதை நோக்க மாகக் கொண்டு எல்லாத் திசைகளிலும் அரக்கரை ஏவு கிறான். இராமனிடம் முறையிட்ட தண்டக வனத்து அந்தணர்களின் புலம்பல் இதனை உணர்த்தும்.

தன்னைத் தவிர வேறு யாரும் வலிமை பெற்றுவிடக் கூடாது என்றும் எல்லோரும் தனக்கு அடங்கி இருக்க வேண்டும் என்றும் இராவணன் எண்ணுகிறான். அவனுடைய இந்த ஏகாதிபத்தியப் போக்கே எல்லா இடங்களிலும் சென்று அந்தணர்கள் அவர்களுக்குரிய எச் செயலும் செய்ய விடாது தடுக்கின்ற கொடுமையை இழைக்கச் செய்கிறது.

தேசியைச் சிறையில் வைத்தான்

வழக்கமாகச் செய்துவரும் கொடுமைகள் போதா என்று பிறன்மனை நயத்தல் என்ற பெருங்குற்றத்தையும் இராவணன் இழைக்கிறான். சீதையின்பால் அறமிலா ஆசை கொண்டு அவளை வஞ்சகமாகக் கவர்ந்து கொண்டு வந்து இலங்கையில் சிறை வைத்த செயலே அவன் அழிவுக்குப் பெருங் காரணமாகிறது.

இராவணன் சீதையின்பால் கொண்ட காமத்திற்கு அவன் தங்கை சூர்ப்பணகை ஒரு காரணமாகிறாள். இராமன்பால் தகாத ஆசை கொண்டு அவன் இணங்க மறுக்கவே, சீதையே தனக்கு இடையூறாக இருப்பவள் என்று கருதிய சூர்ப்பணகை அவளை அகற்ற முயலும் போது இலக்குவனால் அங்கங்கள் அறுபட்டு அலறுகிறாள். தன் பாதுகாப்புக்காக இராவணனால் அனுப்பப்பட்ட தன் சகோதரன் கரனை அழைத்து வந்து அவனையும் இராமன் கணைக்கு இரையாக்குகிறாள். பின்னர் அழுது அரற்றியபடி ஓடி இராவணன் காலில் விழுந்து புலம்புகிறாள். தங்கையின் நிலைகண்டு சினம் கொண்ட இராவணன் இது 'யாவர் செயல்' என்று கேட்கிறான். 'செய்தனர்கள் மானிடர்' என்று அவள் செப்ப இராவணனுக்குச் சிரிப்பும் சினமும் சேர்ந்து எழுகின்றன. 'பொய்தவிர்; பயத்தை ஒழி; புக்க புகல்' என்று மீண்டும் அவன் கேட்கச் சூர்ப்பணகை, இதைச் செய்தவர் இராம இலக்குவனர் என்றும், அவர்கள் அந்தணர் வேண்டுகோளை ஏற்று, 'அரக்கர் குலத்தை அடியோடு அழிப்போம்' என்று சூளுரை கொண்டவர் என்றும் கூறி இராவணனுக்குப் பகைமை உணர்வை ஊட்ட முயல் கிறாள். இராவணன் சினம் கொண்டபோதும், தங்கை யின் இயல்பறிந்தவன் ஆதலின், 'நீ இடை இழைத்த குற்றம் என்னை கொல், நின்னை, இன்னே வாயிடை இதழும் மூக்கும் வலிந்து அவர் கொய்ய?' (3132) என்று

கேட்கிறான். இதற்கு விடையாக, தான் இராமன் மீது கொண்ட ஆசையையும் அதனால் செய்த செயல்களையும் கூறாது மறைத்து, தனக்கு இடையூறாக இருக்கும் சீதையை அகற்ற இதுதான் வழி எனச் சிந்தித்து, 'இது இராமன் மனைவி சீதையால் நேர்ந்தது' என்று பாதி உண்மை கலந்த பொய் கூறுகிறாள். 'யார் அவள்?' என்று இராவணன் கேட்டதும், தூண்டிற் புழுவின் பக்கம் மீன் நகர்வதை, 'தேர் அவள் அல்குல்' என்று தொடங்கிச் சீதையின் அழகை, இராவணனுக்கு இச்சை எழுமாறு அங்கம் அங்கமாக வருணிக்கிறாள். அவளை எப்படி வருணிப்பேன் 'நாளைக்குத்தான் நீ நேரில் பார்க்கப் போகிறாயே' என்றும் தூண்டுகிறாள். இறுதியில்,

மீன்கொண்டு ஊடாடும் வேலை
மேகலை உலகம் ஏத்த,
தேன்கொண்டு ஊடாடும் கூந்தல்,
சிற்றிடைச் சீதை என்னும்
மான் கொண்டு ஊடாடு நீ; உன்
வாள்வலி உலகம் காண
யான் கொண்டு ஊடாடும் வண்ணம்,
இராமனைத் தருதி என்பால் (3145)

என்று நாணமில்லாமல் கூறுகிறாள். இராமன்பால் எழுந்த இச்சையை அவளால் விலக்க முடியவில்லை. 'சீதையை நீ எடுத்துக் கொள்; இராமனை எனக்குக் கொடு' என்று கூறுகிறவள், இராமனைத் தான் கேட்பது இராவணனின் வீரத்தை உலகம் அறிவதற்காகத்தான் என்று ஒரு போலிக் காரணத்தையும் சாதுரியமாகப் புனைந்துரைக்கிறாள். சீதையை அவனுக்காக எடுத்து வர முயலும் போதுதான் இலக்குவனால் தனக்கு இது நேர்ந்தது என்றும் பொய் கூறுகிறாள்.

ஆசைத் தீயை எழுப்பும் வண்ணம் அமைந்த சீதையின் அழகைப் பற்றிய வருணனையைக் கேட்ட இராவணனுக்குக் காம உணர்வு கொப்பளிக்கிறது. இதை,

கோபமும், மறனும், மானக்
கொதிப்பும் என்று இனைய எல்லாம்,
பாபம் நின்ற இடத்து நில்லாப்
பெற்றிபோல், பற்று விட்ட;
தீபம் ஒன்று ஒன்றை உற்றால்
என்னலாம் செயலின், புக்க
தாபமும் காம நோயும்
ஆருயிர் கலந்த அன்றே (3148)

என்று கம்பன் உணர்த்துகிறான். இராவணனின் இதயத்தில் ஆசையைத் தூண்டி விட்டவள் சூர்ப்பணகையே எனினும், இந்தத் தூண்டுதலுக்கு ஆளாகும் வகையில் பெண்ணின்ப வேட்கை என்ற பலவீனம் அவனுக்கு உண்டு என்பதை அறிந்திருந்த தாலேயே அவள் அவ்வாறு செய்கிறாள். இராவணனின் இதயம் பாபம் புரியத் தயங்காது என்பதையே 'பாபம் நின்ற இடம்' என்ற சொற்களால் கம்பன் சுட்டிக் காட்டுகிறான். எனவே இது சூர்ப்பணகை மூட்டிய தீ அல்ல; முன்னரே இராவணனிடம் கிடந்த தீயைச் சூர்ப்பணகை கிளறி விசிறி விடுகிறாள். விளைவு? இராவணன்,

கரனையும் மறந்தான்; தங்கை
மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட
மங்கையை மறந்திலாதான் (3149)

இராவணன் இதயத்தில் எழுந்து கொழுந்து விட்டெரிந்த காமத் தீ முதலில் அவனிடமிருந்த வீரம், மானம் போன்ற சில உயர்ந்த பண்புகளை எரித்தது;

பின்னர் அவனுடைய நகரத்தையும் எரித்தது; இறுதியில் அவனையே எரித்துச் சாம்பலாக்குகிறது.

வஞ்சகமாகக் கவர்ந்தான்

பிறன்மனை நயத்தல் என்ற பெருங் குற்றம் புரிந்த இராவணன் அதனாலேயே வேறு குற்றங்களையும் தொடர்ந்து புரியத் தொடங்கினான். இராமனைப் போரில் வென்று சீதையைக் கொண்டு வந்திருந்தால், அக்கால அரச தருமப்படி நடந்தான் என அவனை மன்னிக்க வழியுண்டு. ஆனால் கரை கடந்த காமம் அவன் வீரத்தையும், மானத்தையும் அழித்து விட்டது. அதனால் சீதையை வஞ்சகமாகக் கவரத் திட்டமிடுகிறான்.

இந்த வஞ்சகத்திற்கு விதை போட்டவள் சூர்ப்பணகை. அவள்தான் இராவணன் காமத்தால் கண்ணழிந்து நிற்பதைக் கண்டு, 'கோமான்! உலகுக்கு ஒரு நீ, குறைகின்றது என்னே? பூமாண் குழலாள்தனை வவ்வுதி, போதி' (3219) எனத் தூண்டுகிறாள். வஞ்சியை வஞ்சகமாகக் கவர்வது என்று முடிவு செய்து கொண்ட இராவணன் அத்திட்டத்திற்கு உதவி வேண்டி மாரீசனிடம் செலகிறான். 'வந்த கருத்து என்? சொல்லுதி' என்று கேட்ட மாரீசனிடம், மனிதர்கள் இருவர் அவன் மருகியின் மானத்தைக் குலைத்துவிட்டனர் என்றும் அரக்கர் குலத்திற்கே அதனால் அவமானம் நேர்ந்துவிட்டதென்றும் அவனுக்குப் பகைமை உணர்வைத் தூண்டிவிட்டு மெல்லத் தன் வஞ்சகத் திட்டத்தைச் சொல்லுகிறான்.

> **வெப்பு அழியாது என்**
> **நெஞ்சம் உலர்ந்தேன், விளிகின்றேன்;**
> **ஒப்பிலர் என்றே**
> **போர்செயல் ஒல்லேன்; உடன் வாழும்**

துப்பழி செவ்வாய்
வஞ்சியை வவ்வத் துணைகொண்டிட்டு,
இப்பழி நின்னால்
தீரிய வந்தேன், இவண்' (3242)

என்கிறான். தன் காமத்தை மறைத்துப் பழி வாங்குவதற்கே இந்த நடவடிக்கை என்கிறான். இராம இலக்குவனர் தனக்கு இணையானவர் இல்லை என்பதால் அவரோடு போர் செய்வது தன் வீரத்திற்கு இழுக்கு என்று போலிக் காரணம் புகலுகிறான்.

இராவணனின் இழிந்த திட்டத்தை இகழ்ந்த மாரீசன்,

நாரம் கொண்டார்
நாடு கவர்ந்தார், நடை அல்லா
வாரம் கொண்டார்,
மற்றொருவற்காய் மனைவாழும்
தாரம் கொண்டார்,
என்ற இவர் தம்மைத் தருமம்தான்
ஈரும் கண்டாய்;
கண்டகர் உய்ந்தார், எவர்? (3247)

என்று அறிவுரை கூறுகிறான், விராதனையும் கரனையும் வென்ற இராமனின் வீரத்தைக் குறைவாக மதிப்பிடாதே என்றும் கூறி, 'புலை ஆடற்கு ஒன்றும் உன்னாய்' என்று கடிந்துரைக்கிறான். அறிவுக்கூர்மை உடையவன் ஆதலின் இராவணன் காம வயப்பட்டிருக்கிறான் என்பதையும் உற்றுணர்ந்து, 'வேதனைசெய் காமவிடம் மேலிட மெலிந்தாய்; தீது உரை செய்தாய்; இனைய செய்கை சிதைவு அன்றோ?' (3262) என்றும் உணர்த்துகிறான். மாரீசனின் அறிவுரையை ஏற்காமல் சினந்த இராவணன்,

மறுத்தனை என்பபெறினும் நின்னை வடிவாளால்
ஒறுத்து, மனம் உற்றது முடிப்பென்; ஒழிகல்லேன்;
வெறுப்பன கிளத்தலுறும் இத்தொழிலை விட்டு,என்
குறிப்பின்வழி நிற்றி, உயிர் கொண்டு உழலின் (3266)

என்று அவனை அச்சுறுத்துகிறான். உயிருக்கு அஞ்சிய மாரீசன் உடன்படுகிறான். அப்பொழுதும் 'போரில் இராமனை வென்று உன் வீரத்தைக் காப்பாற்று' என்று வேண்டுகிறான். இராவணனோ,

அவரை வெல்லத்
தானையும் வேண்டுமோ என்
தடக்கைவாள் தக்கதன்றோ?
ஏனையர் இறக்கின்; தானும்
தமியனாய் இறக்கும் அன்றே
மானவள்? ஆதலாலே,
மாயையின் வலித்தும் (3273)

என்று தன் புலைத் தொழிலுக்கு ஒரு பொய்க் காரணம் புனைந்துரைக்கிறான்.

மாரீசனிடம் தன் வஞ்சகத்திட்டத்தையும் எடுத்துரைக்கிறான். அத்திட்டத்தின்படியே மாரீசன் பொன்மான் உருவம் கொண்டு போய் நன்மான் அனைய சீதையை நயப்புறுத்தி, இராமனையும் இலக்குவனையும் அவளிடமிருந்து பிரித்து அவளைத் தனிமைப்படுத்துகிறான்.

தக்க வாய்ப்பு வந்ததும் இராவணன் தவ முனிவன் போல் பொய்க் கோலம் புனைந்து சென்று, பன்ன சாலையோடு பாவையை எடுத்து வந்து அசோக வனத்தில் சிறை வைக்கிறான். பிறன்மனை நயந்ததும் அன்றி அவளை வஞ்சகமாகவும் கவர்ந்து வந்து சிறை வைத்த இராவணன் இழிசெயலை அவனைச் சார்ந்தவர்களே கடிந்துரைக்கின்றனர்.

வஞ்சனை மனிதரை இயற்றி, வாள்நுதல்
பஞ்சுஅன மெல்லடி மயிலைப் பற்றுதல்
அஞ்சினர் தொழில் (6086)

என்று சேனைத் தலைவன் அவனைக் கண்டிக்கிறான்.

ஆசில் பரதாரம் அவை அஞ்சிறை அடைப்பேம்
மாசில்புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;
கூசுவது மானுடரை; நன்று,நம கொற்றம்! (6122)

என்று கும்பகருணன் தமையனை இகழ்வதோடு, '*சிட்டர் செயல் செய்திலை; குலச் சிறுமை செய்தாய்*' (*6123*) என்று இடித்துரைக்கிறான்.

அமர் பொருமேல் வெல்லுமத்தனை அல்லது தோற்றிலா விறலோனான இராவணன் தன்னைக் காமன் கணைக்கு இலக்காக்கினான். அதனால் இராமன் கணையால் அழிந்தான். அவன் காமம் அவன் பெருமைகளை எல்லாம் அழித்தது.

போர்மகளை, கலைமகளை. புகழ்மகளை
தழுவிய கை பொறாமைகூர,
சீர்மகளை, திருமகளை, தேவர்க்கும்
தெரிவரிய தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர்கொடுத்துப்
பழிகொண்ட (9927)

பித்தனாய்ப் பார்மகளைத் தழுவினான்.

அமைச்சர் அவை

காமத்தால் தன்னைக் கவர்ந்து வந்து சிறை வைத்த இராவணனை நோக்கி,

கடிக்கும் வல்அரவும் கேட்கும்
மந்திரம்; களிக்கின்றோயை
'அடுக்கும். ஈது அடாது' என்று ஆன்ற
ஏதுவோடு அறிவு காட்டி,
இடிக்குநர் இல்லை; உள்ளார்,
எண்ணியது எண்ணி, உன்னை
முடிக்குநர்; என்றபோது,
முடிவன்றி முடிவ துண்டோ. (5204)

என்று சீதை கூறுகிறாள். ஆனால் அவன் அமைச்சர் அவையில் இடித்துரைப்போரும் இருந்தனர். இராவணன் தான் அவர்கள் அறிவுரையை மதிக்கவில்லை, அவன் அமைச்சர் அவையில், பண்டிதர், பழையவர், கிழவர், பண்பினர், தண்டலில் மந்திரத்தலைவர் (6078) ஆகியோர் இருந்தனர். அவன் மக்களும் தம்பியரும் அமைச்சர் அவைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சூர்ப்பணகை மூக்கறுபட்டு வந்து முறையிட்டபோது இராவணன் அமைச்சர் அவை கூட்டியதாகக் கூறும் கம்பன், அவை எடுத்த முடிவு பற்றிக் கூறவில்லை. ஆனால் 'பூமான் குழலாள்தனை வவ்வுதி, போதி' என்ற சூர்ப்பணகையின் உரையால் சிந்தை திரிந்த இராவணன் சீதையை வஞ்சகமாய்க் கவர நினைக்கும் தன் திட்டத்தை அமைச்சரவையில் கூறியிருக்க வேண்டும்; அதைத் தொடர்ந்து விவாதம் நடத்திருக்க வேண்டும் என்று உய்த்துணர்வதற்கு ஒரு குறிப்புக் காணப்படுகிறது.

அனுமனால் எரியுண்ட இலங்கையைப் புதுப்பித்த பின் இராவணன் கூட்டிய அமைச்சர் அவையில்

> **'வஞ்சனை மனிதரை இயற்றி, வாள்நுதல்**
> **பஞ்சுஅன மெல்லடி மயிலைப் பற்றுதல்**
> **அஞ்சினர் தொழில்'என அறிவித்தேன்; அது**
> **தஞ்சென உணர்ந்திலை (6086)**

என்று படைத் தலைவன் இராவணனிடம் கூறுகிறான். அவன் முன்னரே அறிவித்ததாகக் கூறுவதிலிருந்து இராவணனின் வஞ்சகத் திட்டத்தை எதிர்த்து முந்தைய அவையில் விவாதம் நடந்திருக்கிறது என்பதை அறியலாம். ஆனால் இராவணன் அந்த அறிவுரையை மதிக்காமல், 'சிந்தையில் நினைந்த செய்யும் செய்கையனாய்', தெளிவில்நெஞ்சனாய்'த்தனியே புறப்பட்டு மாரீசனைக் காணச் செல்கிறான். மாரீசனும் அவன் வஞ்சகத்

திட்டத்தைமுதலில் ஏற்காமல் இன்னாவேனும் யான் இது, உரைப்பென் இதம்' (3244) என்று அமைச்சன் என்ற முறையிலும், உறவினன் என்ற முறையிலும் அறிவுரை கூறுகிறான். இராவணனோ அவனை இகழ்ந்ததோடன்றி,

> ஏவல் செயகிற்றி, எனது ஆணைவழி; எண்ணிக்
> காவல்செய் அமைச்சர் கடன் நீ கடவது உண்டோ?
> (3265)

எனக் கூறி,

> மறுத்தனை எனப் பெறினும், நின்னை வடிவாளால்
> ஒறுத்து மனம் உற்றது முடிப்பென்; ஒழிகல்லேன்;
> வெறுப்பன கிளத்தலுறும் இத்தொழிலை விட்டு, என்
> குறிப்பின் வழிநிற்றி, உயிர்கொண்டு உழலின் (3266)

என்றும் அச்சுறுத்துகிறான். தனது ஆணைப்படி நடப்பதுதான் அமைச்சர் கடன் என்றும், அவ்வாறு நடவாவிட்டால் வாளால் ஒறுப்பேன் என்றும் அவன் கூறுவதிலிருந்து அமைச்சர்களை அவன் எந்த நிலையில் வைக்க விரும்புகிறான் என்பதை அறிய முடிகிறது. மாரீசனும் உயிர்க்கு இறுதி பயப்பினும் உறுதியை அஞ்சாது எடுத்துரைக்கும் உத்தம அமைச்சனல்லன். இருமுறை இராமன் கணைக்குத் தப்பியவன் அக் கணைகளுக்கு அஞ்சியே நீதிமான் போல் அறமுரைக்கிறான். இராவணன் வடிவாளால் ஒறுப்பேன் என்றதும் உயிருக்கு அஞ்சி அவன் வஞ்சகத் திட்டத்திற்கு உடன்படுகிறான்.

வீடணன் இராவணன் பெற்ற சாபங்களை நினைவு படுத்தி, இராமன் ஆற்றலை உணர்த்தி, அவன் பெற்றுள்ள துணை வலிமையையும் சுட்டிக் காட்டி,

> இசையும் செல்வமும் உயர்குலத்து
> இயற்கையும் எஞ்ச,
> வசையும் கீழ்மையும் மீக்கொளக்

கிளையொடும் மடியாது
அசைவில் கற்பின் அவ் அணங்கை விட்டு
அருளுதி; இதன் மேல்
விசையம் இல் (6169)

என்று இதமான அறிவுரை கூறுகிறான். இராவணன் 'பித்சர் சொல்லுவ சொல்லினை' என அவனை இகழ்ந்து

நண்ணின மனிதர்பால் நண்பு பூண்டனை;
எண்ணினை செய்வினை; என்னை வெல்லுமாறு
உன்னினை; அரசின்மேல் ஆசை ஊன்றினை;
திண்ணிதுஉன் செயல்; பிறர் செறுநர் வேண்டுமோ? (6370)

என்று அவனையே ஐயுற்றுக் களங்கம் சுமத்தி

ஒழி;சில புகலுதல்; ஒல்லை நீங்குதி;
விழி எதிர் நிற்றியேல், விளிதி (6372)

என்று அவனைத் துரத்துகிறான்.

கும்பகருணனும்,

தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து,நின்
ஐயறு தம்பியோடு அளவளாவுதல்
உய்திறம் (7359)

என்று அறமுணர்த்தி, பந்தி பந்தியாகப் படைகளை அனுப்பி அவை தோற்பதைக் கண்டு வருந்துவதைவிட நம் வலி எலாம் ஒன்று சேர்த்துச் சென்று போரிடுதல் ன்று என்றும் கூறுகிறான். ஆனால் இராவணன்,

உறுவது தெரியஅன்று, உன்னைக் கூயது;
சிறுதொழில் மனிதரைக் கோறி, சென்று; எனக்கு
அறிவுடை அமைச்சன்நீ அல்லை, அஞ்சினை;
வெறுவிது உன்வீரம் (7361)

என்று அவனையும் இகழ்கிறான்.

பிரமாத்திரப் படையால் உணர்வொழிந்து வீழ்ந் தவர் அனுமன் கொணர்ந்த மருத்து மலையால் உணர்வு

பெற்றெழுந்து விட்டனர் என்பதை அறிந்தபின் மாலியவான் அனுமனின் ஆற்றலைப் பற்றி எச்சரித்து விட்டு,

இறந்தவர் இறந்து தீர;
இனி ஒரு பிறவி வந்து
பிறந்தனம் ஆகின், உள்ளேம்;
உய்ந்தனம் பிழைக்கும் பெற்றி
மறந்தனம்; எனினும் இன்னம்
சனகியை மரபின் ஈந்து, அவ்
அறம்தரு சிந்தையோரை
அடைக்கலம் புகுதும் (8845)

என்று ஆலோசனை கூறுகிறான், வயது முதிர்ந்தவன் என்ற மதிப்பையும் தராமல் அவன் கட்டுரை கேட்டுக் கண் எரி கதுவ நோக்கி,

பட்டனர் அரக்கர் என்னின்,
படைக்கலம் படைத்த எல்லாம்
கெட்டன எனினும், வாழ்க்கை
கெடாது; இனி கிளி அனாளை
விட்டிட எண்ணியோ நான்
பிடித்தது, வேட்கை வீய? (8848)

என்று தன் காமச் செருக்குக் குறையாது பேசி, 'அஞ்சினிர்; வாழ்வு வேட்டிர்! உய்ந்து நீர் போமின்' (8849) என்று அவமதிக்கிறான்.

கும்பகருணன் முதலியோர் உறவினர் என்ற முறையில் இராவணனுக்குப் பரிவோடு அறிவுரை கூறுகின்றனர். சீதையைக் கவர்ந்தது தவறு என உணர்த்துகின்றனர். இராமனின் வலிமையையும் எடுத்துரைக்கின்றனர். ஆனால் நினைத்ததே முடிக்கும் நினைவுடைய நிருதர் வேந்தன் அவ்வுரைகளை மதியாதது மட்டுமல்ல அவர்

களை இகழவும் செய்கிறான். இதனால் இரு உடன் பிறப்புக்களையும் இழக்கிறான்.

அமைச்சரவையில் உள்ள மகோதரன் போன்ற அமைச்சர்களோ, சீதை கூறியபடியே அவன் எண்ணியதையே எண்ணி அவனை முடிப்பவர்களாகவே உள்ளனர். இலங்கை எரியுற்ற பின் கூடிய அவையில் படைத் தலைவன் ஒருவனே இராவணன் வஞ்சகத் திட்டத்தை எதிர்த்துப் பேசியவன். அவனும் சீதையை விட்டுவிடுவதே சிறந்தது எனக்கூறாமல் அனுமனைப் பிடித்துக் கொல்லாமல் இருந்து வருந்துவது இழிவு எனப் போலி மானமே பேசுகிறான்.

மகோதரனோ 'வெள்ளியம் கிரியினை விடையின் பாகனோடு அள்ளி, விண்தொட எடுத்து ஆர்த்த ஆற்றலை உடையவன், சுள்ளியில் இருந்து உறை குரங்கின் தோள் வலிக்கு எள்ளுதியோ உன் புயத்தை?' என இராவணன் செருக்கறிந்து அவன் சிந்தனைப் போக்கின் வழியே பேசுகிறான். வச்சிரதத்தன் முதலிய பிற அமைச்சரும் இவ்வாறே பேசுகின்றனர்.

சுக்கிரீவனிடம் மகுடம் இழந்த பிறகும், இராமனிடம் முதற்போரில் தோற்று, சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் களத்தே போட்டு வெறுங்கையே மீண்ட பிறகும், தம்பி கும்பகருணன் அழிந்த பிறகும் காமம் அழியாத இராவணன் மகோதரனிடம்,

சீதையை எய்தி, உள்ளம்
சிறுமையின் தீரும் செய்கை
யாது? எனக்கு உணர்த்தி, இன்றுஎன்
இன்னுயிர் ஈதி (7633)

என்று தன் இழிந்த ஆசையை நிறைவேற்றுவதற்குரிய யோசனையையே கேட்கிறான். அவனும் மருத்தனைச்

சனகனாய் உருமாற்றி அதனால் சீதையை இணங்கச் செய்யலாம் என்று இழிந்த திட்டத்தைக் கூறுகிறான்.

இராவணனின் அமைச்சர்கள் அவனுக்கு அஞ்சித் 'தொழும்தகை அமைச்ச' ராகவே (7727) இருக்கின்றனர். அவ்வாறிருந்தும் அவன் அவர்களை இழிவாகவே நடத்து கிறான். தோல்விக்கு மேல் தோல்வி விளைந்து, மலை போல் நம்பி இருந்த கும்பகருணனும் மாண்டான் என்று அறிந்ததும் சினம் கொண்ட இராவணன் அமைச்சர் களை ஏசுகிறான்.

'எடுத்ததர் இருந்துழி எய்தி, யாரையும்
படுத்து, இவண் மீடும்' என்று உரைத்த பண்பினீர்!
தடுத்திலீர் எம்பியை; தாங்க கிற்றிலீர்;
கொடுத்திலீர், உம்உயிர்; வீரக் கோட்டியீர் (7729)

என்று அவர் வீரத்தை இகழ்கிறான்.

உம்மையின் நின்று. நான் உலகம் மூன்றும் என்
வெம்மையின் ஆண்டது; நீர் என் வென்றியால்
இம்மையில் நெடுந்திரு எய்தினீர்; இனிச்
செம்மையின் இன்னுயிர் தீர்ந்து தீர்திரால் (7730)

என்று ஏசுகிறான்.

இராவணன் ஆட்சியில் அமைச்சர் "அவை அதற்குரிய எந்தத் தகுதியும் மதிப்பும் இல்லாது இழிந்து நிற்கிறது. அதற்கு இராவணனின் ஆணவம் மட்டுமன்றி அமைச்சர் களின் அடிமைத்தனமும் காரணமாகிறது.

ஆணவம்

இராவணன் அழிவுக்கு அவன் ஆணவமும் காரண மாகிறது. தவத்தால் பெற்ற வலிமை கொண்டு அவன் மூவுலகை வென்றதும் அவன் ஆணவம் தலை விரித்தாடு கிறது. எப்போதும் தன்னை வியந்து கொள்கிறான். தான் பெற்ற வெற்றிகளைச் சொல்லிச் சொல்லிச் செருக்கடை

கிறான். இந்த ஆணவமே மாற்றான் வலியறிய ஒட்டாமல் அவனைத் தடுக்கிறது. இந்த ஆணவமே போலி மானம் பேணச் செய்கிறது.

தன் வஞ்சகத் திட்டத்திற்கு உதவுமாறு இராவணன் வேண்டியபோது மாரீசன் விராதனையும் கரனையும் தன் அன்னை தாடகையையும் கொன்று தீர்த்த இராமனை எளிமையாக எண்ண வேண்டாம் என்று உணர்த்து கிறான். இராவணனோ அவனை அற்ப மனிதனாகவே கருதிப் பேசுகிறான்.

கங்கை சடை வைத்தவனொடும்
கயிலை வெற்பு ஓர்
அங்கையின் எடுத்த எனது
ஆடு எழில் மணித்தோள்
இங்குஓர் மனிதற்கு எளிய
என்றனை **(3255)**

என்று வெங்கண் எரிய வெகுண்டுரைக்கிறான். கயிலை மலை எடுத்தபோது பட்ட பாட்டை மறந்து அதையும் ஒரு சாதனையாகவே கூறுகிறான்.

அறம் தரு வள்ளல் இராமன் கையால் மறம் தலை திரிந்த வாழ்க்கை அரக்கர் தம் வருக்கத்தோடும் அழிவர் எனச் சீதை, தவவேடம் கொண்டு வந்த இராவணனிடம் கூறியபோதும் 'மானிடர் வலியர்' என்ற மாற்றத்தால் சீற்றம் கொள்கிறான். அதனாலேயே அவன் மாய வேடமும் கலைகிறது.

மேருவைப் பறிக்க வேண்டின்,
விண்ணினை இடிக்க வேண்டின்,
நீரினைக் கலக்க வேண்டின்,
நெருப்பினை அவிக்க வேண்டின்,

பாரினை எடுக்க வேண்டின்,
பலவினை, சில சொல் ஏழாய்!
யார் எனக் கருதிச் சொன்னாய்?
இராவணற்கு அரிதுஎன்? (3378)

என்று வீரம் பேசி, இராம இலக்குவனரை 'மண்ணிடைப் புழுவின் வாழும் மானிடர்' (3383) என்று இகழ்கிறான். அசோக வனத்திலும் தன்னை இரந்த இராவணனிடம் அவனையே வாய் வழி குருதி சோரக் குத்தி வான் சிறையில் வைத்த தூயவன் கார்த்த வீரியார்ச்சுனனது வயிரத் தோள்களைத் துணித்த பரசுராமனின் வலிமையை அழித்த இராமனின் வீரம் பற்றி அவன் அறிய வில்லையா? என்று சீதை கேட்ட போதும் சினம் கொண்டு,

சிற்றியல், சிறுமை ஆற்றல்,
சிறுதொழில், மனிதரோடே
முற்றிய தாவில் வீர
முனிவுஎன் கண் விளையாதேனும்,
இற்றை இப் பகலில், நொய்தின்,
இருவரை ஒரு கையாலே
பற்றினென் கொணரும் தன்மை
காணுதி (5215)

என்றே பேசுகிறான்.

முதற் போரில் இராம இலக்குவனர் வலிமையும், அனுமனின் ஆற்றலும் அறிந்த பின்னரும், கும்பகருணன் அறிவுரை கூறிய போது, அவற்றை எல்லாம் மறந்து அவன் ஆணவமே,

மானிடர் இருவரை வணங்கி, மற்றும்அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு, உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்
யான்அது புரிகிலேன் (7363)

என்று பேசச் செய்கிறது.

நிகும்பலை வேள்வி இலக்குவனால் சிதைந்தபின் இந்திரசித்தன்,

குலம் செய்த பாவத்தாலே
கொடும்பகை தேடிக் கொண்டாய்
சலம் செயின், உலகம் மூன்றும்
இலக்குவன் முடிப்பன் (9119)

என்று இலக்குவன் ஆற்றலை இராவணனுக்கு உணர்த்தி,

'அஞ்சினேன்' என்று
அருளலை; ஆசைதான் அச்
சீதைபால் விடுதியாயின்
அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த
தீமையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன்

என்று இதமாக அறம் உரைத்த போதும்,

முன்னையோர், இறந்தார் எல்லாம்,
இப்பகை முடிப்பர் என்றும்,
பின்னையோர், நின்றோர் எல்லாம்,
வென்றனர் பெயர்வர் என்றும்,
உன்னை, 'நீ அவரை வென்று
தருதி' என்று உணர்ந்தும் அன்றால்;
என்னையே நோக்கி, யான் இந்
நெரும்பகை தேடிக் கொண்டேன் (9123)

என்று ஆணவத்தின் உச்சியில் நின்று பேசுகிறான். இந்த ஆணவமும் அவன்அழிவுக்குக் காரணமாகிறது.

தொகுப்புரை

இராவணனின் அரசு ஒரு வல்லரசு. இராவணன் அருந்தவமாற்றி அளவற்ற ஆற்றலைப் பெற்றிருப்பினும் அந்த ஆற்றலால் செருக்கி அறமிலா வழியில் ஆட்சி செய்கிறான். தன் ஆற்றலால் அயலவர்க்கு அளப்பரும்

துன்பம் விளைவிக்கிறான். அவர்களை அடிமைப்படுத்தி அல்லற்படுத்துகிறான். அறமிலா வழியில் அவன் ஈட்டிய அளவற்ற செல்வமும் அவனைத் தீய வழியிலேயே செலுத்துகிறது. அவனும் இலங்கை மக்களும் புலனின்பப் போகப் புதைசேற்றில் சிக்கிச் சீரழிகின்றனர். இந்தப் போக வேட்கையே இராவணனைப் பிறன்மனை நயக்கும் பேதைமையின்பால் செலுத்துகிறது. காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்ற ஆறு பகை வர்க்கமும் அவனிடம் ஒருங்கே குடிபுகுகின்றன. அவன் மாண்பிறந்த மானம் பேசி மாண்பிழக்கிறான். தன்னையே வியந்து தவறிழைக்கிறான். நல்லார் தொடர்பை நயவாது நாசமுறுகிறான். பழுதெண்ணும் மந்திரிகளைப்பக்கத்தில் வைத்துக்கொண்டு பாழாகிறான். இந்தக் குற்றங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவனை அழிப்பதோடு அவன் நாட்டையும் சீரழிக்கின்றன.

வரம்பிலா அதிகாரங்களை வசப்படுத்திக் கொள்ளும் முடிமன்னர்களால் விளையும் தீமைகளை அரசியல் நூலார் விவரிக்கின்றனர். அவர்கள் சர்வாதிகாரிகளாகி மக்கள் கருத்தைத் துச்சமாக மதிப்பர். உலக அமைதிக்குப் பகைவர்களாகிப் பலவீனமான அரசுகளின்மீது படை யெடுத்து அவர்களை அடிமைப்படுத்துவர். போர்ச் செயலே அவர்கள் பொழுது போக்காகும். வரலாற்றில் ஹிட்லரும் முசோலினியும் இதற்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றனர். இராமாயணம் இராவணனை எடுத்துக் காட்டாகத் தருகிறது.

முடியாட்சியை உடைய அரசு எவ்வளவுதான் அறிவும் திறமையும் பெற்றிருந்தாலும் நாகரிகமும் அறிவும் பெற்ற

மக்களுக்குப் பொருந்தாத குறையுடைய அரசாகும். அரசியல் அக்கறை, சமூக ஒற்றுமை ஆகியவற்றை வளர்ப்பது ஒரு நல்லரசின் குறிக்கோளாகும். முடியாட்சி இந்தக் குறிக்கோளை அடைவதிலும், நல்ல குடிமக்களை உருவாக்குவதிலும் எப்போதும் தோல்வியே அடைகிறது என்பார் அறிஞர் கெட்டல். கோசலம், கிட்கிந்தை, இலங்கை என்னும் மூவரசுகளின் முறைகேடுகளைச் சுட்டிக் காட்டியதன் மூலம் கம்பனும் அதே கருத்தை வலியுறுத்துகிறான்.

நல்லரசு

தோற்றுவாய்

அரசறிவியலின் குறியிலக்கு எல்லை பற்றி அறிஞர் கெட்டல் கூறிய விளக்கம் முன்னர்க் காட்டப்பட்டது. அவ்விளக்கத்தின்படி அரசியல் அறிஞர், இறந்த காலத்தில் அரசின் தோற்றம் பற்றியும் அரசியல் கோட்பாடுகளின் வளர்ச்சி பற்றியும் ஆராய்கின்றனர். நிகழ்காலத்தில் வாழ்ந்துவரும் அரசியல் நிறுவனங்கள் பற்றியும் கருத்துக்கள் பற்றியும் வகைப்படுத்தி விளக்க முயலுகின்றனர். மாறிவரும் நிலைமைகளுக்கும் அறிவியல் தரங்களுக்கும் ஏற்ப வளர்ந்து வரும் அரசியல் நிறுவனங்கள் பற்றி எதிர்கால நோக்கோடு சித்திரிக்கின்றனர். கம்பன் ஓர் அரசியல் அறிஞனாக நின்று அரசின் தோற்றம் பற்றிய கொள்கைகளை ஆராய்வதோடு தன் கோட்பாட்டையும் எடுத்து வைக்கிறான். மூலக் கதையில் காணப்படும் மூன்று அரசுகளையும் விமர்சனம் செய்து அவற்றின் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறான். நிகழ்காலத்தைப் பொறுத்தவரையில் அவன் வாழ்ந்த காலத்தில் அவன் நேரில் கண்டும் கேட்டும் அறிந்த தமிழக அரசுகளின்—சிறப்பாகச் சோழ அரசின்—செயற்பாடுகள் அவனைப்பாதித்திருக்கும் என்று நம்பலாம். கம்பன் ஆதித்த சோழன் காலத்தில் (கி.பி.9 ஆம் நூற்.) வாழ்ந்தவன்.* ஆதித்த சோழன் இரண்டாம் வரகுண பாண்டியனிடம் தோற்றுத் தனக்குரிய கான நாட்டை அவனிடம் பறி கொடுத்தான். இந்நிகழ்ச்சியைக் கம்பன் தன் காப்பியத்தில் பரதன் சூளுரையில் குறிப்பாக உணர்த்துகிறான். ◯

---

* M. Arunachalam, 'The Date of Kambar', கம்பன் மணி மலர், காரைக்குடி, 1988, ப.75.

◯ மே.கு.,ப.73.

கரும்பலர் செந்நெல்அம் கழனிக் கானநாடு
அரும்பகை கவர்ந்துண, ஆவி பேணினென்,
இரும்பலர் நெடுந்தளை ஈர்த்த காலொடும்
விரும்பலர் முகத்து,எதிர் விழித்து நிற்க,யான் (2217)

நிகழ்கால அரசியல் நிலைமைகளும் அவனைப் பாதித் திருக்கின்றன என்பதற்கு இதனைச் சான்றாகக் கொள்ள லாம். இந்த நிலைமைகளும் அவனுடைய அரசியல் கோட்பாட்டின் நிலைப்பாட்டிற்குக் காரணமாக இருந்தன எனக் கொள்வதில் தவறில்லை. முன் காலத்தி லும் தன் காலத்திலும் அவன் கண்ட முடியாட்சிகளின் மீது அவன் அருவருப்பு அடைந்திருந்தான். கதையில் வரும் மூன்று அரசுகளையும் குற்றங் குறைகள் நிரம்பியன வாக அவன் காட்டுவதிலிருந்து இதனை அறிந்து கொள்ள லாம். கம்பன் இவ்வாறு குறை கூறுவதோடு மட்டும் அமைந்து விடாமல் ஒரு நல்லரசு எப்படி இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறான். அந்த வகையில் அவன் உன்னதமான கற்பனையில் உதித்த இலட்சிய நாட்டையும் வருணிக்கிறான்.

இந்திய அரசியல் கோட்பாடுகள்

இந்தியாவின் மிகத் தொன்மையான இலங்கியங் களாகக் கருதப்படும் வேத சம்ஹிதைகளிலிருந்தே (கி.மு. 1500—1000) இந்திய அரசியல் கோட்பாடுகளின் வரலாறு தொடங்கிவிடுகிறது. இவற்றைத் தொடர்ந்து இதே கால கட்டத்தில் தோன்றிய **யஜுஸ் – சம்ஹிதைகள் பிராஹ் மணங்கள், ஸ்மிருதிகள்** ஆகியவற்றிலும் அரச தருமம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மௌரியர் காலத்திற்கு முன் தோன்றிய **தர்மசூத்ரங்கள்** (கி.மு. 600—300) அரசாட்சி பற்றிய முதற்படிக் கூறுகளை விவரிக்கின்றன. இந்தத் தொடக்க கால நூல்கள் அரசன், நான்கு வருணங்கள், சட்டம் ஆகியவை தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்டவை என்ற கோட்பாட்டை உடையன.

ஆதரவற்றவருக்கு உதவும் மக்கள் நல அரசு பற்றியும், மக்களைக் காக்கும் மன்னனின் கடமைகளைப் பற்றியும் இந்நூல்கள் விவரிக்கின்றன. பொருளைவிட அறமே சிறந்தது என்ற கோட்பாடு இந்நூல்களின் சிறப்புப் பண்பாகும். பிராமணர்கள் ஆன்மிகச் சக்தியுடையவர்கள் என்றும் க்ஷத்திரியர்கள் உலகியல் சக்தியுடையவர்கள் என்றும் மற்ற வருணத்தார் இவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றும் பிராமணர்கள் சட்டங்களிலிருந்து விடுபாட்டுரிமை பெற்றவர்கள் என்றும் இவை கூறுகின்றன.

இந்நூல்களை அடுத்துத் தோன்றிய தீக நிகாயா, ஜாதகக் கதைகள் போன்ற பௌத்த நூல்கள் (கி.மு. 400—300) பிராமண நூல்களிலிருந்து மாறுபட்டு அரசு பரிணாமத்தின் விளைவாக ஏற்பட்டது என்ற புதிய கோட்பாட்டை எடுத்தியம்புகின்றன. வருணங்கள் இறைவனால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல; தொழில் தேர்வால் ஏற்பட்டவை என்பது இந்நூல்களின் கருத்து. அரசியல் என்பது ஒரு கீழ்த்தரமான கலை என்றும் இதனால் போலித் துறவிகளும் பிராமணர்களும் பிழைப்பு நடத்துகின்றனர் என்றும் இவை கூறுகின்றன. இவை தருமத்திற்குத் தலையாய இடம் தருகின்றன. இந்நூல்களே முதன் முதலாகச் சிறுகுழுக் குடியரசு (Clan-republics) பற்றிப் பேசுகின்றன. உலக அரசு பற்றிய இலட்சியவாதச் சித்திரமும் இந்தப் பௌத்த நூல்களில் காணப்படுகிறது.

இந்நூல்களுக்குப் பின் அரசியலைத் தனியே ஆராயும் அர்த்தசாஸ்த்ரங்கள் தோன்றுகின்றன. சுக்கிரன், பிருகஸ்பதி, மனு, உஷானஸ், பராசரன் ஆகியோர் அர்த்தசாஸ்த்ரங்களை எழுதினர் என்று கௌடில்யர் குறிப்பிடுகிறார். அந்த நூல்களிலிருந்து கருத்துகளைத் திரட்டி மேலும் வளர்த்துக் கௌடில்யர் தம் **அர்த்தசாஸ்த்ரத்தை** (கி.மு. 300—200) உருவாக்குகிறார். இந்த நூல்களின் ஆசிரியர்கள் அரசியலைத் தனிக் கலையாகப் பிரித்து

விரிவாக ஆராய்கின்றனர். அரசாங்கத்தின் எல்லாக் கூறுகளைப் பற்றியும் விவரிக்கின்றனர். படை, பொருளா தாரம் பற்றியும் பேசுகின்றனர். சட்ட ஆதாரங்களி லிருந்து இவர்கள் வேதத்தை விலக்கி வைப்பது குறிப்பிடத் தகுந்த மாறுதலாகும். அரசியலிலிருந்து சமயத்தை இவர்கள் பிரிந்து வைக்கின்றனர். உலகியல்நோக்கத்தையே முதன்மையாகக் கொண்ட இந்த ஆசிரியர்கள் பொருளே அறத்திற்கும் இன்பத்திற்கும் வேர் என்கின்றனர். அரசியல் நலத்திற்காக அறத்தையும் கைவிடலாம் என்பது இவர்களின் புதிய கோட்பாடாகிறது. காலத்திற் கொவ்வாத பழஞ் சட்டங்களைத் தூக்கி எறியத் தயங்கக் கூடாது என்பது இவர்கள் கருத்து. தண்டநீதிக்கும், 'கர்மா' கொள்கைக்கும் இவர்கள் முக்கியத்துவம் தருகின்றனர். பழைய பிராமண நூல்களைப் பின்பற்றி இவர்களும் பிராமணர்களுக்கு உயர்வும், சலுகைகளும், சட்ட விடுபாட்டுரிமையும் அளிக்கின்றனர். மத்திய மாநில அரசுபற்றிப் பேசும் இவர்கள் அயல்நாட்டுக் கொள்கை பற்றியும் விரிவாக விளக்குகின்றனர்.

இப்பொழுது **மனுஸ்மிருதி** என்று வழங்கும் நூல் பிற்காலத்து மனுவால் (கி.மு.200—கி.பி.200) உருவாக்கப் பட்டதாகும். தமக்கு முன் தோன்றிய பிராமண நூல் களின் அரசியல் கோட்பாடுகளையே மனு பின்பற்றிச் செல்கிறார். பிராமணர்கள் அகிலத்தின் தலைவர்கள் என்றும், உலகில் உள்ள செல்வம் அனைத்தும் அவர் களுடைய உடைமை என்றும், இழிந்த தொழில்களைச் செய்தாலும் அவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்றும், சூத்திரர்கள் அவர்களுக்குக் குற்றேவல் செய்யப்படைக்கப் பட்ட அடிமைகள் என்றும் கூறுவதன் மூலம் மனு பிராமண மேன்மைக் கொள்கையை அதன் மிகையான எல்லைக்கே கொண்டு செல்கிறார். பிராமணர் தம்மைக் காக்க ஆயுதம் ஏந்தலாம் என்பதும், அயல்நாட்டுப் பிரச்சினை போன்ற முக்கியமான விஷயங்களில் அரசன் பிராமண அமைச்சர்களோடு மட்டுமே ஆலோசனை

செய்ய வேண்டும் என்பதும் மனுவின் புதிய கருத்துக்கள். அர்த்தசாஸ்திரக் கொள்கைக்கு மாறாக அறம், பொருள், இன்பம் என்ற மூன்றுக்கும் ஒத்த மதிப்பை அளிக்கும் மனு பசியைத் தணிக்கத் திருடுவது குற்றமல்ல என்கிறார். வருண பேதத்தைக் கடுமையாகப் பேணுவதும், சாதிக் கொரு நீதியும் மனுவின் தனிப் பண்புகளாகக் காணப் படுகின்றன.

இதே கால கட்டத்தில் தோன்றிய மஹாபாரதம் இதிகாசமாயினும் சாந்திபர்வத்தின் முதலிரண்டு சருக்கங் களில் அரசியலைப் பற்றி மிக விரிவாகப் பேசுகிறது. மற்ற வருண தருமங்களைவிட அரச தருமமே உயர்ந்தது என்பது அதன் முக்கியமான கோட்பாடாகும். எல்லா வகையிலும் தனக்கு முன் தோன்றிய பிராமண நூல்களின் கோட்பாடுகளையே பின்பற்றிச் சென்றாலும் சில இடங் களில் மஹாபாரதம் வேறுபடவும் செய்கிறது. சமய நூல் களையும், மரபையும் அரச தருமத்தின் ஆதாரமாக ஸ்மிருதிகள் மதித்தன. மஹாபாரதம் இவற்றுக்கு மாறாக அறிவையும், புரிந்துணர்வையும் ஆதாரமாகக் கருதுகிறது. பழைய ஸ்மிருதிகள், அர்த்தசாஸ்த்ரம் இரண்டின் கலப்பை யும் மஹாபாரதத்தில் காணமுடிகிறது. அது தண்ட நீதியைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது. சமூக ஒப்பந்தக் கொள்கையையும் அது ஓரிடத்தில் குறிப்பிடு கிறது. அரசியலில் அறத்தை வலியுறுத்தினாலும் போரில் வெற்றி பெறச் சூழ்ச்சியைக் கையாளலாம் என்றும் அது கூறுகிறது. தீய அரசனுக்கு எதிராக மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடலாம் என்றும் அவனைக் கொல்லவும் செய்யலாம் என்றும் அது கூறுவது பழைய நூல்களில் காணப்படாத புதிய கருத்தாகும்.

இந்திய அரசியல் கோட்பாடுகளை உருவாக்குவதில் இந்த நூல்கள் பெரும் பங்கு வகித்தன. நடைமுறையிலும் இவற்றின் பாதிப்பு இருந்தது என்பதை இந்திய நாட்டு வரலாறு மூலம் உணரமுடிகிறது. வான்மீகியைப்

பொறுத்தவரை பிராமணக் கோட்பாடுகளின் ஆதிக்கத்தை மிகுதியாகக் காண முடிகிறது. இருப்பினும் சில பௌத்தக் கோட்பாடுகளின் பாதிப்பும் அங்கங்கே தெரிகிறது.

தமிழில் அரசியல் நூல் என்று கூறத் தக்க வகையில் தனி நூல் ஒன்று இல்லை. இக் குறையைத் திருக்குறளின் பொருட்பால் ஓரளவுக்குத் தீர்த்து வைக்கிறது. வள்ளுவரின் அரசியல் கோட்பாட்டில் சமண பௌத்தக் கோட்பாடுகளின் செல்வாக்கைக் காண முடிகிறது. சங்க இலக்கியப் புறப் பாடல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பெருங்காப்பியங்களிலும் ஆங்காங்கே சில அரசியல் கருத்துக்கள் காணப்படுகின்றன.

'கல்வியில் பெரியவனாகிய' கம்பன் இந்தக் கோட்பாடுகளை அறிந்திருந்தான் என்பதோடு இவற்றை விமர்சனப் பார்வையோடு அணுகி, தன் சிந்தனையில் உருவாகியிருக்கும் நல்லரசுக்கு உதவும் சிறந்த கருத்துக்களை எடுத்துக் கொண்டு ஒவ்வாத கருத்துக்களை ஒதுக்கியிருக்கிறான் என்பதை அவன் காப்பியம் உணர்த்தி நிற்கிறது. அவன் உருவாக்கிய அரசியல் கோட்பாட்டில் அவன் காலத்தில் வேறு எவரும் சிந்திக்காத, சிந்திக்க முடியாத—புரட்சிகரமான கருத்துக்கள் காணப்படுகின்றன. முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்தவனாயினும் ஒரு நல்லரசில் மக்களுக்குத் தரப்பட வேண்டிய முக்கியத்துவத்தை அவன் உணர்ந்திருந்தான். மக்களுக்குத் தரப்பட வேண்டிய முக்கியத்துவத்தை மறுத்ததோடு அவர்களுக்கு எதிராகவும் செயல்படுகிற போக்கைக் கண்டு முடியாட்சியை, அதனுடைய அப்போதைய சீரழிந்த நிலையில் வெறுக்கவும் செய்தான். இந்த அடிப்படையிலேயே அவனுடைய அரசியல் கோட்பாடு அமைகிறது.

அரசின் தோற்றம்

அரசியல் சிந்தனையாளர்கள் முதன் முதலில் அரசு எவ்வாறு தோன்றியிருக்கும் என்பது பற்றி நெடுங்காலமாகவே ஆராய்ந்து வந்துள்ளனர். அதன் விளைவாகப் பல்வேறு கோட்பாடுகள் தோன்றியிருக்கின்றன. அவை தெய்வீக உரிமைக் கோட்பாடு (The Theory of Divine Origin), வலிமைக் கோட்பாடு (The Force Theory), சமூக ஒப்பந்தக் கோட்பாடு (The Social Contract Theory), வரலாற்று அல்லது பரிணாமக் கோட்பாடு (The Historical Evolutionary Theory), தந்தைவழிக் கோட்பாடு (The Patriarchal Theory), தாய்வழிக் கோட்பாடு (The Matriarchal Theory) என்பனவாகும்.

கம்பன் அரசியல் கோட்பாட்டு நூல் எழுதவில்லை. எனவே இந்தக் கோட்பாடுகளைப் பற்றி எல்லாம் அவன் விளக்கமாகக் கூறுவான் என்று எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் தன் சிந்தனையில் தோன்றியிருக்கும் உன்னதமான அரசியல் கோட்பாட்டுக்கு—ஒரு நல்லரசுக்கு—எதிரான இரண்டு கோட்பாடுகளைப் பற்றி மட்டும் அவன் பேசுகிறான். அவை தெய்வீக உரிமைக் கோட்பாடு, வலிமைக் கோட்பாடு என்பனவாகும்.

தெய்வீக உரிமைக் கோட்பாடு

அரசின் தோற்றம் பற்றிக் கூறும் கோட்பாடுகளில் தெய்வீக உரிமைக் கோட்பாடே மிகத் தொன்மையானதாகும். அரசு இறைவனால் ஏற்படுத்தப்பட்டதென்றும் அரசன் இறைவனுடைய பிரதிநிதி என்றும் இக்கோட்பாடு கூறுகிறது. இக்கோட்பாட்டின்படி மக்களை இறைவன் தானே ஆள்கிறான் அல்லது தன் பிரதிநிதிகள் வழியாய் ஆள்கிறான். அரசன் ஆண்டவனின் அம்சம் என்பதால் அவன் ஆண்டவனுக்கே பொறுப்பாளியாவான் மக்களுக்கல்ல. அரசனை எதிர்ப்பது ஆண்டவனை எதிர்ப்பதாகும்.

அவன் கொடுங்கோலனாக இருந்தாலும் மக்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்தே நடக்க வேண்டும். அரசனின் விருப்பத்தை எதுவும் கட்டுப்படுத்தாது.

பிராமண நூல்கள் இக்கோட்பாட்டையே முன் வைக்கின்றன. ரிக் வேதம் அரசனை 'அர்த்த தேவ' என அழைக்கிறது (IV 42. 8- 9.) அரசன் ஆண்டவனின் மனித வடிவம் என்கிறது மனுஸ்மிருதி (VII 8). அரசன் இந்திர னுக்கும், எமனுக்கும் இணையானவன் என்பது கௌடில்ய ரின் கருத்து. விஷ்ணு ப்ரிது என்பவனுக்குத் தன் சாரத்தை வழங்கி அரசனாக்கியதாக (XII 59) மஹாபாரதம் கூறுகிறது. எல்லா உலகங்களும் அரச னின்றி அச்சத்தால் எப்பக்கங்களிலும் சிதறுண்டிருங்கால் அவற்றைக் காத்தற் பொருட்டுப் பிரமதேவன் இந்திரன், வாயு, எமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய இவர்களுடைய அழிவில்லாத கூறுகளைக் கொண்டு அரசனைப் படைத்தான் (1. 71, 72) என்பது சுக்கிரநீதியின் கொள்கை. 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' (2454) என்ற நம்மாழ்வாரின் பாடல் தமிழ் நாட்டிலும் சிலர் இக் கொள்கையை ஏற்றி ருந்தனர் என்பதைக் காட்டுகிறது.

இக்கோட்பாடு ஆளும் வர்க்கம் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ளும் சுயநலச் சுரண்டல் நோக்கோடு கற்பனையாக உருவாக்கிக் கொண்டதென அரசியல் அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும் இக்கோட்பாடு மக்கள் உரிமைக்கும் சமூக நலனுக்கும் எதிரானதென்றும், இக்காலத்தில் குடியாட்சி அமைக்கப்படும் முறை இக் கோட்பாட்டைப் பொய்யாக்கி விட்டதென்றும் அவர்கள் விமர்சித்துள்ளனர்.

தன்னுடைய நல்லரசுக்கு இக்கோட்பாடு ஒவ்வாதது என்பதால் கம்பன் இதனை நிராகரிக்கிறான். காட்டில் இராமனைக் கண்டு அரசாட்சியை ஏற்றுக் கொள்ளுமாறு

பரதன் வேண்டியபோது அவன் மறுத்து விட்டதைக் கண்ட வசிட்டன் இராமனை இணங்கச் செய்வதற்காக இக்கோட்பாட்டை எடுத்துக் காட்டுகிறான். பிரமன் உலகத்தைப் படைக்கத் தொடங்கியபோது சூரிய குலம் முதலில் தோன்றியது; அக்குலத்தில் பிறந்த அரசர்கள் இதுவரை அரசு புரிய மறுத்ததில்லை என்று அவன் கூறுகிறான்.

அன்றுஅவன் உலகினை அளிக்க, ஆகியது
உன்தனிக் குலம்; முதல் உள்ள வேந்தர்கள்
இன்று அளவினும் முறை இகந்துளார் இலை
(2496)

கம்பன் இதை வசிட்டன் கூற்றாக அமைத்திருப்பதில் பொருள் உண்டு. அவன் இக்கோட்பாட்டை உருவாக்கி ஆதரித்தோர் வழிவந்தவன். இராமாயணக் கதையோ இக்கோட்பாட்டிற்கு எதிரான நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கிறது. கம்பன் கதைதரும் வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு இக்கோட்பாட்டை வீழ்த்துகிறான். தெய்வீக உரிமைக் கோட்பாட்டைக் காரணம் காட்டித் தன்னை வற்புறுத்தும் வசிட்டனிடம் இராமன் ஒரு சங்கட மான கேள்வியைக் கேட்கிறான். 'தந்தையின் ஆணையைத் தலைமேற் கொண்டு அதை நிறைவேற்ற முடி துறந்து காட்டுக்கு வந்து விட்டேன். நீயோ அதற்கு மாறாக அரசை ஏற்கச் சொல்கிறாய்; நான் என்னதான் செய்ய வேண்டும்? நீயே சொல்' என்று அவன் கேட்கிறான்.

முன்னுறப் பணித்தவர் மொழியை யான்என
சென்னியில் கொண்டு, 'அது செய்வென்' என்றதன்
பின்னுறப் பணித்தனை, பெருமையோய்! எனக்கு
என்இனிச் செய்வகை? உரைசெய் ஈங்கு (2502)

'நீ எடுத்துக் காட்டிய கோட்பாட்டைக் காப்பாற்றுவதற் காக நான் தந்தை சொல்லைத் தட்டும் குற்றம் புரிய வேண்டுமா?', என்று இராமன் கேட்பது வசிட்டனுக்குப்

புரிகிறது. அது மட்டுமல்ல, 'தெய்வீக உரிமையுடைய மன்னன் தயரதனின் ஆணையை நான் நிறைவேற்றா விட்டால் அதுவும் தெய்வத்தை எதிர்த்ததாகத்தானே ஆகும்? என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்?' என்று அவன் தன்னை மடக்குவதும் புரிகிறது. இதற்கு வசிட்டன் என்ன மறுமொழி தர முடியும்? எனவே அவன் 'உரைப்பது ஓர் முறைமை கண்டிலெம் இனி' (2503) என வாய் மூடி மௌனமாகிறான். இராமன் வாயிலாகக் கம்பன் கேட்கும் கேள்வியில் தெய்வீக உரிமைக் கோட்பாடு பொடிப் பொடியாகி விடுகிறது.

மற்றோரிடத்திலும் கம்பன் இக்கோட்பாட்டுக்கு எதிராக இராமனைப் பேச வைக்கிறான். சுக்கிரீவனுக்கு முடிசூட்டியபின் அவனுக்கு அறிவுரை கூறும் இராமன்,

வாய்மைசால் அறிவின் வாய்த்த
மந்திர மாந்தரோடும்,
தீமைதீர் ஒழுக்கின் வந்த
திறத்தொழில் மறவரோடும்,
தூய்மை சால் புணர்ச்சி பேணித்
துகள்அறு தொழிலை ஆகிச்
சேய்மையோடு அணிமை இன்றி,
தேவரின் தெரிய நிற்றி (4122)

என்கிறான். 'தேவரின் தெரிய நிற்றி' என்ற சொற்கள் இங்கே கவனத்திற்குரியவை, 'உன்னைத் தேவர்களைப் போல் கருதும்படி நிற்பாயாக' என்பது இதன் பொருள். 'உன்னுடைய நடத்தையால் மற்றவர்கள் உன்னைத் தேவனாகக் கருதி மதிக்க வேண்டும்' என்றே இராமன் கூறுகிறான். இங்கு சுக்கிரீவன் தேவனல்லன்; ஆனால் நடத்தையால் தேவனைப் போல ஆக முடியும் என்பதே இராமனின் கருத்து.

மற்றொன்றையும் இங்கே கவனிக்க வேண்டும். தெய்வீக உரிமைக் கோட்பாட்டின்படி வாலிதான்

கிட்கிந்தையின் மன்னன். அந்த உரிமையின்படி அவன் சுக்கிரீவனை அடித்துத் துரத்தியதிலோ, அவன் மனைவியைக் கவர்ந்து கொண்டதிலோ யாரும் தவறு காணக் கூடாது. அப்படிக் கண்டால் அது பாபமாகும். ஆனால் இராமனோ அவற்றைக் குற்றம் என்று கூறியதல்லாமல் அவனைக் கொல்லவும் செய்கிறான். அவனைக் கொல்வதற்குத் தன்னை அழைத்து வந்த சுக்கிரீவனையும் அரசனாக்குகிறான். தேவன் என்று கருதி அவன் எத்தகைய தவறுகள் புரிந்தாலும் அவனை மதிப்பது வேறு. நல்ல நடத்தையால் உயர்ந்த ஒருவனைத் தேவனாகக் கருதி மதிப்பது வேறு. கம்பன் இதையே இங்கே சொல்ல விரும்புகிறான். இது தெய்வீக உரிமைக் கோட்பாட்டுக்கு முற்றிலும் எதிரானதாகும். இராவணனைக் கொன்று விபீடணனை அரசனாக்குவதும் இதைப் போன்றதே.

வான்மீகி தெய்வீக உரிமைக் கோட்பாடுடையவர். இராமன் வாலியிடம், 'அரசர்கள் மனித வடிவில் பூமியில் நடமாடும் தெய்வங்கள்' (4. 18. 41 - 42) என்று கூறுமிடத்தில்இதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்நிகழ்ச்சியைப் பாடும்போது கம்பன் இக் கருத்தைத் தவிர்க்கிறான். வேறு சில இடங்களிலும் வான்மீகி இதே கருத்தைக் கூறுகிறார். அந்த இடங்களிலும் கம்பன் அதைத் தவிர்க்கிறான். இவை எல்லாம் கம்பன் இக்கோட்பாட்டை நிராகரிக்கிறான் என்பதையே நிரூபிக்கின்றன.

தெய்வீக உரிமைக் கோட்பாடு அரசனை யாரும் தட்டிக் கேட்க முடியாத இடத்தில் அமர்த்துகிறது. இது அரசனை அச்சமற்றவனாக்கி அவனைச் சர்வாதிகாரியாக, கொடுங்கோலனாக ஆக்கிவிடும். சரித்திரம் இதற்குச் சான்றாக நிற்கிறது. மேலும் இக்கோட்பாடு முடியாட்சி ஒன்றையே ஏற்றுக் கொள்வது. அதிலும் அமைச்சரவைக்கோ, அவர் ஆலோசனைக்கோ இங்கே அவசியமே இல்லை. ஏனெனில் அரசன் தெய்வம் என்பதால் அவனுக்கு எல்லாமே தெரியும்.

அவனுக்கு ஆலோசனை கூறுவது ஆண்டவனை அவமதிப்பதாகும். மக்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை. அவர்கள் அரசனை வணங்கு வதற்காகவே படைக்கப்பட்டவர்கள். அவர்கள் விருப்பத்துக்கோ, உரிமைகளுக்கோ இங்கே இடம் இல்லை. மேலும் இக்கோட்பாடு பல கேள்விகளுக்கு விடை தர முடியாமல் நிற்கிறது, ஆண்டவன்தான் அரசர்களை உண்டாக்குகிறான் என்றால் அந்த அரசர்கள் எப்படித் தவறு புரிகிறார்கள். உலகத்தைக் காப்பதற்காகப் படைக்கப்பட்ட சூரிய குலத்து மன்னன் தயரதன் எப்படித் தவறிழைக்கிறான்? குடி பழி தூற்றும் கொடுங் கோலர்களை, வழி அலா வழியில் சென்று உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும் இராவணர்களை ஆண்டவன்தான் அரச பதவியில் அமர்த்துகிறானா? இக்கேள்விகளுக்கெல்லாம் தெய்வீக உரிமைக் கோட்பாட் டிடம் பதில் இல்லை. இத்தகைய கோட்பாடு ஒரு நல்லரசுக்கு ஊறு விளைவிக்கும் என்பதை நன்குணர்ந்த கம்பன் இதைத் தூக்கி எறிகிறான்.

வலிமைக கோட்பாடு

அடுத்துக் கம்பன் நிராகரிக்கும் கோட்பாடு வலிமைக் கோட்பாடாகும். வலியவர் தம் வலிமையால் எளியவரை அடக்கி ஆண்டதன் மூலம் அரசு பிறந்தது என்பது வலிமைக் கோட்பாடாகும். சரித்திரம் இதற்குச் சான்று பகர்கிறது. கம்பன் இதை மறுக்கவில்லை. அரக்க வலிமை கொண்டவர்கள் அந்த வலிமையால் அரசனாவதையே அவன் எதிர்க்கிறான்.

அரசு அமைக்கவும் அதனைக் காக்கவும் வலிமை தேவையே. ஆனால் அந்த வலிமை அறத்தை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு நல்லரசுக்கு வலிமை மட்டுமே போதாது. அறிஞர்களின் ஆலோசனை, மக்களின் ஆதரவு இவையெல்லாம் வேண்டும். இவை யெல்லாம் ஒன்று சேரும்போதுதான் ஒரு நல்லரசு உருவாக முடியும்.

'அதிகாரம் கெடுக்கும்; அதிக அதிகாரம் அதிகமாகக் கெடுக்கும்' (Power corrupts; and more power corrupts more) என்பர். வரலாற்றில் ஹிட்லரும், முசோலினியும் இதற்குச் சான்றாகத் திகழ்கின்றனர். 'வன்மையே நன்மை' (might is right) என்ற கொள்கை கொடுங்கோலர் களையே உற்பத்தி செய்திருக்கிறது. நன்மை நாடாத வன்மை நாசத்தையே விளைவித்திருக்கிறது. கம்பன் இராவணன் வாயிலாக இந்த உண்மையை உணர்த்து கிறான்.

இராவணன் தன் ஆட்சியை வலிமையால் ஏற்படுத்தி யவன். குபேரனைத் தன் வலிமையால் துரத்திவிட்டு அவனுக்குரிய இலங்கையை அபகரித்துக் கொண்டவன். அந்த வலிமை கொண்டே மூவுலகையும் வென்று பேரரசையும் அமைத்துக் கொண்டவன். இதனை, 'கொற்றம் அது முற்றி வலியால் அரசு கொண்டேன்' (3125) என்று அவனே கூறுகிறான்.

அவன் வலிமையே அவனை ஆணவம் கொள்ளச் செய்தது. அந்த வலிமையே அவனை வழியலா வழியில் செலுத்தியது. அரக்க வலிமை அநீதிக்கே வழிவகுக்கும் என்பதை அறிந்த கம்பன் அத்தகைய அரக்க வலிமையால் அரசு தோன்றுவதை வெறுக்கிறான். இராவணனின் வரம்பிலா மற வலியால் விளைந்த கேடுகளை விவரித்த தன் மூலம் வலிமைக் கொள்கையின் தீமைகளை உணர்த்து கிறான். இராவணனின் அழிவைக் காட்டி இத்தகைய கொடிய வல்லரசுகள் இறுதியில் அழிந்தே தீரும் என்பதை யும் சுட்டிக்காட்டுகிறான். மக்கள் உரிமைகளுக்கு எதிரான இந்த இரண்டு கோட்பாடுகளையும் நிராகரித்ததன் மூலம் ஒரு நல்லரசில் மக்களின் கருத்துக்கும் உரிமைகளுக்கும் உரிய மதிப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற தன் கோட்பாட்டின் அடிப்படையையும் புலப்படுத்துகிறான்.

நல்லரசு

முடியாட்சியின் குறைகளை உணர்ந்த கம்பன் அக்குறைகள் நீங்கிய நல்லரசு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும் தன் காப்பியத்தில் விளக்குகிறான். அந்த அரசின் வடிவம் எப்படி இருக்க வேண்டும், அவ்வரசின் பண்புகள் யாவை என்பதையும் அவன் சுட்டிக்காட்டு கிறான்.

அரசாங்கத்தின் வடிவம்

ஒரு நல்லரசு அது மேற்கொள்ளும் அரசாங்க வடிவத்தையும் அதன் நோக்கத்தையும் பொறுத்து அமைகிறது. கம்பன் விரும்பும் அரசாங்க வடிவத்தை ஆராய்வதற்கு அடிப்படையாக அரசாங்க வடிவங்களைப் (Forms of Governments) பற்றி அறிவது அவசியமாகிறது. இறைமை (Sovereignity) யாரிடம் இருக்கிறது என்பதைப்பொறுத்தே அரசாங்க வடிவம் அமைகிறது. அரசாங்கச் செயற் பாட்டிற்குத் தேவைப்படும் மேன்மையான அதிகாரத் தகுதியே இறைமை எனப்படுகிறது.

அரசாங்கத்தின் வடிவங்களை ஆராய்ந்த ப்ளேட்டோ இறைமையைச் செலுத்தும் ஆட்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அவற்றை முடியாட்சி (Monarchy), உயர்குடி ஆட்சி (Aristocracy), மிதக் குடியாட்சி (Moderate Democracy) என்று மூன்றாக வகைப்படுத்துகிறார். இறைமை ஒருவனிடம் இருந்தால் அது முடியாட்சி ஆகும்; மேன்மக்கள் சிலரிடம் இருந்தால் அது உயர்குடி ஆட்சி எனப்படும். மக்களிடம் இருந்தால் அது குடியாட்சி எனப்படும். இவை சுயநல நோக்கம் கொண்டு சீரழியும் போது முடியாட்சி கொடுங்கோலாட்சி யாகவும் (Tyranny), உயர்குடி ஆட்சி குழு ஆட்சியாகவும் (Oligarchy), மிதக் குடியாட்சி மிகைக் குடியாட்சியாகவும் (Extreme Democracy) மாறும் என்பது அவரது கருத்து.

அரிஸ்டாட்டிலும் அரசாங்க வடிவங்களை இவ்வாறே மூன்றாக வகைப்படுத்தினாலும் மூன்றாவது வடிவத்தை மக்களாட்சி (Polity) என்றும் அதன் சீரழிந்த வடிவத்தைக் கும்பலாட்சி (Democracy) என்றும் அழைக்கிறார். முதலில் தோன்றியது முடியாட்சியே என்றும் அது கொடுங்கோன் மையாகத் திரிந்த போது மக்கள் புரட்சி செய்ய உயர்குடி ஆட்சி அமைந்தது என்றும், அதுவும் குழு ஆட்சியாகக் கோடியபோது மக்கள் புரட்சியால் மக்களாட்சி அமைந்தது என்றும் அதுவும் கும்பலாட்சியாகச் சீரழியும் போது மக்கள் ஆற்றல் பொருந்திய ஒருவனுடைய ஆட்சியை நாட மீண்டும் முடியாட்சி அமையுமென்றும் அரிஸ்டாட்டில் கருதுகிறார். அரிஸ்டாட்டிலினுடைய வகைப்பாட்டில் நவீன அரசின் வடிவங்கள் காணப்பட வில்லை என்றும், கலப்பு வடிவ அரசு பற்றியும் அதில் குறிப்பில்லை என்றும் வடிவங்களின் மாற்றம் முறைப்படி இவ்வாறுதான் நிகழும் என்று கூற முடியாது என்றும் அவரை விமர்சிப்பவர்கள் உண்டு. அரிஸ்டாட்டில் அவருடைய காலத்தில் கிரேக்க நாட்டில் இருந்த நகர அரசுகளின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே தம் கோட்பாட்டை உருவாக்கி இருக்கிறார். நவீன அரசாங்க வடிவங்களும் அவற்றின் இன்றைய பெயர் களும் அவருடைய கோட்பாட்டில் இல்லை. எனினும் அவருடைய வகைப்பாடு இவற்றை அடக்கிக் கொள்ளும் முறையிலேயே அமைந்திருக்கிறது.

இந்திய நாட்டில் உயர்குடி ஆட்சியைக் கொண்ட சமுதாயக் குடியரசுகளைப் (Aristocratic clan-Republics) பற்றிய குறிப்புக்களைப் பௌத்த நூல்களில் காண முடிகிறது, அவை 'சங்கம்' அல்லது 'கணம்' எனப்பட்டன. கிழக்கு இந்தியாவில் இத்தகைய குடியரசுகளில்தான் பௌத்த மதம் வளர்ந்தது. புத்தருடைய காலத்திலிருந்த வஜ்ஜிகள் (Vajjis) எனப்படுவோரின் கூட்டுக்குடியாட்சி பற்றி தீகநிகாயா (II ப. 72-5), அங்குத்தரநிகாயா (IV ப. 17-20) என்ற இரு நூல்கள் தெரிவிக்கின்றன.

அடிக்கடி கூடிப் பேசுதல், ஒருமித்த கருத்தோடு செயல் படுதல், பழைய மரபுகளைப் பேணுதல், சமுதாயத்தின் பெரியோர்களை மதித்து அவர் சொல் கேட்டு நடத்தல், வழிபாட்டுத் தலங்களை மதித்து ஒழுகுதல், ஆருகதர் களைப் பேணிப் பாதுகாத்தல் ஆகியவற்றை இக்குடியரசு கொள்கைகளாகக் கொண்டிருந்தன என்று இந்நூல்களி லிருந்து அறிய முடிகிறது.

கௌடில்யரின் **அர்த்தசாஸ்த்திரமும், மஹாபாரதமும் (XII 81)** சமுதாயக் குடியரசுகள் பற்றிப் பேசுகின்றன. குடியரசுகள் பற்றிய இந்த இரு நூல்களின் கருத்துக்கள் பௌத்த நூல்களுக்கு மாறுபட்டு அமைந்திருக்கின்றன. இந்த இரு நூல்களும் தெய்வீக உரிமைக் கோட்பாட்டைக் கொண்டவை ஆதலின் பௌத்த நூல்கள் மக்களுக்கு வழங்கிய சுதந்திரத்தை இவை வழங்கவில்லை. மக்கள் அறியாமை உடையவர்கள் என்ற கொள்கையின் அடிப்படையில் அதிகாரம் தேர்ந்தெடுத்த சிலரிடமே இருக்க வேண்டும் என்று இவை வற்புறுத்துகின்றன.

தமிழ் நூல்கள் முடியாட்சி பற்றி மட்டுமே பேசு கின்றன. குடியாட்சி பற்றிய குறிப்புக்கள் ஏதும் இவற்றில் காண முடியவில்லை.

அரசாங்க வடிவம் பற்றிய கம்பனின் கோட்பாட்டில் மக்களுக்கும், அவர்களுடைய உரிமைகளுக்கும் அவன் அளிக்கும் முக்கியத்துவம் குறிப்பிடத் தகுந்ததாகும். இராமன் முடிசூடப் போகிறான் என்பதை அறிந்த போது மக்கள்,

> **பூவலயம் இன்று**
> **தனி அன்று பொது** **(1592)**

என்று கூறி மகிழ்ந்ததாகக் கம்பன் குறிப்பிடுகிறான். மிகச் சிறிய இந்த வாக்கியம் 'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டியது' போலக் கம்பனின் அரசியல்

கோட்பாடு அனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இதுவே அவன் கோட்பாடு அனைத்துக்கும் அடிப்படை. இதுவே அவன் கோட்பாட்டின் மூல வாக்கியம்.

'நாடு தனியொருவனுக்கு உடைமையானதல்ல; மக்கள் அனைவருக்கும் பொதுவானது' என்ற கருத்து குடியாட்சிக் கொள்கை பரவிய இக்காலத்தில் சாதாரணமாகத் தெரியலாம். கம்பன் இதைக் கூறிய காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்பதை நினைவில் கொண்டால் தான் இதன் மகத்துவம் புரியும். ஆள்பவன் ஆண்டவனின் அம்சம்; நாடும் மக்களும் அவனுடைய உடைமைகள் என்ற கோட்பாடு கோலோச்சிய நாட்டில்,

> தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
> வெண்குடை நிழற்றிய ஒருமையோர்
>
> (புறநா. 189)

என்றும்

> வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
> போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறாஅது
> ...கடந்தடு தானைச் சேரலாதன்
>
> (புறநா. 8)

என்றும்,

> தண்டமிழ் பொதுஎனப் பொறாஅன்
>
> (புறநா. 51)

என்றும் 'பொது' என்ற சொல்லைப் பொறுக்க முடியாத மாமன்னர்களின் ஏகாதிபத்தியத்தைப் புலவர்கள் புகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் 'பூவலயம் இன்று தனி அன்று; பொது' என்ற கருத்து உதிப்பது வியப்பிற்குரியது மட்டுமல்ல; புரட்சிகரமானது. காலவுணர்வுக்கு மாறாக இப்படிக் கூற வேண்டுமென்றால் ஒருவனுக்கு மனிதாபிமானமும், உண்மை அறிவும், புரட்சி

மனப்பான்மையும் வேண்டும். கம்பனுக்கு இவை எல்லாம் இருந்தன. கம்பனுக்குப் பின்னாலும்கூட இந்தக் கருத்தை யாரும் எடுத்தாளாதது அவனுடைய தனித்துவத்தையே காட்டுகிறது. இது கவிதை ஆவேசத்தில் தெறித்த தற்செயலான கருத்து எனக்கூற முடியாதவாறு கம்பன் பல இடங்களில் இந்தக் கருத்தை வற்புறுத்துகிறான்.

கம்பன் 'கோன் நிகர் குடிகள்' (126) என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிறான். இதன் மூலம் மக்கள் இறைமையில் சமமான பங்குடையவர் என்பதைத் தெரிவிக்கிறான், கம்பன் இரண்டு இடங்களில் மக்களை உயிராகவும், மன்னனை உடலாகவும் உவமிக்கிறான்.

வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினான்
உயிர்எலாம் தன்னுயிர் ஒக்க ஓம்பலால்,
செயிரிலா உலகினில் சென்று, நின்று, வாழ்
உயிர்எலாம் உறைவதுஓர் உடம்பும் ஆயினான்
(177)

வையம் மன்னுயிராக, அம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னன் (1423)

மக்களே உயிர் என்று கூறியதன் மூலம் மன்னனை விட மக்களே உயர்ந்தவர்கள் என்று தெரிவிக்கிறான். இந்திய மதங்களின் கொள்கைப்படி உயிர் அழியாதது; உடல் அழிவது. உடல்தன்னைக் காக்கும் ஆற்றலை இழந்து விட்டால் உயிர்அவ்வுடலைக் கைவிட்டு வேறோர் உடலை எடுத்துக் கொள்ளக் கூடியது. இந்தக் கருத்துக்களின் பின்னணியில் கம்பனின் உவமைக்குப் பொருள் காணும்போது மக்களுக்கு அவன் தரும் உயர்வும் சிறப்பும் மிகுதியாகப் புலப்படுகிறது. இதன் மூலம் மக்களுக்காகத்தான் மன்னனே அன்றி மன்னனுக்காக மக்கள் அல்ல என்று அவன் அழுத்தமாகச் சொல்கிறான்.

நெல்லும் உயிர்அன்றே; நீரும் உயிர்அன்றே
மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்(புறநா. 186)

என்று மன்னனை உயிராகக் கருதி அவனை முதன்மைப் படுத்தும் அரசியல் கோட்பாடு ஆதிக்கம் செலுத்திய நாட்டில்—காலத்தில்—மன்னனை உடலாக மாற்றி மக்களை உயிராக உயர்த்தி ஒரு புரட்சியைச் செய்கிறான். கம்பனுக்குப் பின்னால் தோன்றியும்கூடச் சேக்கிழார்,

மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலன் (1.2.14)

என்று மன்னனை உயிர் என்றே கூறி அவனை முதன்மைப் படுத்தும் கொள்கையையே பின்பற்றுவதைக் காணும் போது கம்பன் எந்த அளவுக்குக் காலவுணர்விலிருந்து வேறுபட்டு நிற்கும் புரட்சியாளன் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இராமனின் பட்டாபிஷேகப் பாடல் கம்பனுடைய அரசியல் கோட்பாட்டின் பல கூறுகளைப் புலப்படுத்து வதாக அமைந்திருக்கிறது.

அரியணை அனுமன் தாங்க,
அங்கதன் உடைவாள் ஏந்த,
பரதன் வெண்குடை கவிக்க,
இருவரும் கவரி பற்ற,
விரைசெறி குழலி ஓங்க,
வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான் மௌலி (10327)

வசிட்டன் மகுடம் சூட்டினான் என்று இந்தப் பாடல் கூறுகிறதே தவிர, யாருக்குச் சூட்டினான் என்று கூற வில்லை. மகுடம் இராமன் என்ற ஒரு தனிப்பட்ட மனித னுக்குச் சூட்டப்படவில்லை என்பதே இங்கே கம்பனின்

குறிப்பு. இதற்கு அடுத்து வரும் பாடலில் இதை வெளிப் படையாகவே கம்பன் கூறுகிறான்,

சித்தம் ஒத்துளன் என்று ஓதும்
திருமகர்த் தெய்வ நன்னூல்
வித்தகன் ஒருவன் சென்னி
மிலைச்சியது எனினும், மேன்மை
ஒத்த மூவுலகத்தோர்க்கும்
உவகையின் உறுதி உன்னின்,
தத்தம் உச்சியின் மேல் வைத்தது
ஒத்தது, அத் தாம மோலி. (10329)

மகுடம் இராமன் என்ற ஒருவனின் தலையில் சூட்டப் பட்டாலும், மூவுலகத்தில் உள்ளவர்களும் அது தங்கள் தங்கள் தலையில் சூட்டப்பட்டதாகவே எண்ணி மகிழ்ந்த தாகக் கம்பன் கூறுகிறான். மகுடம் என்பது அரசச் சின்னங்களில் ஒன்று; இறைமையின் குறியீடு. அது இறைமையின் அதிகாரங்கள் (Sovereign Powers), தனிச் சிறப்புரிமைகள் (Prerogatines), உரிமைகள் (rights), சட்டக் கருத்து (legal idea) ஆகியவற்றின் தொகுப்பு என்பர் சர் மாரிஸ் அமோஸ் (Sir Maurice Amos). மக்கள் அனைவரும் மகுடம் தத்தம் தலைகளில் சூட்டப்பட்டதாக நினைத்தனர் என்று கூறியதன் மூலம், மன்னனின் இறைமை அதிகாரத்தில் அனைவரும் பங்கு கொண்டனர் என்றும் அது தனி ஒருவனுக்கு வழங்கப்பட்ட இறைமை அல்ல என்றும் கம்பன் புலப்படுத்துகிறான். இவை யெல்லாம் அரசாங்கத்தில் மக்களின் பங்கு என்ன, அவர் களுடைய உரிமை என்ன என்பதைப் பற்றிய கம்பனின் கோட்பாட்டைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. ஆனால் கம்பன் குடியாட்சியைப் பரிந்துரைக்கவில்லை. அரசாங் கத்திற்குத் தலைவனாக இருந்து நிர்வாகம் செய்ய ஒருவன் வேண்டும் என்பதே அவன் கருத்து.

மன்னர் இன்றியே வையம் வைகல்தான்
தொன்மை அன்று (2243)

என வசிட்டன் வாயிலாகக் கம்பன் தன் கருத்தைக் கூறுகிறான். மேலும் தேவர்கள், அவுணர்கள், ஊர்வன, நீந்துவன, பறப்பன ஆகிய எல்லா உயிரினங்களுக்கும் உலகம் என்று சொல்லப்படுகிற எல்லா இடங்களிலும் காவல் செய்யத் தலைவன் ஒருவன் உண்டு; இறைவரை இல்லன யாவும் இல்லை (2251,2252) என்றும் கூறு கிறான்.

அரசாங்கத்தில் அமைச்சர்களுடைய இன்றியமை யாமை பற்றியும் கம்பன் உணர்த்துகிறான். பேராற்றல் பெற்றவராயினும் அமைச்சர் ஆலோசனை கேட்டு நடத்தலே அவர்க்கு நல்லது என அவன் கருதுகிறான்.

உமைக்கு நாதற்கும் ஓங்கு புள்ஊர்திக்கும்
இமைப்பில் நாட்டம் ஓர் எட்டு உடையானுக்கும்,
சமைத்த தோள்வலி தாங்கினர் ஆயினும்
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே (1421)

இவற்றை எல்லாம் ஒன்று கூட்டிப் பார்க்கும்போது கம்பன் விரும்பும் அரசாங்கத்தின் வடிவம் புலப்படுகிறது.

ஆட்சியில் மக்களுக்கு முதன்மை தர வேண்டும் என்றும் இறைமையில் அவர்களுக்குப் பங்கு இருக்க வேண்டும் என்றும் கம்பன் விரும்பினாலும் மக்களே நேரடியாக ஆளும் குடியாட்சி (Pure or Direct Democracy) பற்றி அவன் குறிப்பிடவில்லை. ஒரு நல்ல ஆட்சியை நடத்திச் செல்ல நிர்வாகத் தலைவன் ஒருவனும், அவனுக்கு அறிவுரை கூறி வழிகாட்டவும், அவன் வரம்பிக வாமல் கட்டுப்படுத்தவும் ஓர் அறிஞர் அவையும் தேவை என்பது கம்பன் கருத்து. இதிலிருந்து குடியாட்சி, முடியாட்சி, உயர்குடி ஆட்சி என்ற மூன்றின் நல்ல கூறுகள் அடங்கிய ஒரு கலப்பு வடிவ அரசாங்கமே (Mixed form of government) அவனுடைய பரிந்துரை யாகத் தெரிகிறது.

மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து, அமைச்சர்களின் சொற்கேட்டு நடக்கும் ஒரு நல்ல முடியாட்சியில் இத்தகைய கலப்பு வடிவத்தை நாம் காணமுடியும். ஆனால் நடைமுறையில் பெரும்பாலும் இவ்வாறு நேர்வதில்லை. தெய்விக உரிமை, பரம்பரை உரிமை போன்ற கோட்பாடுகளால் தான் யாருக்கும் கட்டுப்பட்டவன் அல்லன் என்ற எண்ணம் அரசர்களுக்குத் தோன்றி விடுகிறது. இதனால் மக்கள் கருத்தை மதிக்காத போக்கு உருவாகி விடுகிறது. அமைச்சர் அவை என்ற ஒன்று இருந்தாலும் அது அதிகாரம் ஏதுமற்ற அலங்கார நிறுவனமாக ஆகிவிடுகிறது. கம்பன் அரசன், அமைச்சர், மக்கள் ஆகிய மூவரும் இறைமையில் பங்கு பெற்றவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிற அதே நேரத்தில் இந்த மூவரும் வரம்பிகந்து செல்லாதவாறு ஒருவருக் கொருவர் தடையாக (Check) இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறான்.

மேனாட்டு அறிஞர்களில் சிலரும் இத்தகைய கலப்பு வடிவத்தைப் பரிந்துரைத்துள்ளனர். பழங்காலத்தில் அரிஸ்டாட்டிலும், பதினேழாம் நூற்றாண்டில் ஸ்பினோஸாவும் (Spinoza) உயர்குடி ஆட்சி, குடியாட்சி ஆகிய இரண்டும் கலந்த வடிவமே சிறந்தது என்று கருதுகின்றனர். நடைமுறையிலும் இத்தகைய கலப்பு வடிவ அரசாங்கங்களை நாம் காணலாம். முடியாட்சியும் குடியாட்சியும் கலந்த முறையையே இங்கிலாந்து பெற்றிருக்கிறது. ஜப்பான், நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளும் இத்தகைய அரசாங்கத்தைக் கொண்டவையே.

கலப்பு வடிவத்தை ஆதரிக்கும் கம்பன் அதில் பங்கு பெறும் அரசன், அமைச்சர், மக்கள் ஆகியோரின் கடமைகளையும் உரிமைகளையும் சுட்டிக்காட்டி இருக்கிறான். இவ்வாறு காட்டும்போது மக்களுக்கே முதன்மை தந்து அவர்களுடைய உரிமைகளுக்கு எதிரான பழங் கோட்பாடு

களைப் புறக்கணிக்கிறான். இனி, இந்த மூவர் பற்றியும் அவன் கூறும் கருத்துக்களைக் காண்போம்.

அரசனின் கடமையும் உரிமையும்

கம்பன் வேதத்தையும், மனு நூலையும் அரசநெறி காட்டும் நூல்களாகப் பல இடங்களில் குறிப்பிடுகிறான். தயரதனைப் பற்றிக் கூறும்போது அவனுடைய செங்கோல், 'மறை சொல்லும் நீதியை விடாது' (1029) என்கிறான். இராமனைப் பற்றிக் கூறும்போது,

> **மறை திறம்பாத வாய்மை**
> **மன்னர்க்கு மனுவில் சொல்லும்**
> **துறை திறம்பாமற் காக்கத்**
> **தோன்றினான் (4016)**

என்கிறான். இவ்விரு நூல்களையும் அவன் மதித்தாலும் இவற்றின் கொள்கைகளை முழுவதுமாக அவன் ஒப்புக் கொள்ளவில்லை. இந்நூல்கள் கூறும் தெய்வீக உரிமைக் கோட்பாட்டை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை முன்னரே கண்டோம். இந்நூல்களில் உள்ள மக்கள் உரிமைகளுக்கு எதிரான வேறு சில கோட்பாடுகளையும் கம்பன் நிராகரிக்கிறான்.

அரசன் இராஜசூய வேள்வி இயற்றுவதன் மூலம் இறைமை அடைவதாக சதபத பிராஹ்மணம் (V *3.3.6;9*) கூறுகிறது. இந்த வேள்வியால் அவன் தண்ட நீதியிலிருந்து விலக்குப் பெறுகிறான் என்றும் அது (V *4.4.7*) தெரிவிக்கிறது. இந்த வேள்வியின் மூலம் அரசன் தெய்வங்களோடு ஒத்தவனாகிறான் எனத் தைத்ரீய பிராஹ்மணம் (I *7.10.1-6*) கூறுகிறது. மக்களிடமிருந்தே அரசன் இறைமையை அடைய வேண்டும் என்ற கொள்கையுடைய கம்பன் வேள்வியின் மூலம்] அரசன் இறைமையை அடைகிறான் என்ற இந்த வேதக் கொள்கையைப் புறக்கணிக்கிறான். அறமும், அருளும், வாய்மையும் பேணி மக்களை உயிராய்க் கொண்டு

காக்கும் மன்னன் வேள்வி செய்ய வேண்டிய அவசியமில்லை என்று அவன் கூறுகிறான்.

வையம் மன்னுயிராக, அம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு,
ஐயம் இன்றி, அறம் கடவாது, அருள்
மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ?(1423)

கம்பன் இதனை வசிட்டன் கூற்றாக அமைத்ததன் மூலம் இக்கருத்துக்குத் தகுதியும், வலிமையும் ஏற்படுத்துகிறான். மேலும் மக்கள் இல்லாக் குறையைப் போக்கத் தயரதன் அசுவமேத யாகம் செய்ததாக வான்மீகி கூற, கம்பன் அசுவமேதத்தை நீக்கி,அவன் புத்திரகாமேஷ்டி (புதல்வரை அளிக்கும் வேள்வி, 208) செய்ததாக மாற்றிக் கூறுவதும் இங்கே கவனிக்கத் தக்கது.

பிராஹ்மணங்கள், ஸ்மிருதிகள், அர்த்தசாஸ்த்ரம், மனு ஆகிய நூல்கள்* முதலில் பிராமணர்க்கும் அடுத்து க்ஷத்திரியர்க்கும் அரசின் மேலாதிக்கத்தைத் தருகின்றன. பிராமணர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் அரசன் தலைவன் ஆவான் என்று கௌதமர் (XI 7-8] கூறுகிறார். வான்மீகியும் இந்தக் கொள்கையைப் பின்பற்றி, அரசன் யாவருக்கும் மேலானவன் (II 24-16) என்பதோடு அரசர் மனித உருவில் இவ்வுலகில் நடமாடும் தேவர் என்பதாலும், தருமம், நல்வாழ்வு, வாழ்வின் நன்மை யாவும் அவரால் கிடைப்பன ஆதலாலும் அவரை எதிர்க்கவோ, மறுக்கவோ கூடாது என்றும் (6 18. 41—42) கூறுகிறார், அரச முதன்மைக் கோட்பாடு எதேச்சாதிகாரத்துக்கு வழி வகுக்கும் என்பதால் கம்பன் இக்கோட்பாட்டை எதிர்க்கிறான். அரசன் தலைவன் என்ற முறையில் நடந்து கொள்ளக்கூடாது என்கிறான்.

---

* இனி இந்நூல்கள் சுருக்கம் கருதி வடநூல்கள் எனப்படும். இவற்றுள் பௌத்த நூல்கள் அடங்கா.

நாயகன் அல்லன்; நம்மை
நனிபயந்து எடுத்து நல்கும்
தாய்என இனிது பேணத்
தாங்குதி தாங்குவாரை (4128)

சுக்கிரீவனுக்கு அறிவுரை கூறும் இராமனின் கூற்றாக இதனை அமைத்ததன் மூலம் இக்கருத்துக்குக் கம்பன் வலிமை கூட்டுகிறான். மேலும் 'தாங்குதி தாங்குவாரை' என்றதன் மூலம் அரசனும், மக்களும் ஒருவருக்கொருவர் ஆதாரம் என்பதால் அரசனுக்கென்று தனி முதன்மை இல்லை என்பதையும் உணர்த்துகிறான்.

பிராமணர்களைக் காப்பதே அரசனின் தலையாய கடமை என்று வடநூல்கள் கூறுகின்றன. 'க்ஷத்ரிய' என்ற சொல்லுக்குப் 'பிராமணர்களைக் காப்பவன்' என்று மஹாபாரதம் பொருள் கூறுவது முன்னரே காட்டப் பட்டது. சமூகநீதிக்கு எதிரான இக்கோட்பாட்டையும் கம்பன் ஏற்கவில்லை.

தண்டகவனத்து அந்தண முனிவர்கள் அரக்கர்களின் கொடுமையிலிருந்து தம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று இராமனிடம் வேண்டியபோது அவன்,

அறம்தவா நெறி அந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலிதொலையேன் எனின்
இறந்து போகினும் நன்று (2649)

என்று கூறி அவர்களைக் காப்பதாக உறுதி தருகிறான். ஆனால் அதோடு நின்றுவிடாமல்,

ஆவுக்கு ஆயினும்; அந்தணர்க்கு ஆயினும்,
யாவர்க்கு ஆயினும், எளியவர்க்கு ஆயினும்
சாவப் பெற்றவரே, தகை வான் உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார் (2651)

என்கிறான். இதைப் போன்றே வாலியின் வினாக்களுக்கு மறுமொழி தரும்போது,

ஏதிலாரும் எளியர் என்றால் அவர்
தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்துஅரோ (4044)

என்று இராமன் கூறுகிறான். அரசன் என்பவன் குறிப்பிட்ட இனத்தின் நலம் காப்பதற்காக ஏற்படுத்தப் பட்டவன் அல்லன். அத்தகைய ஆட்சி சமூகநீதிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் உதவாது என்பதால் அதை நல்லாட்சியாகக் கருத முடியாது. மக்கள் அனைவரையும் சமமாக்க் கருதி அனைவரையும் காப்பவன்தான் நல்ல மன்னனாக இருக்க முடியும் என்ற கொள்கையைக் கம்பன் இராமன் வாயிலாகவே உணர்த்திக் காட்டுகிறான். அரசன் அனைவருக்கும் பொதுவானவனாக இருக்க வேண்டும் என்ற கருத்தை, 'பொதுநின்ற தலைமை' (4074) என்ற சொற்களாலும் கம்பன் விளக்குகிறான்.

மயில் முறைக் குலத்து மரபும், மனு நீதியும் மூத்த வனுக்கே பட்டம் என்ற முறையை வற்புறுத்துகின்றன. முடியாட்சியின் குறைகளுள் இதுவும் ஒன்று. மூத்தவன் எப்போதும் சிறந்தவனாக இருப்பான் என்று கூற முடியாது. மூத்தவன் என்ற உரிமையால் மூர்க்கன் முடி தரிப்பதை முடியாட்சியில் தவிர்க்க முடியாது. முடியாட்சி யின் இந்த அவலநிலையைச் சோழன் நலங்கிள்ளி சுட்டிக் காட்டுகிறான்.

மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிறல் தாயம்
எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்பெனக்
குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின் அது சிறந்தன்று மன்னே;
மண்டு அமர்ப் பரிக்கும் மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவன் ஆயின், ஆழ்நீர்
அறுகயம் மருங்கின் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல, நன்றும்
நொய்துஆல் அம்ம தானே, மையற்று
விசும்புஉற ஓங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே (புறநா.75)

பால்தர வரும் பழவிறல் தாயத்தால் சிறியோன் சிம்மாசனம் ஏறுவதும், விழுமியோன் வாய்ப்பிழப்பதும் நேரக் கூடியதே. வான்மீகியிலும் இந்தக் குறையைக் கூனி சுட்டிக் காட்டுகிறாள்.

அரசர்கள் மூத்த புத்திரனிடத்தில்
மாத்திரமே, குணசாலிகளான மற்ற
புத்திரர்கள் இருக்கும் பொழுதும்
ராஜ்ய காரியங்களை ஒப்புவிக்கிறார்கள்
(2. 8. 98-100)

கூனி சுயநல நோக்கத்தோடு இவ்வாறு கூறினும், அவள் கூற்றிலுள்ள உண்மையை மறுக்க முடியாது.

இராமாயணக் கதை இம் மயில் முறைக்குல மரபுக்கு மாறாகவே அமைந்திருக்கிறது. மூத்தவன் இராமன் முடியுரிமை இழக்க, இளையவன் பரதனுக்குப் பட்டம் கிடைக்கிறது. இராமன் மூத்தவர்களாகிய வாலியையும் இராவணனையும் கொன்று, இளையவர்களாகிய சுக்கிரீவனுக்கும், வீடணனுக்கும் முடிசூட்டி வைக்கிறான். இவ்வாறு இராமாயணமே முடியாட்சியின் முறையற்ற முறையை எதிர்த்துப் புரட்சி செய்திருக்கிறது. இங்கே இராமன் — பரதன் தொடர்பான மாற்றம் தவிர மற்ற இரு நிகழ்ச்சிகளிலும் சிறியவர்கள் அழிக்கப்பட்டுச் சிறந்தவர்கள் அரசாட்சியில் அமர்த்தப்படுகின்றனர். இராமன்-பரதன் தொடர்பான நிகழ்ச்சியிலும், 'மும்மையின் நிறை குணத்தவன், நின்னினும் நல்லனால்; குறைவு இலன்' (1609) என்று கோசலையாலும், 'ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ' (2337) என்று குகனாலும் பரதன் இராமனை விடச் சிறந்தவன் என்று பாராட்டப்படுவது குறிக்கத் தக்கது. இராமனுடைய செயல்களே அவன் மூத்தவனுக்கே முடியுரிமை என்ற மரபை ஏற்காதவன் என்பதைக் காட்டுகின்றன. சிறந்தவனே ஆட்சிக்கு வர வேண்டும் என்ற இந்தச் சிறந்த கொள்கை கம்பனுக்கு

உடன்பாடானது. இராமனை அதற்காகப் பாராட்ட விரும்பிய கம்பன் வாலியின் வாய்மொழி வாயிலாக அதனைச் செய்கிறான்.

கூட்டு ஒருவரையும் வேண்டாக்
கொற்றவ! பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே
தம்பிக்குக் கொடுத்துப் போந்து,
நாட்டு ஒரு கருமம் செய்தாய்;
எம்பிக்கு, இவ் அரசை நல்கி,
காட்டு ஒரு கருமம் செய்தாய்;
கருமம்தான் இதன்மேல் உண்டோ? (4023)

வாலி ஏளனக் குறிப்போடு இதைச் சொன்னாலும் உண்மையில் இது இராமன் செய்த புரட்சிக்குப் பாராட்டாகவே அமைந்திருப்பதைக் காணலாம். 'கருமம்' என்ற சொல் இங்கே 'புதிய செயல்,' 'புரட்சி' என்று பொருள்படக் கூடியது. 'கருமம்தான் இதன் மேல் உண்டோ?' என வாலி நடக்கப் போவதை அறியாமலே கூறுகிறான். இதற்கு மேலும் அந்தக் 'தருமம்' தொடர் கிறது. இராவணன் கொல்லப்பட்டு வீடணன் முடி சூட்டப்படுகிறான்.

வசிட்டன் இராமனுக்குக் கூறும் அறிவுரையின் வாயிலாக அரசனின் கடமைகள் சிலவற்றைக் கம்பன் சுட்டிக்காட்டுகிறான். அரசன் தீவினை நீங்கிய மேன்மை யான அந்தணர் சொற்கேட்டு நடக்க வேண்டும். நல்லற மும், மனச் செம்மையும், அருளும் கைக்கொள்ள வேண்டும். சூதாடல், வேட்டையாடல், பகலில் தூங்கு தல், வம்பளத்தல், காம இச்சை, பாட்டு, கூத்து, வாத்தியம் ஆகியவற்றில் பெருவிருப்பம் உள்ளவனாதல், வீணான திரிச்சல் முதலிய பத்துத் துக்கங்களைத் தவிர்க்க வேண்டும். எவரிடமும் பகை கொள்ளக் கூடாது. புலனடக்கம் பேண வேண்டும். பொருள் வளம் பெருக்க

வேண்டும். நடுநிலையோடு அரசாள வேண்டும். எவ்வுயிரிடத்தும் அன்பு காட்ட வேண்டும். இன்சொல், ஈகை, ஆராய்ச்சி, முயற்சி, தூய்மை, சீர்மை, வென்றி, நீதி உடையவனாயிருக்க வேண்டும். காலங் கருத வேண்டும். முனிவர் உரை பேண வேண்டும். இவை மரபு வழிப்பட்ட கருத்துக்கள் ஆதலின் கம்பன் இவற்றை வசிட்டன் வாயிலாக வெளிப்படுத்துகிறான்.

சுக்கிரீவனுக்கு முடிசூட்டிய பின் அவனுக்கு இராமன் கூறும் அறிவுரைகள் சில இங்கே ஆராயத்தக்கன.

> **புகைஉடைத்து என்னின், உண்டு**
> **பொங்குஅனல் அங்கு என்று உன்னும்**
> **மிகைஉடைத்து உலகம்; நூலோர்**
> **வினையமும் வேண்டற் பாற்றே;**
> **பகையுடைச் சிந்தையார்க்கும்,**
> **பயன்உறு பண்பின் தீரா**
> **நகையுடை முகத்தை ஆகி,**
> **இன்னுரை நல்கு. நாவால் (4123)**

என்பது இராமன் அறிவுரைகளில் ஒன்று. இங்கே 'வினையம்' என்பதை 'வஞ்சனை' என்று கொண்ட வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார், 'அகத்திற் பகைமையுடையராய்ப் புறத்திற் கூடியொழுகுவார் பக்கல் நீயும் அவர் போலவே நின்று புறத்தில் முகமலர்ச்சி காட்டி இன்சொற் பேசி அகத்தால் நட்காமல் அந்த அகப் பகைவரை அழித்தற்கு வேண்டிய ஜாக்கிரதையிலேயே இருத்தல் வேண்டும்' எனப் பின்னிரண்டு அடிகளுக்குப் பொருள் கொள்கிறார். இப்பாடலுக்கு இவ்வாறே பொருள் கொள்ளும் எஸ். இராமகிருஷ்ணன் இராமன் 'வரம்பு கடந்த துயரால் சிந்தை கலங்கி'* இவ்வாறு

---

* எஸ். இராமகிருஷ்ணன், கம்பன் கண்ட அரசியல், (மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், 1969), பக். 80—84.

அவன் இயல்புக்கு மாறாக மொழிந்ததாகக் கூறுகிறார். 'வினையம்' என்பதை இங்கே 'வஞ்சனை' என்று பொருள் படுத்த வேண்டியதில்லை, 'சூழ்ச்சி' என்று கொள்வதே பொருத்தமானது. 'பிரித்தல், பொருத்தல், பொருதல்' முதலிய செயல் வகைகளை 'வினையம்' என்று சாதி ஒருமையால் குறித்ததாகக் கொண்டும் உரைக்கலாம் என்று வை. மு. கோ. கூறுவதே இதற்குரிய பொருளாகக் கொள்ளத்தக்கது. ஏனெனில், 'பயனுறு, பண்பின் தீரா' என்ற அடைகள் 'வஞ்சனை; என்று பொருள் கொள்ள இடம் தரவில்லை. மேலும், 'யாண்டும் தீயன சிந்தியாமை' 'மெய்யன வழங்கல்' (4125), 'அறத்தினது இறுதி, வாழ் நாட்கு இறுதி' (4129), 'பாக்கியம் அன்றி, என்றும் பாவத்தைப் பற்றலாமோ?' (4130) என்றெல்லாம் உயர்ந்த அறிவுரை கூறும் இராமன் அதற்கு முரணாக வஞ்சனையை மேற்கொள்ளுமாறு கூறியிருப்பான் என்று கொள்வது எவ்வகையிலும் பொருத்தமுடையதாக இல்லை.

அடுத்து இராமன் பெண்களைப் பற்றி சுக்கிரீவனுக்குக் கூறிய அறிவுரை கருதத்தக்கது.

மங்கையர் பொருட்டால் எய்தும்
மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கைஇன்று உணர்தி; வாலி
செய்கையால் சாலும்; இன்னும்,
அங்கவர் திறத்தி னானே,
அல்லலும் பழியும் ஆதல்
எங்களின் காண்டி அன்றே;
இதற்கு வேறு உவமை உண்டோ? (4127)

மாந்தர்க்கு மங்கையரால் மரணமும், அல்லலும், பழியும் எய்தும் என்று இராமன் பெண்களின்மீது குற்றம் சுமத்துவதாக எஸ். இராமகிருஷ்ணன் இப்பாடலுக்குப் பொருள் கொள்கிறார்.* வாலி உருமையின் மீது

* எஸ். இராமகிருஷ்ணன், மே. கு., பக். 87—90.

கொண்ட காமத்தால் அழிந்தான். இதில் உருமையின் குற்றம் ஏதுமில்லை என்பது உண்மையே. சீதை பொன் மானை விரும்பியதிலோ, அதைப் பிடித்துத் தரச் சொல்லி கணவனை வற்புறுத்தியதிலோ தவறேதுமில்லை என்பதும் உண்மையே. மாரீசனின் குரல் கேட்டுத் தன் கணவனுக்கு ஆபத்து என்று நினைத்து இலக்குவனைக் கடுஞ்சொற்கள் பேசித் துரத்தியதிலும் அவள் கணவன் பால் கொண்ட காதல் உள்ளமே தெரிகிறது. இங்கே சீதை குற்றவாளிஇல்லை என்பதும் உண்மையே. இங்கே தவறிழைத்தவர்கள் ஆடவர்களே. இந்த அடிப்படை யிலேயே இப்பாடலுக்குப் பொருள் காணவேண்டும். பெண்கள் ஆடவர்களைக் கொல்வர் என்றோ அல்லலும், பழியும் ஏற்படுத்துவர் என்றோ இப்பாடல் கூறவில்லை. 'மங்கையர் பொருட்டால்', 'அங்கவர் திறத்தினானே' என்ற சொற்கள் பெண்களின் காரணமாக இவை நேரும் என்பதையே உணர்த்துகின்றன. பெண்களின் காரண மாக ஆடவர்க்கு ஏற்படும் பலவீனமே இங்குக் குறிக்கப் படுகிறது. காமமும், பெண்வழிச் சேறலும் ஆகிய பலவீனங்களே ஆடவரைத் தவறிழைக்கச் செய்கின்றன. இவை இரண்டுமே பெண்ணின்ப நாட்டத்தால் ஏற்படுபவை.

பெண்வழிச் சேறலுக்கு, 'இன்பம் காரணமாக மனையாள் வழி ஒழுகுதல்' என்று பொருள் கூறுகிறார் மணக்குடவர். எப்போதும் மனையாள் வழி ஒழுகுதல் கூடாது என்பது இதன் பொருள் அல்ல. செய்யக்கூடாத வற்றைச் செய்யுமாறு மனையாள் ஏவும்போது, அதனை மறுக்காது, இன்ப நாட்டத்தால் அதைச் செய்யத் துணிவதே பெண்வழிச் சேறலாகும். ஒரு பெண் மீது ஆடவன் கொள்ளும் காமத்திற்கு அப் பெண் காரணமாக இல்லாமல் இருக்கலாம். உருமையின் மீது வாலி கொண்ட காமம் இத்தகையதே. இங்கு ஆடவனே முழுதும் குற்றவாளியாகிறான். பெண்வழிச் சேறலும் ஆடவர்

புரியும் குற்றமே எனினும், இக் குற்றம் புரியத் தூண்டுபவர் என்ற வகையில் பெண்களுக்கும் இதில் ஓரளவுக்குப் பங்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. இராமன் தனக்கு நேர்ந்த துன்பங்களுக்கு இப் பெண் வழிச் சேறலே காரணம் என்று அனுபவத்தால் உணர்ந்தவன்.

பொன்மானைக் கண்டு மனம் பறிகொடுத்த சீதை அதைப் பிடித்துத் தரச் சொல்லி இராமனை வேண்டுகிறாள், அது மாயமான் என்று இலக்குவன் உணர்த்தியும் இராமன் அதை ஏற்கவில்லை. 'நான் வேண்டுமென்றால் பிடித்துத் தருகிறேன்' என்று இலக்குவன் கூறக் கேட்ட சீதை பெண்களுக்கே உரிய முறையில், இராமனை நோக்கி 'நீயே மானைப் பிடித்துத் தரமாட்டாயோ?' என்று கண்ணீர் சிந்திக் கோபத்தோடு போகிறாள். அவ்வாறு 'போனவள் புலவி நோக்கி' மனம் குலைந்த இராமன் மானைப் பிடிக்கச் செல்கிறான். இச்செயலில் அவன் இறங்கியபோது அவன் அறிவு வேலை செய்யவில்லை என்பதை,

நோக்கிய மானை நோக்கி
நுதியுடை மதியின் ஒன்றும்
தூக்கிலன் (3293)

என்ற சொற்களால் கம்பன் சுட்டிக் காட்டுகிறான். இது இராமன் இழைத்த தவறே. சடாயுவும் இதைச் சொல்லிக் காட்டுகிறான்.

வம்புஇழை கொங்கை வஞ்சி
வனத்திடை தமியள் வைக,
கொம்புஇழை மானின் பின்போய்க்
குலப்பழி கூட்டிக் கொண்டீர்;
அம்புஇழை வரிவில் செங்கை
ஐயன்மீர்! ஆயும் காலை
உமபிழை என்பது அல்லால்,
உலகம்செய் பிழையும் உண்டோ? (3526)

இராமன் இதனைத் தன் பிழையாக ஏற்றுக் கொண்டே அறிவுரை கூறுகிறானே அன்றிப் பெண்களைக் குற்றம் கூறவில்லை. காமமும், பெண்வழிச் சேறலும் தனி மனிதனுக்கே தீமை விளைவிப்பன; ஆட்சித் தலைவனுக்கோ பெருந்தீமை விளைவிப்பன. அதனாலேயே சுக்கிரீவனை எச்சரிக்கும் வகையில் இராமன் இந்த அறிவுரையைக் கூறுகிறான்.

அடுத்து, அரசன் என்பவன் மக்களுக்குப் பணி புரியும் காவலனே என்ற கருத்தைக் கம்பன் மிகுதியும் வற்புறுத்துகிறான். அரசனுக்கே நாடு உரியது; அவனே அதற்கு 'அதிபதி'. நிலத்தடியில் இருக்கும் செல்வம் அனைத்தும் அவனுடைய உடைமையே என்று மனுஸ்மிருதி (37,39) கூறுகிறது. கம்பன் இக்கொள்கையை எதிர்க்கிறான். அரசன் நாட்டின் காவலனே அன்றித் தலைவனல்லன் என்பதை அவன் வற்புறுத்துகிறான்.

> தேவரும் வெஃகற்கு ஒத்த
> செயிர்அறு செல்வம் அஃது உன்
> காவலுக்கு உரியது என்றால்,
> அன்னது கருதிக் காண்டி (4124)

நாட்டின் செல்வம் குடிகளுக்கே உரியது என்று அக் காலக் கோட்பாடுகளுக்கு மாறான புரட்சிக் கருத்தையும் கம்பன் எடுத்துக் கூறுகிறான்.

> கலம் சுரக்கும் நிதியம்; கணக்கிலா
> நிலம் சுரக்கும் நிறை வளம்; நல்மணி
> பிலம் சுரக்கும்; பெறுதற்கு அரிய தம்
> குலம் சுரக்கும ஒழுக்கம-குடிக்கு எலாம் (69)

கலமும், நிலமும், பிலமும் தரும் செல்வம் எல்லாம் குடிமக்கள் அனைவருக்கும் உரியது என்பதையே கம்பன் இப்பாடல் மூலம் கூறுகிறான்.

தேவை ஏற்பட்டால் அரசன் பிராமணர்களைத் தவிர மற்றவர்களின் பொருளைக் கவர்ந்து கொள்ளலாம் என மனுஸ்மிருதியும் (9.18.20), மஹாபாரதமும் (12. 72. 21-22) கூறுகின்றன. இந்த மக்கள் விரோதக் கொள்கையையும் கம்பன் எதிர்க்கிறான். அரசன் எவ்வகையிலும் பிறர் பொருளைக் கவர்வதற்கு விரும்பக் கூடாது (மேவின வெஃகல் இன்மை—4125) என்று கம்பன் கூறுகிறான். 'மேவின' என்ற சொல்லின் மூலம் அச்செல்வம் மக்கள் தங்கள் உரிமையால் பெற்றது என்பதையும் உணர்த்துகிறான்.

சுக்கிரீவனுக்கு இராமன் கூறும் அறிவுரையில், 'தாங்குதி தாங்குவாரை' (4128) என்ற சொற்கள் கம்பனின் இறைமைக் கோட்பாட்டைத் தெளிவாக விளக்குகின்றன. அரசனுக்கும் அரசுக்கும் அடிப்படையாக இருந்து தாங்குவோர் மக்களே என்று கூறி அவர்களுக்கு முதன்மை அளிக்கும் கம்பன் அவர்களைத் தாங்குவதே—காப்பதே— அரசனின் கடமை என்பதையும் உணர்த்துகிறான்.

அரசன் என்று நிர்வாக வசதிக்காக ஆட்சித் தலைவன் ஒருவன் இருக்க வேண்டும் என்று கம்பன் விரும்பினாலும் இறைமை முழுவதையும் அவனிடம் ஒப்படைக்கவில்லை. அவனுடைய அதிகாரம் வரம்புக்கு உட்பட்டது என்றே கூறுகிறான்.

நாட்டின் செல்வம் யாருக்கு உடைமை என்பதே அரசாங்கத்தின் வடிவத்தைத் தீர்மானிக்கிறது என்பார் ஜேம்ஸ் ஹேரிங்டன். நாடு ஒரு தனி மனிதனின் உடைமை என்றால் அது முடியாட்சி என்றும், உயர்குடியினர் ஒரு சிலரின் உடைமை என்றால் அது கலப்பு முடியாட்சி என்றும், மக்கள் அனைவருக்கும் உடைமை என்றால் அது மக்கள் பொதுவுரிமை (Commonwealth) அரசு

என்றும் அவர் விளக்குகிறார்.* இந்த விளக்கத்தின்படி கம்பன் காட்டும் அரசை முடியாட்சி என்று கூறமுடியாது என்பதை அறியலாம். 'பூவலயம் இன்று தனி அன்று; பொது' என்று அவன் நாட்டையும், அதன் செல்வங்களையும் மக்களின் பொதுவுரிமையாக்குகிறான். எனவே இதனை மக்கள் பொதுவுரிமை அரசு என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

அமைச்சர் அவை

ஒரு நல்லரசுக்கு அறிஞர்கள் நிரம்பிய அமைச்சர் அவையும் அவசியம் என்று கம்பன் கருதுகிறான். சுக்கிரீவனுக்கு முடிசூட்டிய பின் இராமன் அவனுக்கு உரைக்கும் அறிவுரையில் முதலில் அமைச்சர் அவையைத் தான் வற்புறுத்துகிறான். வாய்மையும், அறிவும் உடைய அமைச்சர்களோடு குற்றமற்ற சேர்க்கையை விரும்பி பிழையற்ற செயல்களைச் செய்து அவர்களை அகலாமலும் அணுகாமலும் இருக்க வேண்டும் என்று அவன் கூறுகிறான்.

வாய்மைசால் அறிவின் வாய்த்த
மந்திர மாந்தரோடும்
தூய்மைசால் புணர்ச்சி பேணித்
துகளறு தொழிலை ஆகிச்
சேய்மையோடு அணிமை இன்றி,
தேவரின் தெரிய நிற்றி (4122)

இராமன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டியபின் தன்னுடன் இருந்து தனக்குப் பணி செய்ய விரும்பிய அனுமனைத் தடுத்துச் சுக்கிரீவனுக்குத் துணையாகச் செல்லுமாறு பணிக்கும் போது, ஓர் அரசுக்கு அமைச்சரின் பணி எத்துணை இன்றியமையாதது என்பது உணர்த்தப்படு

---

* M. G. Gupta, *'History of Political Thought'* (Allahabad, 1973), P. 43.

கிறது. கிட்கிந்தையை ஆற்றல் நிரம்பிய வாலி ஆண்டான். அத்தகைய அரசைச் சுக்கிரீவனைப் போன்றவன் கைப் பற்றி ஆளும்போது நன்மைகளே அன்றித் தீமைகளும் விளைய வாய்ப்புண்டு. இந்நிலையில் அனுமனைப் போன்று பெரும் பாரத்தைத் தாங்க வல்ல அறிவுடையவர் களாலேயே அவ்வரசு நிலைபெறும் என்று இராமன் அனுமனுக்குக் கூறுகிறான்.

> **நிரம்பினான் ஒருவன் காத்த**
> **நிறை அரசு இறுதி நின்ற**
> **வரம்பு இலாததனை, மற்று ஓர்**
> **தலைமகன் வலிதின் கொண்டால்,**
> **அரும்புவ நலனும் தீங்கும்;**
> **ஆகலின், ஐய! நின்போல்**
> **பெரும் பொறை அறிவினோரால்,**
> **நிலையினைப் பெறுவது அம்மா! (4143)**

அமைச்சர் அவையில் எத்தகையவர் இருக்கவேண்டும் என்பதையும் கம்பன் விளக்குகிறான். தயரதனுடைய அமைச்சர்களைப் போன்று தக்க நேரத்தில் செயல்படாத வர்களாக, இராவணன் அமைச்சர்களைப் போல் அரச னுக்குத் தவறான ஆலோசனை கூறுகிறவர்களாக அவர் கள் இருக்கக்கூடாது என்பதை எதிர்மறையாக விளக்கும் கம்பன் நேர்முகமாகவும் சில கருத்துக்களைக் கூறுகிறான். தயரதனுடைய அமைச்சர்களை அறிமுகப்படுத்தும்போது அவன் கூறும் பண்புகள் உண்மையில் தயரதனுடைய அமைச்சர்களுடையன அல்ல; அவை பொதுவாகச் சிறந்த அமைச்சர்களின் பண்புகளாகும்.

அமைச்சர்கள் தொன்மையான குடியில் பிறந்தவர் களாக இருக்க வேண்டும்; பல கலைகளைக் கற்றிருக்க வேண்டும்; கேள்வி அறிவும் பெற்றிருக்கவேண்டும்; நடுநிலை மேற்கொண்டு சினம் கடிந்து அறச் செயல்களை

இயற்றுபவர்களாக இருக்க வேண்டும் (1318). நிகழ்ந்தவற்றால் நிகழப் போவதை உய்த்துணர்பவர்களாக, ஊழ்வினையால் விரும்பத் தகாதவை நிகழ்ந்தால் அதனை மாற்ற வல்ல முயற்சி உடையவர்களாய், மானத்தில் கவரிமானை ஒத்தவர்களாய் இருக்க வேண்டும் (1319). காலமும், இடமும், கருவியும் அரசநீதி நூல்களுக்கு ஏற்பத் தெளிவாகச் சிந்தித்து அரசனுக்கு உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுபவர்களாக இருக்க வேண்டும் (1320). அரசன் சினந்தாலும், தம்முயிர்க்கு அஞ்சாது, நீதியை எடுத்துரைப்பவர்களாகவும், நன்னெறி தவறாதவர்களாகவும், மாறிப் பேசாதவர்களாகவும் இருக்கவேண்டும் (1321). அரசனுக்கு நன்மை தருவனவற்றையும், தீமை தருவனவற்றையும் ஆலோசித்து மருத்துவன்போல் அவனுக்கு நலம்பயக்கும் செயல்களையே செய்யவேண்டும். துன்பம் நேர்ந்த காலத்தில் அவற்றைப் போக்கும் சூழ்ச்சித் திறன் உடையவர்களாக இருக்கவேண்டும். இவையே கம்பன் விவரிக்கும் அமைச்சர்களின் பண்புகளாகும் (1322).

ஆட்சிப் பொறுப்பு திறமை வாய்ந்த அறிஞர்களிடம் ஒப்படைத்தால் அவர்களுடைய அறிவும், அனுபவமும் நாட்டு நலனுக்குப் பயன்படும் என்றும், நாட்டில் நிலையான கொள்கைகள் உறுதியாகக் கடைப்பிடிக்கப் படும் என்றும். அரசாங்கம் தரமுடையதாயிருக்கும் என்றும் அரசியல் நூலார் கருதுகின்றனர். அதனாலேயே இத்தகைய ஆட்சி 'சிறந்த ஆட்சி' எனப்பட்டது.* ஆனால் இதில் அதிகாரம் ஒரு சிறு குழுவிடம் ஒப்படைக்கப் படுவதால் காலப் போக்கில் இது சீரழிந்து குழு ஆட்சி (Olizarchy) ஆக மாற வாய்ப்பு உண்டு. அதனாலேயே

* Aristocracy என்ற சொல் Aristos Kratos என்ற கிரேக்கச் சொற்களின் இணைப்பாகும். Aristos என்பதற்குச் 'சிறந்த' என்றும், Kratos என்பதற்கு 'அதிகாரம்' என்றும் பொருள்.

கம்பன் ஒரு குழுவிடம் மட்டுமே அதிகாரத்தை ஒப்படைக்க விரும்பாமல், இக்குழுவை அரசாங்கத்தின் ஓரங்கமாகவே வைக்க விரும்புகிறான். இதனால் அவர்களுடைய அறிவும் திறமையும் வீணாகாமல் நாட்டு நலனுக்குப் பயன்பட வழி ஏற்படும். அதே நேரம், ஒரு பக்கம் அரசனும், மறுபக்கம் மக்களும் இக்குழு தானே முழு அதிகாரம் பெற்று விடாதபடி தடைச் சக்திகளாக இருப்பர். இம்முறையினால் உயிர்குழு ஆட்சியின் நன்மைகளை அரசு பெற்றுக் கொள்கிறது; அதன் தீமைகளைத் தவிர்த்துவிடுகிறது.

மக்கள் உரிமை

ஒரு நல்லரசில் மக்களின் பங்கு பற்றியும், உரிமை பற்றியும் கோசல நிகழ்ச்சிகளின் வாயிலாகக் கம்பன் விளக்குகிறான். பரம்பரை உரிமையில் ஒருவன் அரசன் ஆனாலும் அவன் மக்களின் சம்மதத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைச் சில இடங்களில் உணர்த்துகிறான். கைகேயி இராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டுப் பரதனுக்கு முடி சூட்ட வேண்டும் என்று தயரதனிடம் வரம் கேட்டபோது, 'நள்ளாது இந்த நானிலம்' (1520) என்கிறான், வசிட்டன் 'கொள்ளாது உலகம்' (1648) என்கிறான். பரதனும், 'பாரோர் கொள்ளார்' (2184) என்கிறான். இவர்கள் அனைவரும் ஒருவன் அரசனாவதற்கு மக்களின் சம்மதமும் வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றனர். முடியாட்சியானாலும் அதற்கும் மக்களின் சம்மதம் தேவை என்பதையே கம்பன் கதை மாந்தர் கூற்று வாயிலாக உணர்த்துகிறான்.

அரசன் தவறு செய்தால் அதைக் கண்டிக்கும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகவே கம்பன் தயரதனின் தவறுகளை - மக்கள் குறை கூறுகிற காட்சிகளை அமைக்கிறான்.

கான்றயும் என்றுரைத்த
கைகேசியும், கொடிய
கூனியும் அல்லால்
கொடியார் பிறர் உளரோ? (1704)

என்று அவர்கள் கைகேயியையும், கூனியையும் ஏசுகின்றனர்.

ஆதி அரசன் அருங் கேகயன் மகள்மேல்
காதல் முதிரக் கருத்தழிந்தான் ஆம் (1708)

என்று தயரதனைப் பழிக்கின்றனர்.

என்னே நிருபன் இயற்கை இருந்தவா?
தன்நேர் இலாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து, முறை திறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால் பிழையாதோ மெய்? (1713)

என்று தயரதனின் வாய்மை வாதத்தின் போலித் தன்மையைப் புலப்படுத்துகின்றனர்.

கோதை வரிவில் குமரற் கொடுத்த நில
மாதை ஒருவர் புணர்வராம்? (1714)

என்று அவர்கள் அறச் சீற்றமும் கொள்கின்றனர். வெறும் பேச்சோடு அவர்கள் நிற்கவில்லை.

பெற்றுடைய மண் அவளுக்கு ஈந்து, பிறந்து உலகம்
முற்று உடைய கோவைப் பிரியாது மொய்த்து ஈண்டி,
உற்று உறைதும்; யாரும் உறையவே, சில் நாளில்,
புற்று உடைய காடு எல்லாம் நாடாகிப் போம் (1712)

என்றும் முடிவெடுக்கின்றனர். அதைச் செயல்படுத்தவும் முனைந்து இராமன் காடு செல்லப் புறப்பட்டபோது அனைவரும் திரண்டு உடன் செல்கின்றனர். முடியாட்சியில் மக்களால் செய்ய முடிந்தது இவ்வளவுதான். அரசன் தெய்வம்; அவன் ஆணைக்கு எதிராக நடப்பது பாவம் என்ற அக்கால நடைமுறைக் கோட்பாட்டை ஒப்புக்

கொள்ளாமல் அதற்கு எதிராக நாட்டையே துறந்த மக்களின் செயல் அக்காலச் சூழ்நிலையிலேயே ஒரு புரட்சியாகும். 'இராமன் தான் நம் மன்னன்; அவனோடு நாமும் காடு செல்வோம்; நாம் எல்லோரும் காட்டில் வசிக்க ஆரம்பித்தால் அக்காடே நாடாகிவிடும்', என்ற மக்கள் கூற்றின் மூலம் ஓர் அரசை உருவாக்கும் சக்தி மக்களுக்கே உண்டு என்ற கருத்தையே கம்பன் வற்புறுத்த விரும்புகிறான்.

இராமன் பட்டாபிஷேகப் பாடலில் இறைமையில் மக்களுக்குள்ள பங்கைக் கம்பன் குறிப்பாக உணர்த்துகிறான்.

வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான் மௌலி (10327)

என்று அவன் கூறுகிறான். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையன் வணிகம் செய்யும் வேளாண் மரபைச் சேர்ந்தவன். அவன் மரபைச் சார்ந்தவர்கள் மகுடத்தை எடுத்தளித்தனர் என்றால் வணிக, வேளாண் மரபைச் சார்ந்தவர்கள், அதாவது மக்களின் பிரதிநிதிகள் அளித்தனர் என்பது பொருள். மகுடம் அதிகாரத்தின், இறைமையின் சின்னம். அதனை மக்கள் எடுத்தளித்தனர் என்பதன் மூலம் அரசனுக்கு அதிகாரத்தை, இறைமையை அளிப்பவர்கள் மக்கள் என்பதையே கம்பன் இங்கே குறிப்பாக உணர்த்துகிறான். இது வான்மீகியில் இல்லாத கருத்து என்பதும் கருதத்தக்கது.

இராமன் பட்டம் தரித்தபோது அவன் சூடிய மகுடம் 'மூவுலகத்தோர்க்கும் தத்தம் உச்சியின் மேல் வைத்தது ஒத்தது' (10329) என்று கூறி ஒரு நல்லரசில் மக்கள் இறைமையில் பங்குடையவர்கள் என்பதைக் கம்பன் உணர்த்துகிறான். 'கோன் நிகர் குடிகள்' (126) என்ற அவன் கூற்றும் இதையே வற்புறுத்துகிறது. இதற்கும்

மேலாகத் 'தாங்குவார்' என்று மக்களைக் குறிப்பிடுவதன் மூலம் ஓர் அரசின் ஆதார சக்தி அவர்களே என்பதையும் அவன் சுட்டிக் காட்டுகிறான். மன்னன் உடல்தான்; மக்களே உயிர் என்று விளக்கியதன் மூலம் ஒரு நல்லரசில் மன்னன் அல்ல மக்களே முதன்மையானவர்கள் என்பதை யும் கம்பன் தெளிவாக உணர்த்துகிறான்.

இதுவரை கண்ட கருத்துக்களிலிருந்து முடியாட்சி, உயர்குடி ஆட்சி, குடியாட்சி ஆகியவற்றின் நல்ல பண்புகள் எல்லாம் ஒன்றிணைந்த ஒரு கலப்பு வடிவத் தையே கம்பன் விரும்புகிறான் என்பதை அறியலாம்.

கம்பனுடைய இந்தக் கலப்பு வடிவக் கோட்பாடு பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹேரிங்டன் என்ற அரசியல் அறிஞரின் அரசியல் கோட்பாட்டோடு ஓரளவுக்கு ஒத்திருப்பது இங்கே குறிப்பிடத் தகுந்தது. அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர் அவையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், இந்த அறிஞர் அவை மக்கள் இசைவோடு சட்டங் களை இயற்றவேண்டும் என்றும் இந்தச் சட்டங்களைச் செயல்படுத்த மேலாண்மை உடைய நடுவர் (Magistracy, the supreme executive head) ஒருவரை அறிஞர் அவை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். பொருளியல் அதிகாரத்தையும், அரசியல் அதிகாரத்தையும் சமனிலைப்படுத்திப் பேணுவதன் மூலம் இத்தகைய கலப்பு வடிவ அரசாங்கம் பொது நன்மைக்காகச் சிறந்த முறையில் பணியாற்ற முடியும் என்றும் அவர் விளக்கு கிறார்.* கம்பனுக்கும் ஹேரிங்டனுக்கும் இடையே அரசாங்கம் ஏற்படுத்தும் முறை பற்றி வேறுபாடு காணப் படினும் பலர், சிலர், ஒருவர் என்ற மூவகைக் கோட்பாட்டின் கலப்பு வடிவத்தைப் பரிந்துரைப்பதில் இருவரும் ஒத்துள்ளனர். இக்காலக் குடியாட்சியும்

---

* M. G. Gupta, Ibid., p. 45.

உண்மையில் இத்தகையதோர் கலப்பு வடிவமே கொண்டிருப்பது இங்கே கருதத்தக்கது.

நடையின் நின்றுயர் நாயகன்

ஒரு நல்லரசை மக்கள் சார்பாக நடத்திச் செல்லத் தலைவன் ஒருவன் வேண்டும் என்று விரும்பும் கம்பன் அத்தலைவன் எப்படி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் விளக்குகிறான். மூலக் கதையின் நிகழ்ச்சிகளை இதை விளக்குவதற்கான வாய்ப்பாகக் கம்பன் பயன்படுத்திக் கொள்கிறான். தெய்வீக உரிமைக் கோட்பாட்டையும், வலிமைக் கோட்பாட்டையும் மக்கள் உரிமைக்கு எதிரானவை என்பதற்காக அவன் நிராகரித்ததை முன்னரே கண்டோம். மக்களுடைய இசைவின்றித் தெய்வீக உரிமையின் பெயரால், அல்லது அரக்க வலிமையால் ஆட்சித் தலைவனாக ஒருவன் அமர்வது ஒரு நல்லரசின் நலத்திற்கு எதிரானது என்று அவன் கருதுகிறான். மக்களுக்காக அமைவதுதான் அரசு. அத்தகைய அரசின் தலைவன் மக்களின் இசைவைப் பெற்றவனாக அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவனாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை அவன் வற்புறுத்துகிறான். இக் கோட்பாட்டை வற்புறுத்துவதற்கு மூலக் கதையின் நிகழ்ச்சிகள் அவனுக்கு வாய்ப்பை அளிக்கின்றன. அதன் மூலம் இராமன் எவ்வாறு ஒரு நல்லரசின் தலைவன்ாக உருவாகிறான் என்பதைக் கம்பன் விளக்குகிறான்.

இராமன் கைகேயியின் வரத்தால் பரம்பரை உரிமைப்படி அவனுக்குக் கிடைக்க வேண்டிய அரச பதவியை இழக்கிறான். பதினான்கு ஆண்டுகள் கழிந்தபின் அவன் அரச பதவியில் அமர்கிறான். அவ்வாறு அவன் அரசனாவதற்குப் பரம்பரை உரிமை காரணமில்லை. பரதனே ஆள வேண்டும்; இராமன் காடு செல்ல வேண்டும் என்ற கைகேயியின் வரங்களுக்குத் தயரதன் இணங்கியபோதே

இராமன் அந்தப் பரம்பரை உரிமையை நிரந்தரமாகவே இழந்து விடுகிறான். பதினான்கு ஆண்டுகள் கழித்து இராமன் ஆளலாம் என்று கைகேயி கூறவில்லை. எனவே இராமன் அரச பதவியில் அமர்வது பரம்பரை உரிமையில் அல்ல; வேறோர் உரிமையிலேயே அவன் பதவியில் அமர் கிறான். அது எந்த உரிமை என்பதைக் கம்பன் தன் காப்பியம் முழுவதும் விளக்கிக் காட்டுகிறான்.

கைகேயியின் வரத்தால் இராமன் முடிசூடும் உரிமையை இழந்து விட்டான் என்பதை அறிந்ததும் மக்கள் கொதித்தெழுகின்றனர். மன்னனின் ஆணையைப் புறக்கணிக்கின்றனர். பரதனின் ஆட்சியை ஏற்க மாட்டோம் என்கின்றனர். இராமனே தங்கள் தலைவன் என்று முடிவு செய்கின்றனர்.

பெற்றுடைய மண் அவளுக்கு ஈந்து. பிறந்து உலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்து ஈண்டி
உற்று உறைதும்; யாரும் உறையவே சில்நாளில்
புற்றுடைய காடு எல்லாம் நாடாகிப் போம் (1712)

என்று தீர்மானிக்கின்றனர். இராமன் நகர் விட்டு நீங்கும் போது அனைவரும் நாட்டைத் துறந்து அவன் பின்னால் செல்கின்றனர். இந்த நிகழ்ச்சியின் மூலம் இராமன் மக்களால் விரும்பப்பட்டு, அவர்களால் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனாக— புதியதொரு அரசின் தலைவனாக— ஆகிவிடுகிறான். இந்தத் தலைமை உரிமை இப்போது மக்களால் தரப்படுகிறது.

பரதனும், வசிட்டனும் இராமனைக் காட்டில் சந்தித்து அரச பதவியை ஏற்றுக்கொள்ள வற்புறுத்திய போது அரச பரம்பரை உரிமையையே அதற்குக் காரண மாகக் காட்டுகின்றனர். 'தொல்லையோர் முறையின் நீங்கிய அரசு' (2474) என்றும், 'பிறந்து நீயுடைப் பிரிவில் தொல் பதம்' (2475) என்றும், 'முன்னர் வந்துஉதித்து... நீ பிறந்த பார்' (2486) என்றும் அரச பரம்பரை உரிமை

யையும், மூத்தவனுக்கே புட்டம் என்ற முடியாட்சி முறைமையையும் காரணம் காட்டியே பரதன் இராமனை முடி சூட வேண்டுகிறான். வசிட்டனோ, தெய்வீக உரிமையை எடுத்துக்காட்டி வற்புறுத்துகிறான். இந்த இருவர் வேண்டுகோளையும் இராமன் மறுக்கிறான். அதன் மூலம் இவ்வுரிமைகளின்படி தான் அரசனாவதை விரும்பவில்லை என்பதையே அவன் உணர்த்துகிறான். தந்தை சொல் காக்கவே இராமன் இவ்வாறு மறுக்கிறான் என்பது உண்மையே. அந்தத் 'தந்தை சொல்'லும் இவ்வுரிமைகளின்படி கிடைக்க வேண்டிய அரச பதவியை அவன் துறக்க வேண்டும் என்பதுதான்.

மெய்யைச் சிதைவித்து, நின்மேல்
முறைநீத்த நெஞ்சம்
மையின் கரியாள் எதிர், நின்னை
அம் மௌலி சூட்டல்
செய்யக் கருதி, தடை செய்குநர்
தேவரேனும்,
துய்யைச் சுடுவெங் கனலின்
சுடுவான் துணிந்தேன் (1728)

என்று இலக்குவன் கொதித்தெழுந்த போதும், இராமன் அவனைத் தணிவிக்கிறான். 'வரத்தால் நாடு உன்னுடையதே' என்ற இராமனிடம் பரதன்,

முன்னர் வந்து உதித்து, உலகம் மூன்றினும்
நின்னை ஒப்பிலா நீ பிறந்தபார்
என்னது ஆகில், யான் இன்று தந்தனென்,
மன்ன போந்துநீ மகுடம் சூடு (2486)

எனச் சாமர்த்தியமாக வாதம் செய்த போதும்,

பசைந்த சிந்தைநீ பரிவின் வையம் என்
வசம் செய்தால், அது முறைமையோ? (2488)

எனக் கூறி இராமன் மறுக்கிறான். இவையெல்லாம் இம்முறைகளில் அரசனாவது முறையன்று என்று இராமன் கருதுகிறான் என்பதையே உணர்த்துகின்றன.

இராமன் தண்டக வனம் அடைந்தபோது அங்கிருந்த முனிவர்கள் அரக்கர்கள் இழைக்கும் கொடுமைகளிலிருந்து தம்மைக் காக்குமாறு இராமனிடம் வேண்டுகின்றனர். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இராமன்,

சூர் அறுத்தவனும், சுடர் நேமியும்,
ஊர் அறுத்த ஒருவனும். ஓம்பினும்,
ஆர் அறத்தினொடு அன்றி நின்றார் அவர்
வேர் அறுப்பென்; வெருவன்மின் நீர் (2652)

என்று சூளுரைக்கிறான். இங்கே அரக்கர்களை மட்டுமல்ல, அறத்திற்கு எதிராக யார் நின்றாலும் அவர்களை வேரோடு அழிப்பேன் என்று இராமன் கூறுவது கருதத் தக்கது. முனிவர்களின் காவலனாக மட்டுமல்ல, அறத்தின் காவலனாகவே இராமன் இங்கே தன்னைப் பிரகடனப்படுத்துகிறான். கோசலத்து மக்களால் மன்னனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவன் இங்கே முனிவர்களால் அறத்தின் காவலனாக உயர்கிறான்.

வாலியினால் துன்புறுத்தப்பட்ட சுக்கிரீவன் இராமனிடம் அடைக்கலம் வேண்டும் போது,

நாயகம் உலகுக்கு எல்லாம்
என்னல் ஆம் நலம் மிக்கோயை
மேயினென் (3808)

என்கிறான். இராவணனால் துரத்தப்பட்டு இராமன்பால் அடைக்கலம் பெற வந்த வீடணனும்,

யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல் நணுகி நம் மனத்து
ஏயது முடித்தும் (6386)

என்கிறான். இராமன் உடைமா மகுடம் புனைந்திருந்தால் வெறும் கோசலத்தின் கோனாகத்தான் ஆகியிருப்பான். ஆனால் சடை மா மகுடம் புனைந்தபின் ஒரு சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக, உலகுக்கெல்லாம் நாயகம் என்னலாம் நலம் மிகுந்தவனாக, யாவர்க்கும் நாயகனாக உயர்ந்து நிற்கிறான். இந்தப் பதவி பரம்பரை உரிமையால் கிடைத்ததல்ல;பணியினால் கிடைத்தது.அரச பதவியை இழந்தவன் அரசர்களை உண்டாக்குகிறவனாக (King Maker) ஆகிறான். கிட்கிந்தையும், இலங்கையும் அவன் அருளாணைக்கு அடிபணிந்து நிற்கின்றன. இந்த வெற்றி அம்பினால் பெற்றதல்ல; அன்பினால் பெற்றது. அம்பினால் அவன் வாலியைத்தான் வென்றான். ஆனால் அதற்கு முன்பே அன்பினால் சுக்கிரீவனை—கிட்கிந்தையை அவன் வென்று விட்டான். அம்பினால் அவன் இராவணனைத்தான் வென்றான். ஆனால் அதற்கு முன்பே அன்பினால் வீடணனை—இலங்கையை அவன் வென்றுவிட்டான். பதினான்கு ஆண்டுகள் கழித்து இராமன் மகுடம் புனைந்தபோது, அவன் புனைந்த மகுடம் கோசல அரசுடையதல்ல; கைகேயியின் வரத்தின் படி அந்த மகுடத்தை அவன் புனைய முடியாது. அவன் புனைந்த மகுடம் கோசல எல்லைகளுக்கும் அப்பால் இலங்கை வரைக்கும் பரவிய ஒரு புதிய பேரரசின் மகுடம். அந்த மகுடம் பரம்பரை உரிமையால் புனைந்த மகுடம் அல்ல; அவன் பண்பையும் பணியையும் கண்டவர் அவனுக்குப் பரிவோடு உவந்தளித்த மகுடம்.

அரசின் தோற்றம் பற்றி ஆராய்ந்த அரசியல் அறிஞர்கள் பல்வேறு கோட்பாடுகளை எடுத்துரைக் கின்றனர் என்பதை முன்னர்க் கண்டோம். அவற்றுள் சமூக ஒப்பந்தக் கோட்பாடு (The Social Contract Theory) என்பதும் ஒன்று. மக்கள் தங்கள் பாதுகாப்பையும், உரிமைகளையும் கருதி செய்து கொண்ட ஓர் ஒப்பந்தப்படி ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டனர் என்பதே

சமூக ஒப்பந்தக் கோட்பாடாகும். பௌத்த நூலான தீக நிகாய சமூக ஒப்பந்தத்தின் மூலமே அரசன் உருவானான் (3. 84-95) என்று கூறுகிறது. இது வடநூல்கள் முன்வைத்த தெய்விக உரிமைக் கோட்பாட்டுக்கு எதிரானதாகும். மேலை நாட்டிலும் ரிச்சர்ட் ஹூக்கர் (Richard Hooker), ஹ்யூகோ க்ரோடியஸ் (Hugo Grotious), மில்டன் (Milton), ஆகியோர் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை ஆதரித்தனர். ஹாப்ஸ் (Hobbs), லாக் (Locke), ரூஸ்சோ (Rousseau) ஆகியோர் இக் கோட்பாட்டைத் தீவிரமாக வலியுறுத்தியவர்கள் ஆவர்.

கம்பன் இராமனை ஓர் அரசின் தலைவனாக உருவாக்கிக் காட்டுவதிலிருந்து அவன் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை ஆதரிப்பவனாகத் தெரிகிறது. தொடக்க காலத்தில் அரசு எவ்வாறு தோன்றியது என்பதைத்தான் இக் கோட்பாடு விளக்குகிறது. கம்பனோ ஒரு நல்லரசு இப்படித் தோன்றினால் நன்றாக இருக்கும் என்று கூறுகிறான்.

தொடக்கத்தில் தோன்றிய அரசன் மக்கள் கூட்டத்தால் சமூக ஒப்பந்தப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்பதால் 'மஹாசம்மத' என்று அழைக்கப்பட்டதாக தீக நிகாய (மே.கு.) குறிப்பிடுகிறது. இராமனை ஒரு மஹாசம்மதனாகவே கம்பன் உருவாக்கிக் காட்டுகிறான். மக்களின் பொது விருப்பமே (General will) அரசை உண்டாக்குகிறது என்ற ரூஸ்ஸோவின் கோட்பாட்டையும் நாம் கம்பனிடம் காண முடிகிறது.

இராமன் சூரிய குலத்துத் தோன்றல் என்பதாலோ, தயரதனின் தனயன் என்பதாலோ, இந்த மஹாசம்மதத்தையும், பொது விருப்பத்தையும் பெற்றுவிடவில்லை. அவனுடைய பண்பினாலும் பணியினாலுமே இவற்றைப் பெறுகிறான். கம்பன் இராமனை 'நடையின் நின்றுயர் நாயகன்' (11) என்ற அழகிய தொடரால் வருணிக்

கிறான். நல்லொழுக்கத்தில் நின்று அதனால் நாயகனாக உயர்ந்தவன் இராமன் என்பதையே கம்பன் இத் தொடரால் உணர்த்துகிறான். தனி மனிதனாக மட்டுமல்ல, ஓர் அரசியல் தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தன் வாழ்க்கையில் 'நடந்து காட்டி' அதனால் நாயகனாக உயர்ந்தவன் இராமன் என்ற பொருளையும் இத்தொடர் தருகிறது. இராமன் இவ்வாறு 'நடையின் நின்றுயர் நாயக'னாக உருவான வரலாற்றைக் கம்பன் தன் காப்பியத்தில் விவரிக்கிறான்.

இராமன் கல்வி கற்கும் பருவத்து இளவரசனாக இருக்கும்போதே மக்களை நேசிக்கிறவனாக, அவர்களோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய நலம் விசாரிக்கிறவனாக இருக்கிறான். அவன் வீதியில் செல்லும் போது எதிரில்வரும் மக்களை '*முதிர் தரு கருணையின் முகமலர் ஒளிர, எது வினை? இடர் இலை? இனிதின் நும் மனையும்? மதி தரும் குமரரும் வலியர் கொல்?!* (311) என்று கேட்பது அவன் வழக்கம். இந்த அன்பே மக்களின் பொது விருப்பத்திற்குரியவனாக அவனை ஆக்குகிறது

மூவாசை துறந்தவரும் பதவி ஆசை துறப்பது அரிது. இராமன் இளமைப் பருவத்திலேயே பதவி ஆசை அற்றவனாக இருக்கிறான். தயரதன் அவனுக்கு முடி சூட்டப் போவதாக அறிவித்தபோது அதை அவன் முழு மனதோடு ஏற்றுக்கொள்ளவில்லை. தந்தையின் சொல்லைத் தட்டக்கூடாது என்றே அதனை ஏற்கிறான். இதை அவனே,

> மன்னவன் இருக்கவேயும்
> 'மணிஅணி மகுடம் சூடுக'
> என்ன, யான் இயைந்தது அன்றான்
> ஏயது மறுக்க அஞ்சி (2491)

என்று பின்னால் பரதனிடம் கூறுகிறான். 'பரதனே முடி சூடுவான்; நீ காடு செல்ல வேண்டும்; இது அரசன்

ஆணை' என்று கைகேயி கூறியபோது பதவி பறிபோயிற்றே என்று அவன் பதைக்கவில்லை. மாறாக பெருந் துன்பத்திலிருந்து விடுவிக்கப்பட்டவன்போல் மகிழ்கிறான்.

தெருளுடை மனத்து மன்னன்
ஏவலின் திறம்ப அஞ்சி,
இருளுடை உலகம் தாங்கும்
இன்னலுக்கு இயைந்து நின்றான்,
உருளுடைச் சகடம் பூண்ட,
உடையவன் உய்த்த கார் ஏறு
அருளுடை ஒருவன் நீக்க
அப்பிணி அவிழ்ந்தது ஒத்தான் (1603)

காட்டில் பரதனும், வசிட்டனும் அவனை அரசேற்க வேண்டிய போதும் அவன் மறுக்கிறான், பதவியை விருப்பாதவனைத் தேடிப் பதவிவரும்என்பதற்குஉதாரண மாக இராமன் திகழ்கிறான். பதவி ஆசை அற்றவனிடமே பதவி ஒப்படைக்கப்பட வேண்டும்; அத்தகையவனே பதவியைத் தவறாகப் பயன்படுத்த மாட்டான் என்பதையே கம்பன் இங்கே குறிப்பாக உணர்த்துகிறான்.

தன் பதவியைப் பறித்த கைகேயியையோ, பரதனையோ அவன் வெறுக்கவில்லை. மாறாக அவர் களை மனைவி, மகன் என்ற உரிமையிலிருந்து தயரதன் விலக்கி விட்டான் என்பதை அறிந்து,

தீயள் என்று நீ துறந்த என்
தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம்
தருக (10079)

என்று தயரதனிடமே வரம் கேட்கும் அளவுக்கு உயர்ந்த குணம் உடையவனாகத் திகழ்கிறான்.

மிகத் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்ட குகனையும் சுக்கிரீவனையும் உடன்பிறப்புக்களாகக் கொண்டு இராமன் உறவு பாராட்டுகிறான். தன் துயர் நீக்கும் பணிக்கு முதன்மை தாராது சுக்கிரீவன் துயர் தீர்க்கும் பணியை மேற்கொள்கிறான். பகைவன் தம்பி என்றும் பாராது: அடைக்கலம் வேண்டி வந்த வீடணனை ஆதரிக்கிறான். தன்முன் படைக்கலம் இழந்து நிற்பவன் தன் மனைவியைக் கவர்ந்த மாபாதகன் என்றறிந்தும் 'இன்று போய் நாளை வா' என்று இராவணனுக்கும் இன்னருள் சுரக்கிறான். வாலியையும், இராவணனையும் வென்ற இராமன் நினைத்திருந்தால் அவ்விரு அரசு களுக்கும் தானே அரசனாயிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாது அவற்றிற்கு உரிமை உடைய சுக்கிரீவனுக்கும், வீடணனுக்கும் முடிசூட்டி வைக்கிறான். 'ஆர் அறத் தினொடு அன்றி நின்றார், அவர் வேர் அறுப்பென்' என்று சூளுரைக்கும் அறத்தின் காவலனாக,

ஆவுக்கு ஆயினும் அந்தணர்க்கு ஆயினும்
யாவர்க்கு ஆயினும் எளியவர்க்கு ஆயினும்
சாவப் பெற்றவரே தகை வானுறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார் (2651)

ஏதிலாரும் எளியர் என்றால் அவர்
தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்து (4044)

என்ற உயர்ந்த சமூகக் குறிக்கோள் உடையவனாக இருக்கிறான்.

தனி மனிதப் பண்பிலும் அவன் உயர்ந்தவனாகவே திகழ்கிறான். சூது முதலிய தீய பழக்கங்கள் அற்றவன் என்று வசிட்டனே அவனுக்கு நற்சான்றிதழ் வழங்கு கிறான் (1418). 'அறுபதினாயிரம்' மனைவியர்களை உடைய தந்தைக்குத் தனயனாக இருந்தும், 'இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்' (5378)

என்று ஏக பத்தினி விரதம் பூண்டவனாக இருக்கிறான். தந்தை சொல் காக்க எந்தத் தியாகமும் புரியத் தயங்காதவனாக இருக்கிறான். இதனாலேயே 'உரைசெயற்கு எளிதுமாகி அரிதும் ஆம் ஒழுக்கில் நின்றான்' (4138) என்று கம்பன் இராமனைப் பாராட்டுகிறான். இவ்வாறு ஓர் அரசியல் தலைவனுக்கு வேண்டிய உயர்ந்த பண்புகள் எல்லாம் ஒருங்கே அமைந்தவனாகவே இராமனைக் கம்பன் உருவாக்கிக் காட்டுகிறான்.

இராமன் உயர்பண்புகளெல்லாம் உடையவன் என்று பாராட்டினும், அவன் குறைகளே அற்றவன் என்று கூறக் கம்பன் முனையவில்லை. இராமனும் சில தவறுகள் செய்கிறான். இத்தவறுகளில் சிலவற்றைச் சுட்டிக்காட்டி இராமன் மீது குற்றம் சுமத்தியவர் முன்னிருந்தே இருந்தனர் என்பதை நிகமாந்த மகாதேசிகன் எடுத்துக் காட்டுகிறார்.

> பரம்பொருளும், பரம கல்யாண குணங்களுக்கு
> இருப்பிடமானவனும், எண்ணற்ற நல்ல
> காரியங்களைச் செய்திருப்பவனும், லட்சிய
> புருஷனுமான ராமனைப் பற்றி, 'அவன்
> தாடகை என்ற பெண்ணைக் கொலை செய்தான்,
> கரனிடம் யுத்தம் செய்தபோது காலைப்
> பின்னுக்கு வைத்தான், வாலியை மறைந்து
> நின்று அடித்தான்' என்ற மூன்று தவறுகளை
> இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிறது.

என்பது அவர் வாக்கு. இதில் கரனுடன் போர் செய்யும் போது இராமன் காலைப் பின் வைத்தான் என்ற குறையைக் கம்பன் காட்டவில்லை. ஆனால் அவன் வேறு சில குறைகளைக் காட்டுகிறான்.

இளம் பருவத்தில் இராமன் கூனியின் முதுகில் உண்டையால் அடிக்கிறான். சூர்ப்பணகை காம

வேட்கையோடு அணுகியபோது அவளிடம் விளையாட்டாகப் பேசுகிறான். இலக்குவன் மாயமான் என்று உணர்த்தியும் கேளாது, சீதையின் ஊடலைத் தீர்ப்பதற்காக மானைப் பின் தொடர்ந்து சென்று, மாரீசனின் சதி வலைக்குள் சிக்கித் துன்பங்களை வரவழைத்துக் கொள்கிறான்.

கம்பன் நினைத்திருந்தால், வான்மீகியில் உள்ள பல குறைகளை நீக்கிக் கதை மாந்தரை உயர்த்தியது போல் இராமனையும் குறைகளே அற்றவனாகக் காட்டியிருக்க முடியும், ஆனால் அவ்வாறு செய்ய அவன் விரும்பவில்லை. அதற்கு நுட்பமானதொரு காரணமுண்டு.

இராவணன் பெற்ற வரத்தின்படி அவனை மனிதனைத் தவிர வேறு யாரும் கொல்ல முடியாது. அதனால்தான் திருமால் இராமனாக மனித அவதாரம் எடுத்து வந்ததாகக் கதை கூறுகிறது. நாய் வேடம் போட்டால் குரைத்துத்தான் ஆக வேண்டும். மனித வேடம் தரித்தால் மனிதனாக நடந்துதான் ஆகவேண்டும். மனித இலக்கணம் என்ன?

> **மையல் மானுடமாய் மயங்கும் வழி**
>
> (பெரிய புராணம், திருமலைச் சிறப்பு, 28.)

எனச் சேக்கிழாரும்,

> **விண்ணுளாரையும் செறும் ஐம்புலன் இவை**
> **மண்ணுள் என்னைப் பெற்றால் என் செய்யா?**

என்று நம்மாழ்வாரும் மனித இயல்பைச் சுட்டிக் காட்டுகின்றனர். மயங்குவதும், ஐம்புல ஆசைகள் ஆட்டிவைக்க ஆடுவதும் அதனால் தவறுகள் புரிவதும் மனித இயல்பு. தவறுவது மனித இயற்கை (to err is human) என்பது ஆங்கில வழக்கு. எனவே திருமால் இராமனாக மனிதப் பிறவி எடுத்தால் மட்டும் போதாது; அவன் மனிதனாகவே ஆக வேண்டும். மனிதன் ஆக வேண்டும் என்றால் அதற்குரிய இலக்கணமாகிய மயங்குவதை, மயங்குவதால்

தவறு புரிவதை அவன் நிறைவேற்றியாக வேண்டும். மனிதனாகப் பிறந்தும் அவன் தவறே செய்யாதவனாக இருந்தால் — தெய்வமாகவே இருந்தால் அவன் இராவணனைக் கொல்ல முடியாது. வெறும் மனித வடிவமே போதும் என்றிருந்தால் திருமால் இராமனாகப் பிறந்து இவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டியதில்லை. தேவர்கள் வந்து முறையிட்டபோதே ஒரு மனித வடிவம் எடுத்து உடனே சென்று இராவணனைக் கொன்றிருக்கலாம். இந்த நுட்பமான காரணத்தை நன்கு உணர்ந்திருந்ததாலேயே கம்பன் மூலக்கதையில் காணப்படும் இராமனின் தவறுகளை, மறைக்காமல், மாற்றாமல் வெளிப்படுத்துகிறான்.

தவறு புரிவது மனித இயற்கை என்றாலும் புரிந்தது தவறு என்று தெரிந்தபின் அதற்காக வருந்தாமல் இருப்பது இழிந்த பண்பாகும். இப்பண்பு மனிதனை விலங்கு நிலையில் சேர்த்துவிடும். புரிந்தது தவறு என்று தெரிந்தபின் அதற்காக வருந்துவோன் உயர்ந்த மனிதனாகிறான். இராமனைத் தவறுகள் புரிகின்றவனாக மட்டும் காட்டாமல், புரிந்த தவறுணர்ந்து வருந்தும் உயர்ந்த மனிதனாகவே கம்பன் காட்டுகிறான்.

இளம் பருவத்தில் கூனியின் முதுகில் உண்டையால் அடித்தது தவறென்று இராமன் உணர்கிறான்.

சிறியர் என்று இகழ்ந்து நோவு
செய்வன செய்யல்; மற்று, இந்
நெறி இகழ்ந்து, யான் ஓர் தீமை
இழைத்தலால், உணர்ச்சி நீண்டு,
குறியது ஆம் மேனி ஆய
கூனியால் குவவுத் தோளாய்!
வெறியன எய்தி, நொய்தின்
வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன் **(4126)**

என்று சுக்கிரீவனுக்கு அறிவுரை கூறும்போது, தன் தவறுணர்ந்து வருந்தும் இராமனைக் காண முடிகிறது. இவ்வாறே காமம் கருதி வந்த சூர்ப்பணகையோடு விளையாட்டாகப் பேசியதும் தவறென்று உணர்ந்து அவன் வருந்துகிறான் என்பதை,

வளை எயிற்றவர்களோடு
வரும் விளையாட்டு என்றாலும்
விளைவன தீமையே ஆம் (2798)

என்ற அவன் உரையிலிருந்தே அறியலாம்.

'தாடகையைக் கொல்' என்று விசுவாமித்திரன் பணித்தபோது அவள் ஒரு பெண் என்று நினைத்து இராமன் தயங்குகிறான் (374). தாடகை வடிவத்தால் பெண்ணாயினும் செயலாலும் பண்பாலும் பெண் ணல்லள்; 'மன்னும் பல்லுயிர் வாரித் தன் வாய்ப் பெய்து தின்னும் புன்மையுடையவள்'(381) என்று விசுவாமித்திரன் சமாதானம் கூறியும் அதனால் மனம் நிறைவடையாத இராமன்,

அறன் அல்லவும்
எய்தினால், 'அது செய்க' என்று ஏவினால்,
மெய்ய! நின்உரை வேதம் எனக்கொடு
செய்கை அன்றோ அறம் செயும் ஆறு. (383)

என்று பழியை முனிவன் மீது தள்ளிவிட்டே தாடகைமீது கணை தொடுக்கிறான். தாடகை எத்தகையவளாக இருப்பினும் அவள் ஒரு பெண்ணே என்பதால் அவள்மீது கணை தொடுப்பது முறையல்ல என்ற எண்ணம் விசுவாமித்திரன் சமாதானம் சொன்ன பிறகும்கூட, இராமனை விட்டுப் போகவில்லை என்பதையே 'அறன் அல்லவும்' என்ற சொற்கள் காட்டுகின்றன. இராமன் இங்கே 'தரும சங்கட'மான நிலைக்கு ஆளாகிவிடுகிறான். பெண்ணைக் கொல்வதும் குற்றம்; தயரதனிடம் கேட்டு இதற்காகவே தன்னை அழைத்து வந்த, குருவின்

இடத்தில் உள்ள முனிவன் சொல்லை மறுப்பதும் குற்றம். இத்தகைய இக்கட்டான நிலையிலேயே இராமன் தாடகையைக் கொல்ல நேர்கிறது. இருப்பினும் அதற்காக இராமன் வருந்துகிறான். இராமன் வாலியைக் கொல்வதும் இத்தகைய தரும சங்கடமான நிலையிலேயே நிகழ்கிறது. வாலி பெற்ற வரத்தால், மனிதன் என்ற நிலையில், அவன் எதிரே நின்று அவனைக் கொல்ல முடியாது. சுக்கிரீவனுக்கு அடைக்கலம் தந்து, 'வாலி செய்த குற்றங்களுக்காக அவனைக் கொல்வேன்' என்று வாக்களித்திருந்ததால் அதைக் காப்பாற்றியாக வேண்டிய நிலையில் வாலியைக் கொல்லாமலும் இருக்க முடியாது. இந்தத் தருமசங்கடமான நிலையிலேயே இராமன் வாலியை மறைந்து நின்று கொல்ல நேர்கிறது. தாடகையையும் வாலியையும் கொன்ற இரு செயல்களும் வில்லறத்திற்கு மாறான குற்றங்கள் என்பதை இராமன் உணர்ந்து வருந்துகிறான். சுக்கிரீவன் இராமனை கிட்கிந்தைக்கு வந்து தங்கியிருக்குமாறு வேண்டியபோது, அதனை மறுக்கும் இராமன்,

> இல்லறம் துறந்திலாதோர்
> இயற்கையை இழந்தும், போரின்
> வில்லறம் துறந்தும், வாழ்வேற்கு,
> இன்னன மேன்மை இல்லாச்
> சில்லறம்; புரிந்து நின்ற
> தீமைகள் தீருமாறு,
> நல்லறம் தொடர்ந்த நோன்பின்,
> நவைஅற நோற்பல் நாளும் (4137)

என்கிறான். வில்லறம் துறந்ததற்கு வருந்துவதோடு அமையாமல், புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு தவம் செய்வேன் என்றும் கூறி உயர்ந்து நிற்கிறான். பொன் மானைப் பிடித்துத் தரச் சொல்லிப் பிடிவாதம் பிடித்த சீதையை மறுக்க முடியாமல் அவள் ஊடலைத் தணிக்க

மானைப் பின் தொடர்ந்து சென்ற பிழைக்கும் அவன் தன்னை நொந்து கொள்கிறான்.

> அங்கவர் திறத்தினாலே
> அல்லலும் பழியும் ஆதல்
> எங்களின் காண்டி அன்றே (4127)

என்று சுக்கிரீவனிடம் அவன் பேசும் சொற்களிலிருந்து இதனை அறிந்து கொள்ளலாம்.

இராமன் முழுக்க முழுக்க மனிதனாகவே நடந்து கொண்டான் என்பதைக் கம்பன் தன் காப்பியத்தின் இறுதியில் உணர்த்துகிறான். இராவண வதம் முடிந்தபின் தன் முன்னால் அழைத்து வரப்பட்ட சீதையை வரம்பிகந்த வசைச் சொற்களால் வாய்க்கு வந்தபடி ஏசுகிறான். மனம் புண்பட்டுத் துடித்த சீதை தீக்குளிக்கத் துணிந்து இலக்குவனை எரிமூட்ட வேண்டியபோது கண் சாடையால் இலக்குவன் எரிமூட்ட அனுமதி தருகிறான். நாடகத்திற்காக வேடம் தரித்துப் பாத்திரமாகவே மாறித் தான் யார் என்பதையே மறந்துவிட்ட நடிகனைப்போல் இராம வேடம் தரித்த திருமால், அவதார நோக்கமாகிய இராவண வதம் முடிந்தும், மையல் மானுடமாய் மயங்கித் தான் யார் என்பதையே மறந்து எல்லை மீறிச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்த தேவர்கள் பிரமனை நோக்கி,

> உணர்த்துவாய் உண்மை
> ஒழிவு இன்று, காலம் வந்துளதால்,
> புணர்த்தும் மாயையில்
> பொதுவுற நின்று, அவை உணரா
> இணர்த்துழாய்த் தொங்கல்
> இராமற்கு (10049)

என்று வேண்டுகின்றனர். பிரமனும்,

மன்னர் தொல்குலத்து
அவதரித்தனை; ஒரு மனிதன்
என்ன உன்னலை
உன்னைநீ; இராம! கேள்; இதனை;
சொன்ன நான்மறைத்
துணிவினில் துணிந்த மெய்த்துணிவு
நின் அலாது இலை;
நின்னின் வேறு உளது இலை, நெடியோய்! (10050)

என்று இராமனுக்கு அவன் யார் என்பதை உணர்த்து கிறான். இராவணனைக் கொல்ல வேண்டுமென்றால் திருமால் மனித வேடம் தரித்தால் மட்டும் போதாது; மனிதனாகவே நடக்க வேண்டும் என்பதுணர்ந்து, மனித இயற்கை மாயையில் மயங்கித் தவறிழைப்பது என்பதை யும் அறிந்து, இராமனை முழுதும் மனிதனாகவே இயக்கி, அவன் செய்த பிழைகளை மூடி மறைக்காது வெளிப் படுத்திய கம்பனின் நுண்ணறிவு வியக்கத்தக்கது.

மனித இயல்புக்கேற்ப இராமன் சில தவறுகள் புரிந் தாலும், பிறகு அத் தவறுகளை உணர்ந்து வருந்துகிறவ னாக இராமனை உருவாக்கிக் கம்பன் அப்பாத்திரத்தை ஒளிரச் செய்கிறான். ஓர் அரசியல் தலைவனாக உருவாகும் நிலையில் இத்தவறுகள் இராமனுக்கு எப்படி உதவின என்பதையும் கம்பன் விளக்குகிறான். சிறந்த மனிதன் செய்த தவறுணர்ந்து வருந்துவதோடு அமையாமல் அத் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்கிறான். இராமன் அத்தகைய சிறந்த மனிதனாக இருந்தான். அவன் செய்த ஒவ்வொரு பிழையிலிருந்தும் அவன் பாடம் படித்துக் கொண்டான். அனுபவம் கற்றுக் கொடுத்த இப் பாடத்தையே அரசனாகப் போகும் சுக்கிரீவனுக்கு அவன் போதிக்கிறான். 'சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்' என்றும் 'அங்கவர் திறத்தினாலே அல்லலும் பழியும் ஆதல் எங்களின் காண்டி'

என்றும் அவன் கூறுவன அவன் கற்ற அனுபவப் பாடங்களே. பதவி பெறுவதற்கு முன் இராமன் கற்றுக் கொண்ட இந்த அனுபவப் பாடங்களும் அவனை உயர்ந்த தலைவனாக ஆக்குகின்றன. 'நடையின் நின்றுயர் நாயகன்' என்ற தொடர் இந்த வகையிலும் பொருள் கொள்ளும்படி அமைந்திருக்கிறது. இராமன் சாதாரண மனித நடையில் நின்று, பாடங் கற்று அதனால் உயர்ந்த நாயகனாகிறான் என்பதும் இத்தொடரின் குறிப்பாகிறது.

இராமனின் பதினான்கு ஆண்டு வனவாசம் ஒரு சிறந்த அரசியல் தலைவனாக அவன் ஆவதற்கான பயிற்சிக் காலமாக அமைகிறது. அவன் ஓர் எளிய மனிதனின் இன்ப துன்பங்களைத் தானே அனுபவித்து அறிகிறான். மனிதன் எவ்வாறு, ஏன் தவறுகிறான் என்பதையும் அறிகிறான். அந்த அனுபவங்களிலிருந்து வசிட்டனாலும் போதிக்க முடியாத, போதித்திருந்தாலும் உணர்ந்தறிய முடியாத அரிய பாடங்களைக் கற்றுக் கொள்கிறான். இந்த அனுபவத் தகுதியே வசிட்டனிடம் மாணவனாக இருந்து அறிவுரை கேட்ட இராமனை, மற்றோர் அரசனாகிய சுக்கிரீவனுக்குப் பாடம் போதிக்கும் அரசியல் ஆசானாக உயர்த்துகிறது. ஒரு சிறந்த அரசியல் தலைவனாக விரும்புகிறவன் ஒரு சில ஆண்டுகளாவது அறத்திற்காகப் போராடி, பட்டறிவால் பாடம் பெற வேண்டும் என்பதையே இராமனின் வாயிலாகக் கம்பன் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

இயற்கை விதி

அரசியல் அறிஞர்களின் கோட்பாடுகளில் இயற்கை விதி (Law of Nature) ஒரு இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. ரிக் வேதமும் அதர்வ வேத சம்ஹிதைகளும் எல்லாம் வல்ல அண்ட அல்லது தெய்வீக விதி (ரித, வ்ரத, தாமன்)யையும், ஆற்றல் வாய்ந்த மரபையும் (தர்ம அல்லது தர்மன்) ஒன்றோடு ஒன்று தொடர்புடையன

வாகக் கூறுகின்றன. இயற்கை ஒரு குறிப்பிட்ட விதிக்கு இணங்க இயங்குகிறது. இந்த விதி இயற்கையின் ஒழுங்கான இயக்கத்திற்கும் பரிணாம வளர்ச்சிக்கும் உதவுகிறது. இந்த விதி குலைக்கப்பட்டால் உலகிற்குக் கேடு உண்டாகும். இயற்கையின் ஓர் உறுப்பான மனிதனும் இந்த இயற்கை விதிப்படியே நடக்க வேண்டிய வனாயிருக்கிறான். இந்த விதியை அவன் குலைத்தாலோ, மீறினாலோ அவன் பாதிக்கப்படுவதோடு, அவன் அங்கம் வகிக்கின்ற சமூகமும், இயற்கையும் பாதிக்கப்படும். ஒரு பெரிய இயந்திரத்தில் ஒரு சிறு உறுப்புப் பாதிக்கப் பட்டாலும் அதுஅந்த இயந்திரத்தின் முழுஇயக்கத்தையும் சீர்குலைத்துக் கேடு விளைவிப்பது போன்றது இது.

மனிதன் சமூக வாழ்க்கையை மேற்கொண்ட போது உண்டாக்கிக் கொண்ட ஒழுக்க விதிகளும் அரசு ஏற்படுத்திக் கொண்டபோது உண்டாக்கிக் கொண்ட சட்டங்களும் இயற்கை விதிக்கு இணங்க அமைந்தபோது மனிதன் முன்னேறினான். இவை இரண்டும் இயற்கை விதிக்கு மாறாக அமைந்தபோது அவன் கேடுற்றான் என்பதை வரலாறு உணர்த்துகிறது.

> **முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
> **ஒல்லாது வானம் பெயல்** (குறள். 559)

> **மாரி பொய்ப்பினும் வாரிகுன்றினும்**
> **இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்**
> **காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகல் ஞாலம்** (புறம். 35)

> **கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்**
> **கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்**
> (மணிமே.7. 8—9.)

என்ற கருத்துக்கள் அரசின் முறைகேடுகளால் இயற்கை யின் இயக்கமும் சீர்குலையும் என்பதை விளக்குவதோடு, இயற்கைக்கும், மனித அரசுக்கும் உள்ள நுண்ணிய தொடர்பையும் உணர்த்துகின்றன.

இயற்கை தன் ஒழுங்கில் சீர்குலைவு ஏற்படும்போது சீர்குலைவு ஏற்படுத்தும் தீய சக்திக்கு எதிராக ஒரு சக்தியை இயல்பாகவே உண்டாக்கிக் கொள்கிறது. இந்த எதிர்சக்தி தீய சக்தியை அடக்கி மீண்டும் இயற்கையில் அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்துகிறது. இயற்கை விதிகளில் இதுவும் ஒன்று. இறை நம்பிக்கை அற்றவர் இயற்கை விதி என்று கூறுவதையே இறை நம்பிக்கையாளர் இறைவனுடைய விதி என்பர். சொல்லும் முறையில் இருவரும் வேறுபட்டாலும் சொல்லப்படும் உண்மை ஒன்றே.

எப்பொழுதெல்லாம் அறம் அழிந்துபோய்
மறம் மேலெழுகிறதோ, அப்பொழுதெல்லாம்
என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன். (4.7)

நல்லாரைக் காப்பதற்கும் தீயாரை
ஒடுக்குவதற்கும், தர்மத்தை நிலைநாட்டு
வதற்காகவும் யுகந்தோறும் நான்
அவதரிக்கிறேன். (4.8)

என்று கீதையில் கண்ணன் இந்த உண்மையையே சமய மொழியில் கூறுகிறான். இயற்கையில் தீமைமிகும் போதெல்லாம் அதற்கு எதிரான சக்தி தோன்றி அதை ஒடுக்கிக் கொண்டே இருக்கிறது. அவதாரம் என்ற சமய மொழியின் உண்மையான பொருள் இதுதான். இயற்கையின் இந்த விதி தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது.

வடமொழியில் 'தருமம்' என்ற சொல்லும், தமிழில் 'அறம்' என்ற சொல்லும் இயற்கை விதியையும் உள்ளடக்கிய பரந்த பொருளை உடையன. தருமத்திற்கு எதிராக இருப்பவர்களைத் தருமமே அழித்துவிடும் என்ற கருத்தை வட நூல்களில் காணமுடிகிறது. தமிழ் நூலாரும் இக்கருத்தைக் கூறியுள்ளனர்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு. (குறள்.204)

என்று வள்ளுவரும்,

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்
(சிலப், பதிகம், 55.)

என்று இளங்கோவும் கூறுவதைக் காணலாம்.

கம்பனும் இதனைக் கூறுகிறான்.

நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார்
நடை அல்லா
வாரம் கொண்டார் மற்று ஒருவற்காய்
மனைவாழும்
தாரம் கொண்டார் என்ற இவர் தம்மைத்
தருமம்தான்
ஈரும் கண்டாய் கண்டகர் உய்ந்தார்
எவர் ஐயா? (3247)

அறத்திற்கு எதிராக நடந்த வாலியையும், இராவணனையும் இராமன் அறத்தின் வடிவமாக வந்து கொல்லுகிறான். கம்பன் இராமனை 'அறத்தின் மூர்த்தி' என்றே கூறுகிறான்.

இயற்கை விதிக்கும் மனித ஒழுக்கத்திற்கும் உள்ள நுண்மையான தொடர்பையும் கம்பன் உணர்த்துகிறான்.

மாதரார்
அற்பின் நின்றன அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன, கால மாரியே (90)

என்ற பாடலில் இதனைக் காணலாம்.

இமானுவேல் கான்ட் (Immanuel Kant) தம்முடைய அரசுக் கொள்கையை விளக்கும்போது இயற்கை விதியில் அடங்கியுள்ள நுட்பமானதொரு செயற்பாட்டை உணர்த்துகிறார். மனிதன் இயல்பாகவே சமூகத்தோடு இசைந்து வாழும் பண்பும், சமூக எதிர்ப்புப் பண்பும்

ஒருங்கே கொண்டவன் என்பது அவர் கொள்கை. சமூக எதிர்ப்புப் பண்பும் ஒருவகையில் நன்மைக்கே பயன்படுகிறது. இப்பண்பு இல்லையென்றால் மனிதனுடைய ஆற்றல்கள் வெளிப்பட வாய்ப்பில்லாமற் போய்விடும். இத்தகைய இரு வகையான முரண்பட்ட பண்புகளினால் விளையும் போராட்டமே மனித வாழ்வின் எல்லா வகையான முன்னேற்றங்களுக்கும் காரணமாக அமைகிறது என்று அவர் கூறுகிறார். பொறாமை, வீண் பெருமை, அதிகார வேட்கை, உடைமைப் பற்று போன்ற சமூக எதிர்ப்புப் பண்புகளை நன்மையைக் கருதியே இயற்கை அமைத்திருக்கிறது. இதனால் நிகழும் போராட்டத்தின் விளைவாக மனிதனின் உள்ளே அடங்கிக் கிடக்கும் ஆற்றல்கள் வெளிப்பட்டு அவனுடைய இயற்கைத் திறன்கள் மேலும் வளர்ச்சி அடைகின்றன என்பது அவர் கருத்து.*

இயற்கை விதி தொடர்பான இந்த நுட்பமான செயற்பாட்டைக் கான்ட்டுக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே கம்பன் அறிந்திருந்தான். சமூக எதிர்ப்பான தீய சக்திகளும் நன்மைக்காகவே தோன்றுகின்றன என்ற கருத்தைக் கம்பன் தன் காப்பியத்தில் பல இடங்களில் உணர்த்துகிறான்.

அமைதியான கோசலத்தில், தங்கள் அன்பிற்குரிய இராமன் அரசனாகப் போகிறான் என்ற மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அயோத்தியில் 'துன்னருங் கொடுமனக் கூனி' தோன்றுகிறாள். அக்கொடியவளை அறிமுகப்படுத்தும்போதே,

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள் (1445)

என்றே கம்பன் அவளை வருணிக்கிறான். இதன் வாயிலாக அக்கொடியவளும் இராவண வதம் என்ற ஒரு

* M.G. Gupta, Ibid., PP.246-47.

நன்மைக்காகவே தோன்றினாள் என்று கம்பன் உணர்த்துகிறான். கூனியின் தீய சொற்களைக் கேட்டுத் தூயவளாகிய கைகேயின் மனமும் மாறுகிறது. அவள் இவ்வாறு சிந்தை திரிந்ததும் ஒரு நன்மைக்கே என்று கம்பன் கூறுகிறான்.

தீய மந்தரை இவ்வுரை செப்பலும், தேவி
தூய சிந்தையும் திரிந்தது; சூழ்ச்சியின் இமையோர்
மாயையும், அவர் பெற்ற நல்வரம் உண்மையாலும்,
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும் (1483)

இராவணன் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறத் தேவர்கள் பெற்ற வரமும், அந்தணர் இயற்றிய அருந் தவமும்தான் கைகேயியின் தூய சிந்தை திரியக் காரணமானது என்று கம்பன் உணர்த்துவதை இங்கே காணலாம். 'இமையோர் மாயை' என்பதன் மூலம் இயற்கை விதியே இவ்வாறு அவளைத் தூண்டியது என்றும் தெரிவிக்கிறான். அடுத்த பாடலில்,

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்,
துரக்க, நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான் (1484)

என்று இதை விளக்கமாகவே அவன் உணர்த்துகிறான். அதே பாடலில்,

'இரக்கம் இன்மை அன்றோ இன்று இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே!

என்று கைகேயியின் இரக்கமின்மை என்ற தீயபண்பு விளைவித்த நன்மையையும் சுட்டிக்காட்டுகிறான்.

கூனி சூழ்ச்சி செய்யாவிட்டால், கைகேயி சிந்தை திரிந்து இரக்கமற்றவளாக மாறாவிட்டால் இராமன் காடு சென்றிருக்க மாட்டான். வனவாசம் காரணமாக வெளிப்பட்ட அவனது அளப்பரிய ஆற்றலும் உள்ளேயே அடங்கிக் கிடந்திருக்கும். இராவண வதமும் நிகழ்ந்திருக்காது. சீதையின் வியத்தகு கற்பின் ஆற்றலும் வெளி

உலகுக்குப் புலப்பட்டிருக்காது. பரதனின் மகோன்னத மான மாண்பு தெரியாமலே போயிருக்கும். கிட்கிந்தை யிலும், இலங்கையிலும் நல்லரசுகள் ஏற்பட வழியில் லாமல் போயிருக்கும். இலக்குவன், அனுமன் போன்றவர் களுடைய ஒப்பற்ற ஆற்றல்கள் வெளிப்படாது வீணாகி யிருக்கும். இராமன் ஓர் ஒப்பற்ற அரசியல் தலைவனாக உருவாக வாய்ப்பில்லாமற் போயிருக்கும் அவன் தலைமையில் அமைந்த ஒரு பேரரசும் உண்டாகி யிருக்காது. இவ்வளவு நன்மைகளும், கூனி, கைகேயி ஆகிய இரு தீய சக்திகளின் தோற்றத்தின் காரணமாகவே ஏற்பட்டன என்பதையே கம்பன் இங்கே காட்ட விரும்பு கிறான். நல்லவளாக இருந்த கைகேயியே தீயவளாக மாறினாள் என்று காட்டியதன் வாயிலாக, ஒரே இடத்தி லேயே இவ்விருவகை முரண்பட்ட பண்புகளும் அமைந் திருந்து, ஒரு பெரிய நன்மைக்காகத் தக்க நேரத்தில் தீய பண்பு செயற்படத் தொடங்கும் என்ற நுட்பத்தையும் கம்பன் உணர்த்துகிறான். ஒன்றற்கொன்று எதிரான இத்தகைய சக்திகளின் போராட்டமே ஒரு நல்லரசு தோன்றவும் காரணமாகிறது என்ற கம்பனின் கோட்பாட்டை இதனால் அறிய முடிகிறது.

இலட்சிய அரசு

எதிலும் உன்னதத்தையே நாடும் சிந்தனையாளர் களும், எதிலும் அழகைக் காண விரும்பும் கவிஞர்களும் தம் காலத்துச் சமூகத்தையும், அரசையும் அவற்றின் குறை களுக்காக வெறுத்துத் தம் கற்பனையில் தோன்றிய இலட்சிய சமூகம் பற்றியும். அரசு பற்றியும் பண்டைக் காலத்திலிருந்தே எழுதி வந்துள்ளனர். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசி ஏசாயா அமையப் போகும் ஓர் இலட்சிய அரசைப் பற்றி (**2.4; 11. 1-8,35; 41. 18-19; 65.17**) முன்னுணர்ந்து வருணித்திருக்கிறார். கிரேக்க அறிஞர் ப்ளேட்டோ (கி.மு. 4ஆம் நூற்.) தம்முடைய 'குடியரசு' என்ற நூலில் ஓர் இலட்சிய அரசு

பற்றிய கோட்பாட்டை முதன் முதலாக விவரித்துள்ளார். அவருக்குப்பின் அரிஸ்டாட்டில், இமானுவேல் கான்ட், ஹெகல், க்ரீன், பொஸாங்கெட் (Bosanquet), ப்ராட்லே ஆகியோர் இலட்சிய அரசு பற்றிய தத்தம் கோட்பாடு களை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்கள் ஆன்மீகத் தத்துவ அடிப்படையில் தங்களுடைய கோட்பாடுகளை அமைத்திருப்பதால் இந்த இலட்சியக் கோட்பாடு ஆன்மீகக் கோட்பாடு (Metaphysical Theory) என்றும், தத்துவக் கோட்பாடு (Philosophical Theory) என்றும் அழைக்கப்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சர் தாமஸ் மூர் (Sir Thomas More) என்பவர் 'உட்டோபியா' (Utopia) என்ற நூலில் அவர் கற்பனையில் கண்ட இலட்சியப் பொதுவுரிமை (Ideal Commonwealth) அரசு பற்றி எழுதினார். அன்றிலிருந்து 'உட்டோபியா' என்ற சொல் கற்பனையில் உருவான இலட்சிய அரசையும் சமூகத்தை யும் குறிப்பதாயிற்று. இந்த வகையில் ரபிலாய்ஸ் (Rabelais), காம்பனெல்லா (Campanella), பேக்கன் (Bacon), வால்ட்டேர் (Voltaire), சாமுவேல் பட்லர் (Samuel Butler), ஹெச். ஜி வெல்ஸ் (H. G. Wells) போன்ற இலக்கியர்களும் தம் இலட்சிய அரசுக் கற்பனை களைத் தங்களுடைய இலக்கியங்களில் வெளிப்படுத்தி யுள்ளனர்.

எதிலும் உன்னதத்தை நாடும் அரசியல் அறிஞனா கவும், அழகை நாடும் கவிஞனாகவும் திகழும் கம்பனும் அவன் கனவு கண்ட ஓர் இலட்சிய அரசு பற்றிய கருத்துக் களைத் தன் காப்பியத்தில் வெளிப்படுத்தியிருக்கிறான். இந்தக் கருத்துக்கள் பெரும்பாலும் நாட்டு, நகரப் படலங் களில் காணப்படுகின்றன. இப்படலங்களில் அவன் வருணிப்பது கோசலத்தை அல்ல என்பது முன்னரே காட்டப்பட்டது. கம்பன் உண்மையில் இப்படலங்களில் அவனுடைய கற்பனையில் உருவான ஓர் இலட்சிய சமூகத்தையே வருணிக்கிறான்.

சுதந்திரம்

ஓர் இலட்சிய சமூகத்திற்குச் சுதந்திரம் என்பது அடிப்படையான தேவையாகும். சுதந்திரமற்ற சமூகம் முன்னேற்றம் பெற முடியாது. சுதந்திரம் என்பதற்குப் பல்வேறு வகையாகப் பொருள் கூறப்பட்டாலும், மனிதனுடைய இயல்பான வளர்ச்சிக்குத் தடையாக எதுவும் இல்லாதிருத்தலே சுதந்திரம் என்று கொள்வதே பொருத்தமாகும். எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் மனிதர்களுக்கு அவர்கள் விருப்பம்போல் செய்ய அனுமதி அளித்தல் என்பது இதன் பொருள் அல்ல. தனிமனித வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தடையாக இருப்பதைக் கட்டுப்படுத்துவது ஓர் இலட்சிய அரசின் கடமையாகும். அதற்காக அரசு தேவையான சட்டங்களையும் செய்து கொள்கிறது. இது சுதந்திரத்தைப் பறிப்பதாகாது. சுதந்திரம் என்பது இலட்சியமல்ல; வழி. சமூக நலனே இலட்சியமாகும். எனவே சமூக நலனுக்காக ஒரு சில நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டால் தான் அனைவரும் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

சுதந்திரம் நேர்முகம், எதிர்மறை என்ற இரண்டு தன்மைகளைக் கொண்டது. குடிமகன் ஒவ்வொருவனுக்கும் அவனுடைய திறமைகளை வளர்ப்பதற்குத் தேவையான வாய்ப்புக்களை அளிப்பது சுதந்திரத்தின் நேர்முகத் தன்மையாகும். இது ஓர் இலட்சிய அரசின் கடமையாகும். மக்கள் சுதந்திரமாக வாழத் தடையாக இருக்கும் அச்சம், வறுமை போன்றவற்றை நீக்குதல் சுதந்திரத்தின் எதிர்மறைத் தன்மையாகும். இதுவும் ஓர் இலட்சிய அரசின் கடமையாகும்.

இயற்கைச் சுதந்திரம் (Natural Liberty), சீரியல் சுதந்திரம் (Civil Liberty), அரசியல் சுதந்திரம் (Political Liberty), தனிமனித சுதந்திரம் (Personal Liberty), பொருளாதாரச் சுதந்திரம் (Economic Liberty), தேசிய

சுதந்திரம் (National Liberty) என்று சுதந்திரம் பல வகைப்படும். கம்பனுடைய இலட்சிய அரசில் இந்தச் சுதந்திரங்களைக் காண முடிகிறது.

இயற்கைச் சுதந்திரம்

எந்தத் தடையுமின்றி ஒருவன் தான் விரும்புவதைச் செய்வதே இயற்கைச் சுதந்திரமாகும். அரசியல் அறிஞர்களில் பலர் இயற்கைச் சுதந்திரம் என்ற கருத்தை ஏற்பதில்லை. இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதன் மட்டுமே இத்தகைய இயற்கைச் சுதந்திரத்தை அனுபவித்திருக்க முடியும். சீரியல் சமூகம் ஏற்பட்ட பின் அவன் இயற்கைச் சுதந்திரத்தை இழந்து விடுகிறான் என்று அவர்கள் கூறுகின்றனர். இயற்கை நிலையில்கூட வலிமை படைத்தவனே இயற்கைச் சுதந்திரத்தை அனுபவித்திருக்க முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர். இயற்கைச் சுதந்திரம் தீமையையும் செய்ய ஒருவனுக்கு அனுமதி அளிக்கிறது என்ற காரணத்தினாலேயே அவர்கள் இதனை ஏற்பதில்லை. கம்பனோ இயற்கைச் சுதந்திரமுடைய ஒரு சமூகத்தையே கற்பனை செய்கிறான். அச் சமூகத்தில்

> **கூற்றம் இல்லை, ஓர் குற்றம் இலாமையால்;**
> **சீற்றம் இல்லை, தம் சிந்தையின் செம்மையால்;**
> **ஆற்றல் நல்லறம் அல்லது இலாமையால்**
> **ஏற்றம் அல்லது, இழித்தகவு இல்லையே (70)**
>
> **உண்மையில்லை பொய் உரை இலாமையால் (84)**

குற்றம்புரிபவரோ,கோபம் கொள்பவரோ,பொய்யுரைப்பவரோ யாரும் இல்லாத பொழுது, நல்லறத்தைத் தவிரச் செய்வதற்கு ஒன்றும் இல்லாத பொழுது அவர்கள் விரும்பியதைச் செய்யத் தடை என்ன இருக்கப் போகிறது? எனவே அவர்கள் தாம் விரும்பியதைச் செய்யும் இயற்கைச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். அங்கே வெள்ளத்தைத் தவிர வேறு எதுவும், யாரும் நெறி கடப்பதில்லை (71).

அங்கே கள்வர்கள் இல்லாததால் பொருட் காவலும் இல்லை (165). அச் சமூகத்தின் ஆடவர்கள் நற் பண்பையே அழகாகக் கருதினர். அவர்களிடம் பொய் இல்லாததால் அங்கே நீதி நிலைபெற்றிருந்தது. பெண் களின் அன்பினால் அறங்கள் நிலைபெற்றிருந்தன. அவர் களுடைய கற்பினால் பருவ மழையும் தவறாது பெய்தது.

பொற்பின் நின்றன பொலிவு; பொய்யிலா
நிற்பின் நின்றன நீதி; மாதரார்
அற்பின் நின்றன அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே **(90)**

'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' (புறம். 312) என்பர். அரசும் அதற்காகவே தோன்றியது. ஆனால் கம்பனுடைய இலட்சிய சமூகத்தின் மக்கள் நன்னடை நல்கும் வேந்தனின் அவசியமே இல்லாமல் இயல்பாகவே நன்னடை உடையவர்களாக இருக்கின்றனர். புறச் சட்டம் ஒன்றின் தேவையே இல்லாமல் தமக்குத் தாமே கட்டுப்பாடு செய்யவும் அவசியம் இல்லாமல் இயல்பாகவே நல்லவர்களாக இருக்கின்றனர். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் அமைந்து, வர்க்க பேதங்கள் ஒழிந்து விட்டால் அரசு தேவைப்படுவதில்லை. அது மெல்ல மறைந்து போகும் என்று கார்ல் மார்க்ஸ் கூறுவார். கம்பனோ அரசின் தேவையே அற்ற ஓர் இலட்சிய சமூகத்தைப் படைத்துக் காட்டுகிறான்.

சீரியல் சுதந்திரம்

சமூகத்தின் சட்ட வரம்புக்குள் நின்று மக்கள் தம் உரிமைகளை அனுபவிக்கும் நிலையே சீரியல் சுதந்திரம் எனப்படும். அச்சமின்றி உயிர் வாழும் உரிமை, சமத்துவ உரிமை, பேச்சுரிமை, மத வழிபாட்டு உரிமை, சொத்துரிமை முதலியன சீரியல் சுதந்திரம் தரும் உரிமை களாகும். அநீதியான சட்டங்களோ, பிற தடைகளோ

அற்ற நிலையே உண்மையில் சீரியல் சுதந்திரமாகும். இச் சுதந்திரம் மற்றசுதந்திர உரிமைகளுக்கு அடிப்படையானது.

கம்பனுடைய இலட்சிய நாட்டில் எல்லா உயிர்களும் எந்த அச்சமும் இன்றி அமைதியாக வாழ்கின்றன, அங்குள்ள சங்கு, எருமை, வண்டு, ஆமை, சிப்பி, அன்னம், மயில் ஆகியவை பிறரால் துன்புறுத்தப்படாமல் தாம் விரும்புவனவற்றைச் செய்கின்றன.

நீரிடை உறங்கும் சங்கம்;
நிழலிடை உறங்கும் மேதி;
தாரிடை உறங்கும் வண்டு;
தாமரை உறங்கும் செய்யாள்;
தூரிடை உறங்கும் ஆமை;
துறையிடை உறங்கும் இப்பி;
போரிடை உறங்கும் அன்னம்;
பொழிலிடை உறங்கும் தோகை (37)

அஃறிணை உயிர்களே இப்படி வாழும் என்றால் மக்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? அவர்கள் எந்த அச்சமும் அற்று 'ஊடியும் கூடியும், உயிரின் இன்னிசை பாடியும், ஆடியும், புனல் ஆடி மலர் சூடியும் பொழுது போக்குகின்றனர்' (158). எந்த அச்சமும் அற்றவர்க் கன்றோ இத்தகைய வாழ்க்கை வாய்க்கும். இந்நிலையில் பேச்சுரிமைக்குத் தடை ஏது? முடியாட்சியிலேயே மன்னனுக்கு எதிராகக் குரல் எழுப்ப மக்களுக்கு உரிமை அளித்தவனா தன் இலட்சிய நாட்டில் தடை விதிப்பான்?

கம்பனுடைய இலட்சிய நாட்டில் சமயங்கள் உண்டு; ஆனால் 'சமய கோடிகள் எலாம் எந்தெய்வம் தந்தெய்வம்' என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிட்டுப் பிணங்கும் நிலை இல்லை. ஏனெனில் அந்நாட்டு மக்கள்' பல்கேள்வி ஓங்கியவர்கள்' (84) அவர்கள் 'நாமுதற் படுவ மெய்யும், நாமநூற் பொருளும்'—எனவே அவர்கள் இறைவனை,

'தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப் பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருள்'ாக (30) அறிந்திருந்தனர்.

அரன் அதிகன்; உலகளந்த அரி அதிகன்
என்றுரைக்கும் அறிவிலோர்' (4470)

என்று சமயப் பிணக்குக் கொள்வோரைச் சாடும் கம்ப னுடையநாட்டில் சமயச் சண்டைக்குஇடமேது? அயோத்தி யில்நாத்திகர் இல்லை(1. 6. 32)என்று வான்மீகி குறிப்பிடு கிறார். கம்பன் இந்தக் குறிப்பைத் தவிர்ப்பதோடு,

நீ ஆதி பரம்பரமும் நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும் நின் அடியவே; அயல் இல்லை (2569)

என்று நாத்திகர் உட்பட அனைவர்க்கும் தன் நாட்டில் இடம் தருகிறான். அவரவர் கொள்கைப்படி சமயங் களைப் பின்பற்றவும், வழிபடவும் அவன் முழு உரிமை அளிக்கிறான்.

அவன் நாட்டில் 'மேவின வெஃகும்' அரசில்லை, கள்வரும் இல்லை; 'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி' (166) இருந்தனர். எனவே சொத்துரிமை பற்றிய கவலையே இல்லை.

அரசியல் சுதந்திரம்

அரசியல் செயல்களில் பங்கு பெறும் உரிமை அரசியல் சுதந்திரம் ஆகும். தயரதன் தவறு செய்தபோது கம்பன் மக்களைக் குறை கூற வைக்கிறான். அவன் ஆணையைப் புறக்கணித்து இராமனையே மன்னனாகத் தேர்ந்து அவனோடு நகர் நீங்க வைக்கிறான். சடையனின் மரபுளோர் மகுடம் எடுத்துத் தந்தனர் எனக் கூறி மக்களை இறைமையில் பங்குபெறச் செய்கிறான். இவை எல்லாம் அரசியல் செயல்களில் மக்கள் பெற வேண்டிய பங்கு பற்றிய கம்பனின் கருத்தையே புலப்படுத்துகின்றன.

தனிமனித சுதந்திரம்

அநீதியான தடைகளற்று மக்கள் தம் விருப்பம்போல் வாழும் உரிமையே தனிமனித சுதந்திரமாகும். இதுவரை கண்ட சுதந்திரங்களிலிருந்தே தனிமனித சுதந்திரத்திற்குக் கம்பனுடைய நாட்டில் எந்தவித ஆபத்தும் எழ வாய்ப்பில்லை என்பதை அறியலாம்.

பொருளாதாரச் சுதந்திரம்

சாதி, மத, இன வேறுபாடின்றி மக்கள் அனைவரும் தத்தமக்கு விருப்பமான தொழிலைச் செய்து பொருளீட்ட உரிமை அளிப்பது பொருளாதாரச் சுதந்திரமாகும். 'பூவலயம் இன்று தனி அன்று; பொது' (1592) என்று முழக்கமிட்ட கம்பன் நாட்டில் நாடே பொதுவுடைமையாக இருந்தது. அங்கே 'கலம் சுரக்கும் நிதியமும், கணக்கிலா நிலம் சுரக்கும் நிறை வளமும், பிலம் சுரக்கும் நல்மணியும் குடிக்கெல்லாம்' (69) உரிமையாயிருந்தன. அங்கே

> **எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே**
> **இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை (166)**

அதனால், 'வண்மை இல்லை; ஓர் வறுமை இன்மையால்' (84); 'கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை' (165). பொருளாதாரச் சுதந்திரம் அற்ற நாட்டில் இத்தகைய உயர்ந்த நிலையைக் காண முடியுமா? குறிப்பிட்ட சிலர்க்கே பொருளீட்டும் வாய்ப்பிருந்தால் எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்துவது எப்படி? கம்பனுடைய நாட்டில் மக்கள் அனைவரும் முழுப் பொருளாதாரச் சுதந்திரத்தை அனுபவித்தனர். அங்கே பொருளீட்டும் வாய்ப்பும், பொருளீட்டுவார் பொறுப்பும் எத்தகையன என்பதை,

கதிர்படு வயலின் உள்ள,
கடிகமழ் புனலின் உள்ள,
முதிர்பயன் மரத்தின் உள்ள,
முதிரைகள் புறவின் உள்ள,
பதிபடு கொடியின் உள்ள,
படிவளர் குழியின் உள்ள—
மதுவளம் மலரில் கொள்ளும்
வண்டு என—மள்ளர் கொள்வார் (52)

என்ற பாடலில் விளக்குகிறான் கம்பன், அந்நாட்டு மக்கள் வயலில், நீரில், மரத்தில், கொல்லையில், கொடியில், குழியில் விளையும் செல்வங்களை எல்லாம் எந்தத் தடையுமின்றிப் பெற்றனர். மலரிலிருந்து தேன் எடுக்கும் வண்டைப் போல் அவர்கள் இந்த இடங்களிலிருந்து செல்வங்களை எடுத்தனர். மலரிலிருந்து தேன் எடுக்க வண்டுக்குத் தடை உண்டா? அது விரும்பிய மலருக்குச் சென்று விரும்பிய அளவு தேனை எடுக்கிறதல்லவா? பிற வண்டுகளையும் அது தடுப்பதில்லையே? தேன் தரும் மலரையும் குலைத்து விடாமல் பொறுப்பாக, மென்மை யாக அல்லவா தேன் எடுக்கிறது? மக்களும் அப்படித்தான் பொருள் ஈட்டினர். அங்கே பெண்களும் ''பொருந்து செல்வம்' (67) பெற்றிருந்தனர் எனக் கம்பன் பெண் களுக்கும் அந்நாட்டிலிருக்கும் பொருளாதாரச் சுதந்திரத்தைப் புலப்படுத்துகிறான்.

தேசிய சுதந்திரம்

தேசிய சுதந்திரம் என்பது ஒரு நாடு அன்னிய ஆதிக்கம் இன்றி விடுதலை பெற்றிருப்பதைக் குறிக்கும். கம்பனுடைய நாடு 'யாரொடும் பகை கொள்ளாததால் போர் ஒடுங்கிய' (1419) நாடு. அங்கே 'திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்' (84). தேசிய சுதந்திரம் பெற்ற நாட்டில்தான் மக்கள் பிற சுதந்திரங்களை அனுபவிக்க முடியும். கம்பனுடைய நாட்டு மக்கள் பிற

சுதந்திரங்களை அனுபவித்தனர் எனில் அங்கே தேசிய சுதந்திரம் இருந்தது என்றுதானே பொருள்.

சமத்துவம்

சுதந்திரம் போலவே சமத்துவமும் ஓர் இலட்சிய சமூகத்தின் இன்றியமையாத இலக்கணமாகும். சுதந்திர மற்ற சமூகம் சமத்துவத்தை அடைய முடியாது. சமத்துவம் அற்ற சமூகத்தில் சுதந்திரம் நிலைக்காது. இவை ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி பிணைந்தவை ஆகும்.

சமத்துவம் என்பது மனிதர்களால் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட வேறுபாடுகள் இல்லாத நிலையைக் குறிக்கும். சமத்துவத்திற்கும் நேர்முகத் தன்மையும் எதிர்மறைத் தன்மையும் உண்டு. எல்லோர்க்கும் தேவை யான அளவுக்கு வாய்ப்புகள் அளிக்கப்படுவது சமத்துவத்தின் நேர்முகத் தன்மையாகும். நாட்டின் செல்வம் ஒரு சிலருடைய உடைமை ஆகிவிடாமல் எல்லோர்க்கும் நியாயமான முறையில் பங்கிடப்படுவதே உண்மையான சமத்துவமாகும். பால், செல்வம், சாதி, மதம், பிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படுத்தப் படும் வேறுபாடுகளை நீக்குவது சமத்துவத்தின் எதிர்மறைத் தன்மையாகும். எவருக்கும் தனிப்பட்ட சலுகை அளிக்காமல் எல்லோருக்கும் வேறுபாடு காட்டாமல் உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்பதே இதன் பொருள்.

சமத்துவமும் சீரியல் சமத்துவம் (Civil Equality), சமூகச் சமத்துவம் (Social Equality), அரசியல் சமத்துவம் (Political Equality), பொருளாதாரச் சமத்துவம் (Economic Equality), கல்வி, வாய்ப்புச் சமத்துவம் (Equality of Opportunity and Education) என்று பலவகைப்படும்.

சீரியல் சமத்துவம்

மக்கள் அனைவருக்கும் சீரியல் உரிமைகளை அளிப்பதே சீரியல் சமத்துவம் எனப்படும். தன் இலட்சிய நாட்டில் எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தி இருந்தனர் என்றும் எல்லோரும் கல்வி கற்றிருந்தனர் என்றும் கம்பன் கூறுகிறான். வேறுபாடற்ற முறையில் எல்லோர்க்கும் சீரியல் உரிமைகள் வழங்கப்படும் நாட்டில்தான் இந்நிலை ஏற்படும்.

சமூகச் சமத்துவம்

பால், செல்வம், சாதி, மதம், இனம், பிறப்பு இவற்றின் அடிப்படையில் சமூகத்தில் வேறுபாடு காட்டாது அனைவருக்கும் சம அந்தஸ்து தரப்படுவதே சமூகச் சமத்துவம் ஆகும்.

'இமையோரோடும் வருணங்கள் வகுத்திட்ட காலத்தே வந்துதித்தேன்' (2714) என்று சடாயுவின் வாய்மொழியாக இந் நாட்டில் இருந்து வந்த கொள்கையைக் கம்பன் குறிப்பிடுகிறான். ஆனால் இக்கருத்தில் கம்பனுக்கு உடன்பாடில்லை. அயோத்தி மக்களை வருணிக்கும்போது அங்கே வருணங்களும் அதற்கேற்ற ஒழுக்கங்களும் இருந்ததாக வான்மீகி கூறுகிறார் (1.5.65—75). கம்பன் நாட்டு, நகரப் படலத்தில் இக்குறிப்பைத் தவிர்க்கிறான். வடநூல்கள் பிராமணர்க்குத் தனிச் சலுகையும், மேன்மையும் அளிக்கப்பட வேண்டும்; சட்டங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படவேண்டும் என்று கூறும் கருத்தையும் கம்பனில் காண முடியவில்லை. மேலும் கம்பன் இராமன் வாயிலாக உணர்த்தும் சமத்துவமும் இங்கே கருதத் தக்கது. அவன் தன்னினும் தாழ்ந்தவராகக் கருதப்பட்ட குகனையும், சுக்கிரீவனையும், வீடணனையும் உடன் பிறந்தவர்களாகக் கருதி உறவு பாராட்டுகிறான். வான்மீகத்தில் சுக்கிரீவனை மட்டுமே இராமன் சகோதரனாக ஏற்றான் என்று காணப்படுகிறது.

குகனையும் வீடணனையும் அவ்வாறு ஏற்கவில்லை என்பதையும் இங்கே ஒப்பிட்டு நோக்கலாம்.

கம்பனின் இலட்சிய நாட்டின் உயர்ந்த நிலையே அங்கே எவருக்கும் தனிப்பட்ட சலுகை காட்டப்பட வில்லை; எல்லோரும் சமமாக மதிக்கப்பட்டனர் என்பதை உணர்த்துகிறது. அவனுடைய நாட்டில் 'சிறிய மங்கையர் தேயும் மருங்குலே' (71) என்று கூறுவதன் மூலம் சாதி, இனம், பால், செல்வம், பிறப்பு இவற்றின் அடிப்படையில் சிறியர் என்று இகழப்படும் நிலை அங்கு யாருக்கும் இல்லை என்பதையும் கம்பன் சுட்டிக் காட்டுகிறான். எந்த வகையிலும் ஏற்றத் தாழ்வற்றதொரு சமூகத்தையே தன் இலட்சிய சமூகமாகக் கம்பன் காட்டுகிறான்.

அரசியல் சமத்துவம்

கம்பன் மக்களுக்கு அளிக்கும் முதன்மையும், இறைமையும் பற்றி முன்னரே கண்டோம். அரசியல் சுதந்திரம் பெற்றவர்களாக அவர்கள் இருந்தார்கள் என்பதும் காட்டப்பட்டது. வான்மீகியில் இராமன் பட்டாபிஷேகத்தில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் பங்கு கொண்டதாகக் காணப்படுகிறது. வேளாளர் கலந்து கொண்டதாகக் குறிப்பில்லை. கம்பன் இதே நிகழ்ச்சியில், வேளாளர் குலத்தைச் சார்ந்த சடையன் மரபிலுள்ளோர் மகுடம் எடுத்துக் கொடுத்ததாகக் கூறுவதை முன்னரே கண்டோம். வான்மீகியோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கம்பன் மக்களுக்கு அளித்த அரசியல் சமத்துவத்தின் உயர்வை அறியலாம்.

பொருளாதாரச் சமத்துவம்

பொருளாதாரச் சுதந்திரம் என்ற தலைப்பில் விளக்கப்பட்ட கருத்துக்களிலிருந்து கம்பன் தன் இலட்சிய நாட்டில் மக்கள் அனைவருக்கும் எத்தகைய

பொருளாதாரச் சமத்துவத்தை அளித்திருக்கிறான் என்பதை அறியலாம். அங்கே பெண்களும் 'பொருந்து செல்வம்' 'பெற்றிருந்தனர் என்பதொன்றே அந்நாட்டின் பொருளாதாரச் சமத்துவத்தை உணர்த்தப் போதுமானதாகும்.

கல்வி, வாய்ப்புச் சமத்துவம்

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற பழமொழி வழங்கும் நாட்டில் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே,

> **பெருந் தடங்கண் பிறைநுதலார்க்கு எலாம்**
> **பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்**
> **வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்**
> **வருந்தும் அன்றி விளைவன யாவையே? (67)**

என்று கம்பன் பாடுகிறான் என்றால் அது சாதாரணப் புரட்சி அல்ல. அதிலும் பெண்கள் அவர்களுடைய இயல்புக்குப் பொருந்திய கல்வியைக் கற்றனர் என்ற கருத்து இத்த நவீன காலத்திலும் சரியாகப் புரிந்து கொள்ளப் படாத உயர்ந்த கல்விக் கோட்பாடாகும். கம்பனுடைய இலட்சிய நாட்டில் பெண்களே கல்வி கற்றிருந்தனர் எனில் ஆடவர்களைப் பற்றிக் கூற வேண்டுமோ? அங்கே 'வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்' (84)

> **கல்லாது நிற்பார் பிறர் இன்மையின்**
> **கல்வி முற்ற**
> **வல்லாரும் இல்லை; அவை வல்லர்**
> **அல்லாரும் இல்லை (166)**

அங்கே கல்வி என்ற விதையிலிருந்து முளைத்த மரத்தில் கேள்விகள் என்ற கிளைகள் பிரிந்து, தவம் என்ற இலைகள் விரிந்து அன்பாகிய அரும்பு தோன்றி, தருமம் மலர்ந்து இன்பம் என்ற கனி பழுத்தது.

ஏகம் முதல் கல்வி முளைத்து
எழுந்து, எண்ணில் கேள்வி
ஆகும் முதல் திண்பணை
போக்கி, அருந் தவத்தின்
சாகம் தழைத்து, அன்பு
அரும்பி, தருமம் மலர்ந்து,
போகங் கனி ஒன்று பழுத்தது (167)

முடிவுரை

கம்பனுடைய அரசியல் கோட்பாடுகள் அவன் அரசியல் பற்றித் தீவிரமாகவும் ஆழமாகவும் சிந்தித்திருக்கிறான் என்பதைக் காட்டுகின்றன. முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்தவனாயினும் அதை விரும்பாதவனாகவே அவன் காணப்படுகிறான். முடியாட்சியின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதோடு நிற்காமல் அவற்றை நீக்கும் வழியையும் அவன் காட்டுகிறான். அவன் நல்லரசாகக் காட்டும் கலப்பு வடிவ அரசாங்கத்தில் குடியாட்சிப் பண்பே மேலோங்கி நிற்கிறது. அவன் மக்களுக்குத் தரும் உரிமையும், இறைமையும், முதன்மையும் அவன் வாழ்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கும்போது மிகவும் புதுமையானவை, வியப்புக்குரியவை. ஒரு நல்லரசு பற்றி மட்டும் அல்லாது அதற்கும் அப்பால் ஓர் இலட்சிய அரசு பற்றியும் அவன் சிந்தித்திருக்கிறான். அந்த அரசில் நாடும் அதன் செல்வங்களும் பொதுவுடைமையாயிருக்கும்; அங்கே எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தி இருப்பார்கள்;அதனால் அங்கே இல்லார் உடையார் என்ற ஏற்றத்தாழ்வு இருக்காது. பெண்களும் பொருளாதாரச் சுதந்திரமும் கல்வியறிவும் பெற்றிருப்பார்கள். அங்கே சமயச் சண்டைகளுக்கு இடமில்லை. பிறப்பால் தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்று பேசும் பேதைமை இருக்காது. யாரும் யாரோடும் பகை கொள்ளமாட்டார்கள்; எனவே அச்சமூகத்தில் போரே இருக்காது என்று அவன் கூறும் கருத்துக்கள் அவன் காலத்தில் யாரும் சிந்திக்காதவை;

புதுமையும் புரட்சியும் வாய்ந்தவை. அவன் காலத்துப் பிற்போக்கான கருத்துக்களை எல்லாம் அவன் அஞ்சாது எதிர்த்திருக்கிறான். பல்வேறு அறிவுத் துறைகள் பெருகி வளர்ந்த வாய்ப்பினால் மேனாட்டு அறிஞர்கள் கண்டறிந்த பல அரிய உண்மைகளைக் கம்பன் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே அறிந்து கூறியிருப்பது வியப்பை அளிக்கிறது. கார்ல் மார்க்ஸின் புரட்சிகரமான தத்துவத்தில் காணப் படும் பொதுவுடைமை, அரசற்ற சமூகம் போன்ற கருத்துக்களின் மூல வடிவத்தை ஒன்பதாம் நூற்றாண்டிலேயே அவன் அளித்திருப்பது அவனது மேதைமையைக் காட்டுகிறது. கம்பன் கவிதையால் மட்டுமல்லாமல் அவனது அரசியல் கோட்பாட்டினாலும் தமிழ்க் கவிஞர்களுள் தனித்தன்மை வாய்ந்தவனாகவே திகழ்கிறான்.

□□□



டாக்டர்

எஸ். அப்துல் ரகுமான்

நன்ருன தமிழுக்கு வாய்த்த நறும்பேரும்
குன்ருத சிறப்புடை 'கவிக்கோ'
அப்துல் ரகுமான்;
வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியின்
வண்டமிழ்த் துறைத் தலைவர்;
தண்டமிழ் ஆசானுய்,
முப்பதாண்டுக் காலம் முழங்கி வருபவர்;
தமிழ்பால் கொண்ட தணியாக் காதலால்
இளங்கலையில் 'போப்' பதக்கமும்
முதுகலையில் முதல் வகுப்பும்
'புதுக் கவிதையில் குறியீடுகள்' என்னும்
முத்தான ஆய்வுக்காய் முனைவர் பட்டமும்
பெற்றவர்;

'பால்வீதி'யில் சுருதிகூட்டி,
'நேயர் விருப்ப'த்தில் ஆரோகணித்து,
கவித்துவச் 'சுட்டுவிரலி'ல் மெட்டெடுத்து
எட்டுத்திக்கும் எட்டியொலிக்கும்
கட்டிக் கரும்புக் கவிதைகள் கொடுத்தவர்;
ஓவிய வரிகளில்
காவிய மாலைகள் தொடுத்தவர்;

இஸ்லாம் தந்த இந்த இனிய நிலா
பல நட்சத்திரங்களைச்
சூரியன்களாக்கியுள்ளது.
ஆம்!
இலக்கியவானில் சுடர்விடும்
இளையவர்களை,

இளந்தாரகைகளைக்
கவிச்சூரியன்கள் ஆக்குவதில்
கவிக்கோவிற்கு நேயம் அதிகம்.
இந்தியச் சிறப்பினை முந்திக் கொடுத்த
இக்பாலின்
இன்னருங் கவிகளில்
இவரின் ஈடுபாடும் அளவிலாதது.

கவிதைகளை
ஆக்குவதில் மட்டுமின்றி
அலசி ஆய்வதும்
இவரின் எழுதுகோலுக்குப் பழக்கந்தான்;-
கன்னடமும், களிதெலுங்கும்,
கவின்மலையாளமும்
கொண்ட தனிக் கவிதைகளை,
சீரிளம்தமிழில் சிறப்புற மாற்றி
நேராய்க் கொடுக்கும் நளினமும் இவர்
வழக்கந்தான்!
எண்ணற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளின்
சொந்தக்காரரான இந்த சந்தக்காரர்,
தஞ்சைத்தமிழ்ப் பல்கலையின் 'தமிழன்னை'
விருதும்,
தமிழக அரசின் 'பாரதிதாசன்' பரிசும்
பெற்றவர்.

"கவிக்கோ அன்றியும்
வேறொரு கவிக்கோ எம் செவிகள்?"
என்னும் சுவைஞர் குழாத்தின் சுந்தரச்
சார்போடு
'கவியரசர்', 'கவிநாயகம்',
'உருவகச் சூரியன்', 'தமிழ்ஞாயிறு'
என்னும்
நேர்த்திமிகு கீர்த்திகள் இவரின்
சீர்த்தி யாவும் செப்பிடும்.

உமறுவின் சீருவில்
குணங்குடியாரின் கொள்கைகளில்
மனம் பறிகொடுத்த
இந்த ரகுமான்
ரகு மானின் பின்னே போன
காவியத்திலும்
உள்ளம் கொள்ளை கொடுத்தவர்.

வாணியம்பாடியின் இந்த வண்ணக்குயில்
கவிதாலாபனையில் ஒரு கதன குதூகலம்;
சொற்களின் ஸ்வரப், பிரஸ்தாரங்களில்
ஒரு சுநாத விநோதினி;

நற்பொருட் பல்லவியில்
மனத்துக்கினிய மோகனம்;
நிறைசுவை சரணங்களில்
சிந்தைக்கினிய சிந்துபைரவி.
மொத்தத்தில் இவர் ஒரு
தனி ஆவர்த்தனம் - புது ஆவர்த்தனம்!